உண்மையைத் தேடும் எழுத்தைவிட உயர்ந்த இலக்கியம் இல்லை.

# ஞானரதம்

— புதுமை இலக்கிய மாத இதழ் —

MADRAS

ஆசிரியர்: ஜெயகாந்தன்

நிர்வாக ஆசிரியர்: தேவ. சித்ரபாரதி

5
1970



## இந்த இதழில்


வெ. சாமிநாதன்
ந. சிதம்பர சுப்ரமணியன்
ந. கிருஷ்ணமூர்த்தி
ந. முத்துசாமி
மாசேதுங்
பரந்தாமன்
ஞானக்கூத்தன்
சந்திரமௌலி
சித்ர
கி. அ. சச்சிதானந்தம்
எஸ். வைதீஸ்வரன்
க. நா. சு.
பாக்ஸர்
வையவன்
ஜெயகாந்தன்



ஆசிரியர் குழு:
ந. முத்துசாமி
ஒய். ஆர். கே. சர்மா
ஜியாவுடீன்
வையவன்
ஞானக்கூத்தன்


விலை 50 பைசா

கதை கட்டுரைகளை, நிர்வாக ஆசிரியர், சக்தி இல்லம், சென்னை-36. என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்,

# வரவு—செலவு—இருப்பு

வாழ்வதன் முன்னம்நான் செத்திருந்தேன்
    செத்ததன் பின்னாலும் வாழ்ந்திருப்பேன்

சோர்வுக்கு முன்னால்நான் சுகித்திருந்தேன்
    சோர்வுக்குப் பின்னாலும் சுகித்திருப்பேன்

வித்துக்கு முன்னால்நான் விளைந்திருந்தேன்
    விளைவுக்குப் பின்னாலும் வித்தாவேன்

முடிவுக்கு முன்னால்நான் முதலானேன்
    முடிந்தாலும் முடிவுக்கோர் முதலாவேன்

அசைவுக்கு முன்னால்நான் அணுவானேன்
    அணுபிளந் தாலும்பிளவுக்குள் அசைவாவேன்.

ஜெயகாந்தன்

# முன்னோட்டம்

இது எங்கள் ஐந்தாவது இதழ். இந்த ஐந்து இதழ்களோடும் தொடர்ந்து ஆழ்ந்த பரிச்சயம் கொண்டவர்கள் ஞானரதம் பிரதிநிதித்துவம் கொள்கின்ற போக்கினைப் பொதுப்படையாக உணர்ந்து கொண்டிருப்பார்கள். அவர்களில் பெரும்பான்மையானோர் ஒரு சில விஷயங்களில் மாறான, அல்லது வேறான கருத்துக்கள் கொண்டிருந்த போதிலும், அடிப்படையில் நம்மோடு உடன்பாடு காண்கிறார்கள். இது நம்பிக்கை தருகிற விஷயம்.

ஞானரதத்தில் வெளியாகின்ற எல்லா விஷயங்களும் இலக்கியம் என்கிற தரத்தில் உச்சாணிக் கொம்பில் கொடிகட்டிப் பறப்பதாக நாங்கள் யாரும் மார்தட்டிக் கொள்ளவில்லை. ஆனால் அது இன்றைய இலக்கிய உலகில் மிகவும் அவசியமான, எல்லாத் தரத்தாரின் நடுவேயும் ஊடாய் ஓடுகின்ற ஓர் இணைப்புச் சரட்டினை அறிவு பூர்வமாகவும் இலக்கிய பூர்வமாகவும் உருவாக்கும் ஒரு

தன்மையைப் பெற்றிருக்கிறது என்பதை மட்டும் நாங்கள் உணர்கிறோம்.

தந்தக் கோபுரத்தில் தனிவீடு கட்டிக் கொள்ளாமல், நடைமுறை சாத்தியம் கருதி தனது தரத்தைக் கொஞ்சம் விட்டுக்கூட இந்த இணைப்புக்காக அது செயல் திறனோடு இறங்கி வரத் தயாராக இருக்கிறது. அப்படி இறங்கி வருவதன் மூலம் இழிந்து விடமாட்டோம் என்கிற தைரியமும் அதற்கு இருக்கிறது.

ஞானரதத்தின் நோக்கம் இதுதானா?

நமக்குத் தெரியவில்லை. ஆனால் இப்போது இது ஒரு உண்மை.

நான் ஒரு முன்னோட்டத்தில் இதற்கு முன்னால் எழுதியிருக்கிறேன். ஞானரதத்தின் ஒவ்வொரு இதழும் ஒன்றிலிருந்து ஒன்று முற்றாக மாறுபட்ட Variety ஐத் தருவதாக அமையும்–அல்லது அமைய வேண்டும் என்று.

ஆனால் வந்திருக்கும் இந்த ஐந்து இதழ்களையும் பார்க்கும் போது, அப்படிப்பட்ட Variety ஐ என்னால் பார்க்க முடியவில்லை. எனினும் இந்த ஐந்து இதழ்களையுமே ஒரு Variety என்று கொள்ளலாம்.

எனவே அடுத்த இதழிலிருந்து ஒரு புதிய முறையைக் கைக்கொள்வது என்று நாங்கள் தீர்மானித்துள்ளோம்.

அதாவது, இனி வரவிருக்கும் ஞானரதத்தை ஆசிரியர் குழுவைச் சேர்ந்த நண்பர்கள் அல்லது ஆசிரியர் குழுவினால் சிபாரிசு செய்யப்படும் நண்பர்கள் யாராவது ஒருவர் ஒவ்வொரு இதழுக்கும் சுயேச்சையாக முழுப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டு தாங்கள் விரும்புகிற வண்ணமாய் ஒவ்வொரு இதழையும் உருவாக்குவார்கள்.

ஒவ்வொரு இதழும் ஒரு படைப்பாளியின் முழு சுதந்திரத்தோடு உருவாக்கப்படும். ஒரு பத்திரிகையே படைப்பாக வருவது சிறப்பாகவே இருக்

கும். அதாவது ஒரு பத்திரிகைத் தயாரிப்பு என்ற வகையில், அந்த இதழே ஒரு படைப்பாக இருக்கும்.

ஞானரதத்தின் வருகிற ஆருவது இதழை ஆசிரியர் குழுவைச் சேர்ந்த நண்பர் முத்துசாமி படைத்து அளிக்க இருக்கிருர். அதற்கு அடுத்த இதழை யார் தயாரிக்கிருர்கள் என்பது ஆருவது இதழில் அறிவிக்கப்படும்,

இது முற்றிலும் புதிய முயற்சி. இது சிறப்பாக அமையும் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

இந்த இதழ் கால தாமதமாக வருவது பற்றி பல நண்பர்கள் என்னிடம் ஆயாசப்பட்டுக் கொள்கிருர்கள். இந்த ஆயாசத்துக்கு அர்த்தம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இதிலே இருக்கும் ஆர்வத்தை நான் புரிந்து கொண்டு பாராட்டுகிறேன்.

இதுமாதிரி நிலைமைகள் ஏற்படும் என்று எனக்கு முன்னுலேயே தெரியும். அதனுல்தான் பத்திரிகையில் மாதம், தேதி எதுவும் போட வேண்டாம் என்று நான் சொன்னேன். அந்தந்தத் தேதியோடு படித்து முடித்து எறிந்துவிடுகிற செய்தித்தாள் அல்ல இது. அந்தந்த மாதத்தோடு போய்விடுகிற பஞ்சாங்கமும் அல்ல இது.

இதுதான் எங்கள் கடைசி இதழ் என்று நாங்கள் அறிவிக்கிற வரைக்கும் ஞானரதம் வந்து கொண்டிருக்கும். கூடுமான வரைக்கும்ஒரு வருஷத்தில் பன்னிரண்டு இதழ்களைக் கொண்டு வந்து விடுவது என்கிற குறிக்கோளில் நாங்கள் பிறழ மாட்டோம் என்று நம்புகிறேன். ஆகவே காலதாமதமாக ஞானரதம் வருவது குறித்து நண்பர்கள் சலிப்படைய வேண்டாம் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

உரத்த சிந்தனை பகுதிக்கு ஒரு கேள்வி வந்தது. அந்தக் கேள்விக்கு நான் யோசித்த பதில் மிக

நீளமாகவும், மிக முக்கியமானதாகவும் இருந்த படியினால், இங்கே முன்னேட்டத்தில் அதைப் பற்றி எழுதுகிறேன்.

முன்னேட்டத்தில் இலக்கிய உலகம் பற்றி, நமது கல்வியின் நிலைபற்றி, பெட்ரண்ட் ரஸ்ஸலைப் பற்றி, கதை எழுதுகிற இலக்கணம் பற்றி எல்லாம் எழுத லாம் என்றால் இதுபற்றியும் நிச்சயமாக எழுத லாம் என்கிற தீர்மானத்தில் எழுதுகிறேன்.

முன்னேட்டத்தில் எதுபற்றியும் எழுதுவேன். உரத்த சிந்தனைக்கு வந்த கேள்வி :—

கம்யூனிஸ்டுகள் இந்தியா முழுவதும் தற்போது ஆரம்பித்துள்ள நிலப்பறி இயக்கத்தினால் நமது சமுதாயத்தின் கட்டுப்பாடுகளும் ஒழுக்கமும் குலைந்து போய்விடாதா ?

இந்தக்கேள்வியை அரசியல் சம்பந்தப்பட்டதாக நான் கருதவில்லை. இது முழுக்க முழுக்க சமுதாய தர்மம் சம்பந்தப்பட்ட கேள்வி.

முதலில் இந்த இயக்கத்தை 'நிலப்பறி இயக்கம்' என்று கூறுவதே ஒரு நேர்மையற்ற வாதம் என்று நான் கருதுகிறேன்.

நிலப்பறி என்பது நீண்ட காலத்துக்கு முன் னலே நடந்து முடிந்து விட்ட ஓர் இயக்கமாகும்.

இந்தியாவின் கிராமப் பொருளாதாரம் என்று நொறுக்கப் பட்டதோ, அதற்கு அடிப்படையான கூட்டு வாழ்க்கை நாகரீகம் என்று அகற்றப் பட் டதோ, அந்நிய ஏகாதிபத்தியம் இந்தியச் சமுதாய வாழ்க்கையில் தலையிட்டுத் தங்களுக்கு ஆதரவாக இருந்தவர்களுக்கு ஜாகீர்கள் என்றும் ஜமீன்கள் என்றும் மிராசுகள் என்றும் எப்போது இந்த நாட்டின் நிலங்களைப் பட்டாப் போட்டுக் கொடுத் ததோ அப்போதுதான் இந்தியாவில் நிலப்பறி இயக்கம் என்பது உச்ச கட்டத்தில் இருந்திருக் கிறது.

ஒரு தனிமனிதன் அல்லது அவனது வம்சம்

எப்படி ஒரு பரந்த நிலப்பரப்புக்கு அதிபதியானது என்கிற வரலாற்றை நாம் புரட்டிப் பார்ப்போமானால், உலகத்தில் நடந்த கொள்ளைகளில் எல்லாம் பெரிய கொள்ளையாக அது நடந்து முடிந்திருக்கிறது என்று நாம் அறிய முடியும்.

இந்த மண்ணில் நாம் பிறந்தோமேயொழிய இந்த மண்ணின் மீது உரிமை பாராட்ட இதனை நாம் படைத்தோமில்லை.

மண்ணைப் பண்படுத்திய செயல் ஒரு தனிமனிதனால் நடந்தது அல்ல. அது கூட்டு வாழ்க்கையினால் மனித சமுதாயத்தின் பலகோடிக் கரங்களின் உழைப்பால் நடந்திருக்கிறது.

ஆதிக்கம் என்பது நிலத்தின்மீது என்று தொடங்கப் பட்டதோ அன்றிலிருந்து அந்த உடமையைப் பாதுகாக்கத்தான் எத்தனையோ சமூகக் கொடுமைகளும் எழுந்திருக்கின்றன.

பிறப்பினால் உயர்வு தாழ்வு கற்பிக்கப்பட்டது இதற்குப் பின்னால்தான்.

சகலமானவற்றையும் உருவாக்கி ஊருக்குக் கொடுத்துவிட்டு, ஊருக்கு வெளியே மிருகங்களைப் போல ஒதுங்கி வாழ வேண்டும் என்று அவற்றையெல்லாம் உருவாக்கியவர்களை ஒதுக்கி வைக்கின்ற ஒரு நியாயம் பிறந்தது இந்தப் பிரபுத்துவ சமுதாயத்தில்தான்.

இந்தப் பண்ணை அடிமைகளின் மீது கருணை பொழிந்ததும், இவர்களை உயர்த்திப் பேசியதும், ‘இவர்களே வாழ்கிறவர்கள் மற்றவர்கள் எல்லாம் இவர்களின் பின்னால் போகிறவர்கள்’ என்று எழுதி வைத்ததும் இந்த அநீதியின் மேல் எழுந்த மன உறுத்தலினால்தான். அதனை மனனம் பண்ணிக் கொண்டிருப்பதும் அந்த சமுதாய மனச்சாட்சி உறுத்தலின் பேரால்தான்.

ஆனாலும் இந்த அநீதியான அஸ்திவாரத்தில் எழுப்பப்பட்டிருக்கிற இந்த நிலப்பிரபுத்துவச்சமு

தாயத்தின் மேல் மட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒவ்வொருவருக்கும் இந்த நிலமற்ற, உடமையற்ற உழைப்புக் கூலிகளைப் பற்றிய அச்சம் தொன்று தொட்டு இருந்து கொண்டிருக்கிறது. அவன் எழ முடியாத அளவுக்கு அவன் மீது தனது ஆதிக்கத்துக்குச் சாதகமான எத்தனையோ விதமான பயத்தையும் நம்பிக்கையையும், நெறியையும், ஒழுக்கத்தையும், இலக்கியத்தையும் தத்துவத்தையும், சட்டங்களையும் தர்மங்களையும் சுமத்துகிற அளவுக்கு சமுதாய வாழ்க்கையில் அவனுக்கு 'மூளைச் சலவை'களும் நடந்தவாறு தான் இருக்கின்றது.

இந்திய நாட்டின் சுதந்திரமும் பொருளாதாரப் பெருக்கமும், உலக நாகரீக வெளிச்சமும் இந்த உழவர் பெருமக்களை நேரடியாக இன்னும் பரிச்சயம் கொள்ளவில்லை.

அவர்களுடைய தேவையும் வறுமையும், மேல் சமூகத்தினருடைய சொகுசான வாழ்க்கையைப் பார்க்கின்றபோது வருகின்ற நியாயமான ஆத்திரமும், அவர்களிடையே அடிக்கடி பொங்கி எழுந்து வெடிப்பதை சுதந்திரப் போராட்ட காலங்களிலும் அதற்குப் பின்னரும் நாம் பார்த்துக் கொண்டே வருகிறோம்.

இந்தப் பின்னணியில் இன்றைக்கு ஒரு அரசியல் கட்சியினால் துவங்கப்படுகின்ற இந்த இயக்கத்தைப் பார்த்தால் இதை வெறும் அரசியலாகக் கருதி ஒதுக்க முடியாது என்பதை உணரலாம்.

நம் நாடு விவசாய நாடு என்பதைச் சொல்லாத நபரே கிடையாது. ஆனால் இந்த விவசாயத்திற்கு நாம் என்ன மரியாதை கொடுத்திருக்கிறோம்? இந்த விவசாயிக்கு இந்த சமுதாயத்தில் எந்த இடத்தைக் கொடுத்திருக்கிறோம்? என்பதை யோசித்துப் பார்த்தால், இந்த நாட்டின் ஆத்மாவை நாம் எங்கே போட்டு மிதிக்கிறோம் என்

பது நமக்குப் புரியும்.

'உழுபவனுக்கு நிலம்' என்கிற கோஷம் சுதந்திர போராட்ட காலத்திலேயே, பண்டித ஜவாஹர் லால் நேருவினலேயே முதலில் முழங்கப்பட்டது.

பின்னல் அதே கோஷத்தை கம்யூனிஸ்டுகள் முழங்கியபோது ஜவாஹர்லால் நேருவின் கட்சியினர்களாலேயே அந்தக் கோஷம் கேலி செய்யப் பட்டது.

"நிலம் என்பது மனைவி மாதிரி. அதைப் பகிர்ந்து கொள்ள முடியாது" என்றெல்லாம் மகான்கள் கூடப் பேசினர்கள்.

நிலம் என்பது தாய்க்குச் சமானம், அது நம் எல்லோருக்கும் பொது என்றுதான் நமது வேதம் கூடச் சொல்கிறது.

நிலம் மனைவி மாதிரி எனின், தீண்டத் தகாதவன் என்று நம்மால் ஒதுக்கி வைக்கப்பட்டவன் அதில் இறங்கி உழுவதற்கு நாம் அனுமதிப்பது எங்ஙனம்? எது பொது உடைமையானலும் ஆகாவிட்டாலும், நிலம் மட்டும் பொது உடைமையாக இருக்கிறது என்பதை, அழுகிப்போன நிலப் பிரபுத்துவ சமூகத்தைத் தவிர வேறு எந்த சமுதாய நெறியும் மறுக்காது.

மண் பஞ்ச பூதங்களில் ஒன்று. அதன்மீது தனி ஆதிக்கம் அநாகரீகமானது; கால வளர்ச்சியினுல் ரத்து செய்யப்பட வேண்டியது. இன்றில்லாவிட்டாலும் ஒரு நாள் இது நடந்து தீரும். சந்தேகம் வேண்டாம்.

நான் இவற்றையெல்லாம் இங்கு சொல்வதன் மூலம் நிலத்தின்மீது இருக்கின்ற சொத்துரிமையை ஒரே நாளில் ஒழித்துவிட வேண்டும் என்று அவசரம் கொள்வதாக யாரும் நினைக்க வேண்டாம். அப்படி ஒரே நாளில் இதனைத் தகர்த்துவிட முடியாது என்பதை நான் அறிவேன். தகர்த்துவிடக் கூடாது என்று கூட நான்

வாதிப்பேன். ஏனெனில் இந்த ஓர் அம்சம் மட்டும் அல்லாமல் இந்த சமுதாயத்தில் பல உயர்ந்த நெறிகளும் கலைகளும் பண்புகளும் வளர்க்கப் பட்டுள்ளன என்பதால் எப்படி ஒரு பரிணாம வளர்ச்சியாக இது வளர்ந்ததோ அதே மாதிரி இன்னொரு பரிணாம வளர்ச்சியினால்தான் இது மாறவும் முடியும்.

இன்று அரசியல் மாதிரி தொடங்கப்படுகிற இந்த நில உரிமைப் போராட்டத்தை நான் பார்க்கிறேன்.

நில உடமைக்காரர்கள் தங்களது உரிமைகளை இன்னும் கொஞ்சகாலம் பாதுகாத்துக் கொள்ளவேண்டும் என்று விரும்பினால் அதற்காகவேனும் அவர்கள் இந்த இயக்கத்தை ஆதரித்தாக வேண்டும்.

நில உடமைக்காரர்களுக்கும் நிலமற்ற விவசாயிகளுக்கும் இடையே வளர்ந்துவருகின்ற பகைமையை குறைப்பதற்காகத்தான் வினோபாஜி போன்றவர்கள் பூமிதான இயக்கத்தை ஆரம்பித்தார்கள்.

பூமிதான இயக்கத்தின் நோக்கம் நிலப்பிரபுத்துவத்தை ஒழிப்பது அல்ல. மாறாக நிலப்பிரபுத்துவ கொடுமையைத் தவிர்த்து விவசாயிகளின் நிலப் பசியைத் தீர்ப்பது அதன் நோக்கமாகும்.

நம் நாட்டு அரசு இந்த பூமிதான இயக்கத்துக்குத் தருகிற ஆதரவுக்கு உண்மையிலேயே அர்த்தமிருக்குமெனின் அரசு தன் வசம் இருக்கும் நிலத்தை வாரி வாரித் தந்து நிலப் பிரபுக்களுக்கு உதாரணமாக இருந்திருக்க வேண்டும்.

அதனைச் செய்யாதது மட்டுமில்லாமல் அரைகுறை அரசியல்வாதிகள் அரசாங்க பீடத்தில் வந்து அமர்ந்துகொண்டு சட்டம் என்றும் ஷரத்து என்றும் காரணம் காட்டி இந்த இயக்கத்தின் பின்னர் இருக்கின்ற தர்மாவேசத்தையும் சமுதாய

நியதியையும் புரிந்து கொள்ளாமல் இரும்புக்கரம் கொண்டு இதனை அடக்குவேன் என்று பேசுவது பேதைமை.

நில உடமையாளர்களின் நலன்களையும் பாது காக்க வேண்டியது இந்த அரசாங்கத்தின் பொறுப்பு என்பதை நான் ஒப்புக் கொள்ளு கிறேன். அதற்காகவேனும் அரசாங்கம் இந்த இயக்கத்தில் தானும் பங்கு பெற்று இந்த இயக்கம் திசை திரும்பாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று நான் கருதுகிறேன்.

இந்த இயக்கத்தினர் மிகவும் அழுத்தம் கொடுத்து கேட்பது புறம்போக்கு நிலங்களையும் அரசாங்கத்துக்குச் சொந்தமாக, யாருக்கும் பட்டா இல்லாமல் கிடக்கின்ற பெரும் பரப்பு நிலங்களையும்தான்.

சிற்சில இடங்களில் இந்தப் புறம்போக்கு நிலங் களில் தங்கள் சொந்த முயற்சியால் விவசாயிகள் உழுது பயிரிட்டு உணவு உற்பத்தியைப் பெருக் கினால் அவர்களுக்குத் தண்டத் தீர்வை போட்டு வசூலிப்பது, உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று உபதேசிக்கிற அரசாங்கத் திற்கு நியாயமா என்றும் யோசிக்க வேண்டும்.

இந்தியாவின் உணவுப் பிரச்சினை தீர்வதற்கு நாம் உடனடியாகச் செய்யவேண்டிய காரியமே பல்லாயிரக்கணக்கான ஏக்கர் புறம்போக்கு நிலங் களை ஏர்பிடிக்கத்தயாராக இருக்கும் ஜனங்களுக்கு பட்டாப்போட்டு கொடுப்பதுதான்.

இந்தியாவில் உள்ள வேலையில்லாத் திண்டாட் டதை போக்குவதற்கு இதைவிட முக்கியமான காரியம் வேறொன்றுமில்லை.

இருபதாண்டுக்கால சுதந்திர வாழ்க்கையில் விவ சாயிகளின் பிள்ளைகளுக்கெல்லாம் விவசாயம் என் பது கீழ் மக்களின் தொழில் என்று நாம் கற்றுக் கொடுத்து விட்டோம். கட்டாயக் கல்வி மூலம்

பத்தாவது வகுப்புவரை படித்த ஒரு விவசாயியின் மகன் இன்னொருவனுக்குச் சொந்தமான நிலத்தில் பண்ணை அடிமையாகத் தான் வேலை செய்வதை விடவும், பட்டணத்திற்கு வந்து வெள்ளை வேட்டி கட்டிப் பிழைப்பது கவுரவம் என்று நினைக்கிறான்.

அவனுக்குச் சொந்தமாக நிலத்தைப் பட்டா செய்து கொடுப்பதன் மூலம் அவன் படித்த விவசாயியாக மாறுவான். விவசாயம் கௌரவம் மிக்க தொழில் என்று உணர்வான். நவீன விவசாயம் புரிய முயல்வான்.

இந்தியாவில் வேலை என்பது விவசாயம் தானென்று அவனுக்குப் புரிய வேண்டும். வாயளவில் விவசாய நாடு என்று சொல்லிக் கொண்டு இதை ஒரு குமாஸ்தா நாடாக ஆக்க முயல்வதனால் தான் வேலையில்லாத் திண்டாட்டமும் பெருகி நிற்கிறது.

நிலப்பிரபுத்துவத்தை எதிர்த்து, நிலத்தின்மீது தனி நபர் ஆதிக்கத்தை எதிர்த்து நாம் எந்தப் போராட்டத்தையும் நடத்தி ஒரு புதிய சமுதாயம் அமைக்க வேண்டாம்.

விவசாயிகளுக்கெல்லாம் அரசாங்கம் நிலத்தைத் தர ஆரம்பித்துவிட்டால், விவசாயத் தொழிலின் மீது படித்த மக்களுக்கு கௌரவ உணர்ச்சி வந்து விட்டால், கூட்டுப் பண்ணைமுறை வர ஆரம்பித்து விட்டால், நவீன விவசாயம் நடைமுறைக்கு வந்து விட்டால் நவீன விவசாயி என்ற புதிய வர்க்கம் தோன்றிவிட்டால் நிலப்பிரபுக்கள் தங்களுடைய நிலங்களைப் பழைய பத்தாம் பசலி முறையில் சாகுபடி செய்ய முடியாமல் தாமே தானமாகத் தர ஆரம்பித்து விடுவார்கள். அல்லது பிரித்துக் கொடுத்து வாரிசு உரிமை பாராட்டுகின்ற குடும்ப அங்கத்தினர்கள் அத்தனை பேரும் கூட்டாக உழைக்க ஆரம்பித்து விடுவார்கள்.

விவசாயம் நவீனமாகும். அப்போதுதான்

உண்மையான நவீன பாரதம் உருவாகும். அதைச் செய்யாமல் நாம் பேசுகிற நவீன வாழ்க்கை என்பது போலித் தனமானதாகும்; மாய்மாலமானதும் ஆகும்.

புதிய பாரதம் என்பது மாடமாளிகைகளிலிருந்தும் அரண்மனைகளிலிருந்தும் உருவாகப் போவதில்லை. அது வயல்வெளிகளில் இருந்து உருவாகப் போகிறது என்று விவேகானந்தன் சொன்னான். அதன் பொருள் இதுதான் போலும்!

நிலமற்ற விவசாயிகளுக்கு நிலத்தைக் கொடுப்பதன் மூலம் இந்த மண்ணைத் தங்கள் தேசம் என்று எல்லாரும் அன்பு செய்வார்கள். எங்கோ இருந்து தங்களுக்கு ஏதோ விமோசனம் வரப் போகிறது என்று சினவை எண்ணித் தவிக்கிற பலருக்கு தேசபக்தியையே இதன் மூலம் ஊட்ட முடியும் என்று எண்ணத் தோன்றுகிறது. காலூன்ற இடம் இல்லாமல், தோளிலே கனக்கின்ற கலப்பையை இறக்கி வைக்க நிலமில்லாமல், கஞ்சிக்கு வழியில்லாமல் நிற்கின்ற கோடானு கோடி விவசாயிகளிடம் வெறும் தேசபக்தியைப் பற்றி விண்ணாரம் பேசுவது எவ்வளவு பெரிய ஏமாற்று?

இந்தத் தேசத்தைக் காக்கவேண்டும் என்று அவனுக்கென்ன தலையெழுத்து? இந்த அரசாங்கத்தின் தேசம், இந்த நிலப்பிரபுக்களின் தேசம் என்று சொல்லப்படும் நிசமான வார்த்தைகளல்லவா அவனை நக்ஸல்பாரிகளுடன், சமூக விரோதிகளுடன், தேசத் துரோகிகளுடன் சேர்த்து வைக்கிறது.

இந்தப் புதிய ஆவேசத்தைத் தடைச் சட்டங்களின் மூலமும் துப்பாக்கிகளின் மூலமுமா தடுத்து நிறுத்திவிட முடியும்? அவனுக்கு நிலத்தைத் தந்து பாருங்கள். அப்போது அந்த தேசபக்தி அந்த, அர்த்தமுள்ள மண்ணாசை-நேரடியான

அந்நிய படையெடுப்பையும் மறைமுகமான இந்த அந்நிய ஊடுருவிகளையும் நிச்சயம் விரட்டி அடிக்கும்.

விவசாயிக்கு நிலம் என்பது இவ்வளவு அடிப்படையான, ஆதாரமான, சுதந்திரம் அடைந்தவுடனேயே முதன் முதலில் நாம் செய்திருக்க வேண்டிய சுதந்திர இந்தியாவின் கடமை என்று நாம் நினைக்க நினைக்க இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற நெருக்கடிக்கெல்லாம் இதைச் செய்யாமல் போனதுதான் காரணம் என்று எனக்குத் தோன்றுகிறது.

நிலத்தை அபகரிக்கப் போவதாக பிறரால் சித்தரிக்கப்படுகிற இவர்கள் அதில் வேலிபோட்டு நடுவில் கொடி கட்டிக்கொண்டு நிற்கப் போவதில்லை. அவர்கள் விவசாயம்தான் செய்யப் போகிறார்கள். துப்பாக்கியையும், பீரங்கிகளையும் எடுத்துக்கொண்டல்ல. ஏரும் எருதும் கட்டிக்கொண்டுதான் அவர்கள் இந்த நிலங்களை ஆக்ரமிக்கப் போகிறார்கள். என்ன தப்பு? எது தப்பு? கரம்பு நிலத்தைக் கழனியாக்குவது தப்பா?

ஒரு புல் முளைத்த இடத்தில், அதன் பக்கத்தில் இன்னொரு புல்லை முளைக்க வைக்கிறவன் கடவுளின் பக்கத்தில் நிற்கக் கடவன் என்று விவிலியம் உழவனை வாழ்த்துகிறது. இவனை இருகரம் கூப்பி வணங்க வேண்டுமே தவிர இரும்புக்கரம் கொண்டு அடக்குவதாவது?

இன்றைய நிலவுடமையாளர்களின் உடமைகள் பாதிக்கப்படாத அளவுக்கு, வெறும் பொறாமை உணர்ச்சியினால் அழிவுச் சக்தியாக இவ்வியக்கம் மாறாமல் இருப்பதற்கு, அரசியல் மிகவும் நல்லது. லாபமாக இவ்வியக்கம் பயன்படுத்தப் படாமலிருப்பதற்குரியாய உணர்ச்சி படைத்த சகலரும் இதிலே பங்கேற்றுக்கொள்வதும் இதனை ஆதரிப்பதும் கடமையாகக் கொள்ள வேண்டும். இதற்கு அர

சாங்கமே வழிகாட்ட வேண்டும்.

இதனை வெறும் அரசியல் பிரச்சினையாகப் பார்ப்பதும் அரசியல் பிரச்சினையாக மாற்ற முயல்வதும் மிகவும் கொச்சைத் தனமானதாகும்.

கம்யூனிஸ்டுகள் இதனை ஆரம்பித்து வைக்கிறார்கள் மிகவும் நல்லது.

இந்தச் சமுதாயத்தின் மிக முக்கியமான பிரச்னையை அவர்கள் ஆரம்பித்து வைக்கிறார்கள் என்பதனால் அதனை ஆதரிக்காமல் அவ்விதமே ஆகிவிட அனுமதிக்கலாகாது. கம்யூனிஸ்டுகளுக்கு நன்றி கூறி இதில் அனைவரும் பங்கு பெறுதல் வேண்டும்.

ஒருவேளை இந்தச் சீரிய இயக்கத்தில் மற்றவர்கள் பங்கு பெறாது, ஆதரிக்காது விட்டமையால் இது வெறும் அரசியல் பிரச்சினையாக இவ்வியக்கத்தின் எதிரிகள் அஞ்சுகிற மாதிரி இது ஒரு வன்முறை இயக்கமாக சிறுமைப்பட்டு விடுமெனில் அதற்குக் காரணம் இவ்வியக்கத்தை ஆரம்பித்து வைத்த கம்யூனிஸ்டுகள் அல்ல.

இதனை புரிந்துக் கொள்ளாமல் இதன் முக்கியத்துவத்தை உணராமல் இதனைச் சந்தேகித்து ஒரு சமுதாய மாற்றத்திற்கும் இன்றைய இந்தியாவின் சகல பிரச்சினைகளின் தீர்வுக்கும் ஆதாரமான ஒரு தார்மீக இயக்கத்தை குலைத்துவிட்ட குற்றம் இதில் பங்கு பெறாதவர்களையே வந்து சேரும்.

இன்றைய சமுதாய ஒழுக்கக் கேட்டிற்கும் தேசிய உணர்ச்சியின்மைக்கும் பொருளாதாரத் தேக்கத்திற்கும், தேச பக்தியின்மைக்கும் என்றே உருவாகி இன்னும் மாறாதிருக்கிற இன்றைய நிலப்பிரபுத்துவ நாகரிகம்தான் காரணம்.

இது மாற்றப்படவேண்டும். இந்த இயக்கம் இப்போதே மிகவும் காலம் கடந்து ஆரம்பமாகியிருக்கிறது என்று நான் கருதுகிறேன். இதில் இரண்டு அபிப்பிராயங்களுக்கு இடமில்லாமல்,

நிலப்பிரபுக்களும் சரி, அரசாங்கமும் சரி, மற்ற பொதுமக்களும் சரி, அவரவர் கோணத்திலிருந்து பார்த்தாலும் சரி, வேறு எந்த கோணத்திலிருந்து பார்த்தாலும் இதனை வரவேற்கத்தான் வேண்டும் என்பதே என் தீர்மானம். இதனால் புதிய சமுதாய தர்மம் உருவாகும். பழைய சமுதாயக் கொடுமைகள் மாறும்!

த. ஜெயகாந்தன்

# நகரம்

நாற்றமடிக்கிறது
நான் வாழும்
நகரம்.
தெருத் தொடைகளில்
மாதவிடாய் ஒழுகல்கள்
சாரங்கள் அடைகாக்கின்றன.
பலமாடிக் கட்டிடங்கள்
ஆண் குறியாய்
விரைத்து நிற்கும்.
இவையே புதியஉலகின்
சிவலிங்கங்கள்
பூசிக்கிறோம்,
ஆன்மீக
வைப்பாட்டி மக்களான நாம்.
அரசியல்வாதியும்,
வாணிகனும்
நகரமுலைகளை
நன்றாய் உறிஞ்சுகிறான்.
புகைபோக்கிச் சுருட்டுகளை
புகைத்துக்கொண்டு
சேரிமேகவட்டை நோயை
சொரிந்து கொண்டிருக்கிறான்.
நாட்டுடைமையாக்கப்பட்ட
பேருந்து
நடத்துனர்களும்
வாடகைக்கார் ஓட்டிகளும்
நாள்தோறும்
பட்டண வாழ்வால் அலியான
நகர மக்களைக்
கற்பழிக்கின்றனர்.
நகரம் தன்
நிர்வாண நாட்டியத்தை
ஆடுவாள்
பொதுப் பிரச்சனை
சாக்கடை மக்கள் கையில்
அகப்பட்டபோது.
நாற்றத்தில் என்னை
நான் இழந்து
வீடு திரும்புகையில்
அம்மா கதவைத்திறந்து
அடையாளம் தருவாள்
எனக்கு.

கி. இ. சச்சிதானந்தம்

# சுயதரிசனம்

**ந. சிதம்பர சுப்ரமணியம்**

என்னைச் சுயதரிசனம் செய்யப் பணித்திருக்கிறார்கள். சுய தரிசனம் என்பது என்ன? தரிசனம் என்பதற்குப் பார்த்தல் என்ற பொருள் உண்டு. கடவுளைப் பார்த்தல் என்ற பொருளும் உண்டு. அதனால் தான் பரம்பொருளைக் காட்ட வழிகோலும், நியாயம், வைசேஷிகம், யோகம், அத்வைதம் போன்ற தத்துவ மார்க்கங்களுக்குத் தரிசனங்கள் என்ற பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், என்னைப் பார்க்கச் சொல்லியிருப்பது கடவுளையோ, பரம்பொருளையோ அல்ல. என்னையே நான் பார்க்க வேண்டுமாம்.

பார்த்தல் எனும்பொழுது ஒருவன் பார்க்கிறான்; மற்றொன்று பார்க்கப்படுகிறது. ஆனால், நான் என்னையே பார்த்துக்கொள்ள முடியுமா? என் முகத்தை வேண்டுமானால் பார்த்துக்கொள்ளலாம், அதுவும் ஒரு கண்ணாடி மூலம், என் முகத்தின் பிரதி பிம்பத்தைத்தான்? அந்தக் கண்ணாடி என் முகத்தின் உண்மை உருவத்தைக் காட்டுகிறது என்று சொல்லிவிட முடியுமா? ஒரு சமயம், பல வேடிக்கைகளைக் காட்டும் 'கார்னிவல்' ஒன்றுக்குப்போய்இருந்தேன். ஒரு அறையில் பல கண்ணாடிகள் வைக்கப்பட்டிருந்தன. ஆனால், ஒவ்வொரு கண்ணாடியும் என் உடலை ஒவ்வொரு விதமாகக் காட்டின. ஒன்றில் பருமனாயிருந்தேன். ஒன்றில் குச்சிபோல் இருக்கிறேன். ஒன்றில் என் மண்டைதான் பெருத்துத் தெரிந்தது. மற்றொன்றில் என் வயிறுதான் இருந்தது. என் உடல் இவ்வளவு கேலிக்கு இடங்கொடுக்கும் என்று நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை-அத்தனை கோணல்கள். வளைவுகள். ஆனால், இவைகள் என் உடலின் பிரதி பிம்பங்கள்தாம் என்பதை மறுக்க முடியாது. ஆனால், அது காட்டும் உடல் தான் என் உடலின் பிரதிபிம்பமா என்பதைத் தான் ஒப்புக்கொள்ள முடிகிறதில்லை.

அது போலவே, நான் தரிசிக்க விரும்பும் 'நான்' ஒரு மனிதனா அல்லது பல மனிதர்களா என்று சந்தேகப் படாமலிருக்க முடியாது. ஏனென்றால் நான் என்பது ஒரு மனிதன் அல்ல. பல மனிதர்கள். R. L. ஸ்டீவன்ஸன் ஒரே மனிதனிடம், டாக்டர் ஜெகில் என்ற நல்லவனும் ஹைட் என்ற கெட்டவனும் இருப்பதைச் சித்தரித்துக் காட்டியிருக்கிறார். ஆனால், நம்மிடம்

நல்லவன் கெட்டவன் என்ற ஒரே ஒரு ஜோடி மாத்திரம் இருக்கவில்லை. எத்தனையோ வித நல்லவர்கள், எத்தனையோ வித கெட்டவர்கள் இருக்கிறார்கள். இதில் யாரைத் தேர்ந்தெடுத்துப் பார்க்கப்போவது? அப்படிப்பார்த்தால் அது சரியான தரிசனமாகுமா? அது என்னையும், பிறரையும் ஏமாற்றும் வித்தையாகத்தான் ஆகும்.

இதற்குப் பொருத்தமான ஒரு உதாரணம் எனக்கு ஞாபகம் வருகிறது. ஒரு ருஷ்யத் தலைவருக்குத் தன் படத்தை வரையச் சொல்ல வேண்டும் என்ற ஆசை எழுந்தது. ஒரு பெரிய கலைஞனைக் கூப்பிட்டு தன் படத்தை வரையச் சொன்னார். கலைஞனுக்குச் சந்தோஷம். பெரிய தலைவரின் படத்தை வரைந்து கொடுத்தால் புகழும் லாபமும் கிடைக்கும். ஆனால் இந்தப்படம் வரைந்து கொடுப்பதில் ஒரு பெரிய சங்கடம் குறுக்கே நின்றது. தலைவருக்கு ஒரு கண்தான் நல்ல கண். மற்ற கண் இருக்குமிடத்தில் ஒரு விகாரமான புண்தான் இருந்தது. தலைவருக்குத் திருப்தியாக எழுதவேண்டும். ஆகவே, பொட்டைக் கண்ணை நல்ல கண்ணாகவே வைத்து எழுதிக்கொண்டு வந்துகாட்டினான். தலைவருக்குச் சந்தோஷம் தான். படம் நன்றாகத்தானிருந்தது. இருந்தாலும் உண்மைக்குப் புறம்பாக அல்லவா இருக்கிறது? தான் அதைப் புறக்கணித்தாலும் பிறர் ஒத்துக் கொள்ளமாட்டார்களே. தலைவர், கலைஞனைப் பார்த்துச் சொன்னார். "ஐயா இது யதார்த்தமாக இல்லை. அதீத கற்பனை (Romanticism) யாக இருக்கிறது. இது எனக்கு வேண்டாம். வேறு சரியாக எழுதி வாருங்கள்" என்று திருப்பி அனுப்பிவிட்டார். கலைஞன் உள்ளபடி ஒரு கண் பொட்டையாக எழுதிக் கொண்டுவந்து காட்டினான். "ஐயா. இது மூலத்தின் அழகைச் சரியாகக்காட்டவில்லை. இது கேலிச் சித்திரமாக (Caricature)ச் செய்துவிட்டீர். வேறு சரியாக எழுதிவாரும்" என்று மறுபடியும் திருப்பி விட்டார். கலைஞன் திணறிப் போனான். பளிரென்று ஒரு யுக்தி தோன்றியது. அதன்படி மூன்றாம் படத்தை எழுதிக் கொண்டு வந்து காட்டினான். அதைப்பார்த்ததும் தலைவருக்குமிருந்தசந்தோஷம். "பேஷ் இதுதான் யதார்த்தம். நீர் பெரிய கலைஞன்தான்" என்று புகழ்ந்தார். கலைஞன் செய்த வித்தை இதுதான். அந்தத் தலைவருடைய சித்திரத்தைப் பக்கவாட்டில் (Profile) எழுதிவிட்டான். பொட்டைக்கண் மறைந்த பாகத்தில் விழுந்து விட்டது. இது யதார்த்தம் தானே?

இலக்கிய உலகில் இப்படிப்பட்ட யதார்த்தங்கள் இன்று மிகவும் அதிகமாகியிருக்கின்றன.

சுயதரிசனத்துக்கு வரு

வோம். சுயதரிசனம் என்பது ஒருவிதத்தில் விசுவரூப தரிசனம்தான். அர்ச்சுனன் கண்ணனைத் தனக்கு உண்மை உருவத்தைக் காட்ட வேண்டினான் கண்ணன் சொன்னான்: "அர்ச்சுனா, என்னை உன் ஊனக்கண்ணால் பார்க்க முடியாது. அதற்காக உனக்கு ஞானக்கண்ணைத்தருகிறேன்" என்று கொடுத்தார். அர்ச்சுனன் விசுவரூப தரிசனத்தைக் கண்டான். ஆனால் தேவகியோ தன் ஊனக் கண்ணாலேயே கண்டுவிட்டாள். குழந்தை கண்ணன், வாயில் மண்ணைப் போட்டுக்கொண்டு விட்டான், என்று கோபத்துடன் வாயைத் திறக்கச்சொன்னாள் ஆனால்அந்தச்சிறுவாயில் எதைக் கண்டாள். அண்ட சராசரங்கள் எல்லாம் அந்த வாய்க்குள் இருப்பதைக் கண்டாள். இதுவும் விசுவரூபதரிசனம்தானே. அருச்சுனனுக்கு மாத்திரம் ஞானக்கண் வேண்டியிருப்பானேன். அருச்சுனன் சீடன். கண்ணன் குரு. கண்ணன் ஞானோபதேசம் செய்கிறான். ஆனால் தேவகி தாய். கண்ணன் குழந்தை. தேவகியின் அன்பிற்குக் குழந்தை கட்டுண்டு நிற்கிறது. அன்பு ஞானத்தை மீறியது. அன்பே சிவம் என்பார்கள் அல்லவா. அன்புதான் பக்தி யோகம். அறிவினால் அடைய முடியாததை இதயத்தால் (அன்பினால்) சாதிக்க முடியும் என்பதை நம் பெரியோர்கள் வாழ்விலே கண்கூடாகக் காணலாம்.

சரி, இந்தப் புராணத்துக்கும் என் சுயதரிசனத்துக்கோ இலக்கிய வாழ்விற்கோ என்ன சம்பந்தம். எனக்கு விசுவரூப தரிசனம் செய்ய வேண்டுமென்ற ஆசைதான். ஆனால் ஞானக்கண் கொடுப்பதற்குக் கண்ணன் என் தோழனில்லை. ஆகவே தேவகியின் சரியான அன்பு வழிதான் சாத்தியமானது. இந்த அன்பை அடிப்படையாகக் கொண்டு கூடுவிட்டுக் கூடுபாயும் வித்தையைப் பழக முயன்றேன். நல்லவர்கள், கெட்டவர்கள், ஆண்கள், பெண்கள், குழந்தைகள், அறிவாளிகள், அசடர்கள், பறவைகள், மிருகங்கள் இவர்களின் இதயத்தோடு ஒன்றி அவர்களுடைய சுக துக்கங்களை நம்மதாக்கிக் கொண்டு பல்வேறு பாத்திரங்களைப் படைத்து ஒருஇலக்கிய உலகத்தையேஉண்டுபண்ணுவதும் விசுவரூப தரிசனம் தானே. படைப்பாளி இவ்வளவு பாத்திரங்களிலும் தான் புகுந்து தானேயாகிப் பெருகியிருக்கிறான் அல்லவா? ஆகவே இதுவும் ஒரு விசுவரூபம் தானே!

அடுத்த கேள்வி, இது எதற்காக எழுத வேண்டும்? இதனால் யாருக்கு என்ன பிரயோஜனம் என்றெல்லாம் பல இடங்களில் கேட்கப் படுகின்றன. பிள்ளை பிறந்தது என்பதில் ஒருவன் மகிழ்ச்சி அடைகிறான் என்றால் அது பிள்ளைக்காகத்தான். அந்தப் பிள்ளை

வளர்ந்து உத்யோகத்துக்குப் போய் சம்பாதித்துப் போடும் என்பதற்காக அல்ல. படைப்பினுல் சிருஷ்டி கர்த்தாவுக்குப் புகழ் இலாபம் கிடைக்கிறதென்ருல் அதெல்லாம் எழுத்துக்குப் புறம்பான விஷயங்கள். திருவள்ளுவர் குறளை எழுதிவிட்டு 20-ம் நூற்ருண்டில் தன் உருவம் தபால் முத்திரையில் வருமென்ருே மயிலையில் சிலை நிறுத்துவார்கள் என்ருே சென்னை நகரின் பேருந்துகளில் அவர் எழுத்துகள் தொங்கிக்கொண்டிருக்கும் என்ருே அவர் ஒரு பெரிய தீர்க்கதரிசியாக இருந்தும்கூட நினைத்திருக்க மாட்டார். இது போலவே வால்மீகி, இளங்கோ முதலான காவிய ஆசிரியர்கள் ஏதோ பயனை எதிர்பார்த்து எழுதவில்லை.

இதற்கு மாருக என் படைப்பு என்னுடனே போகட்டுமென்ருே என் படைப்பு என் காலத்தில் உலகத்தில் பரவ வேண்டாமென்ருே என்றுசொல்லிவிட்டுச்சென்ற படைப்பாளிகள் இல்லாமலில்லை. இவர்கள் படைத்தது தங்களுக்காகவே — தங்களது ஆத்ம திருப்திக்காகவேதான் என்று ருசுப் படுத்திவிட்டுச் சென்றிருக்கிருர்கள். ஸாமர் ஸெட்மாம் எழுதிய 'நிலவும் ஆறு பென்னிகளும்' என்ற நாவல் காகின் என்ற பிரசித்தி பெற்ற கலைஞனின் வாழ்க்கையையொட்டி எழுதப்பட்ட சிறந்த நாவல். அதில் டாகிடித் தீவுகள் ஒன்றில் குடிசை கட்டிக்கொண்டு ஆங்குள்ள ஸ்த்ரீயுடன் இருந்துவருகிருன் அவன் இருந்துவந்த குடிசைச் சுவர்கள் எல்லாவற்றிலும் பற்பல சித்திரங்களைத் தீட்டியிருக்கிருன். சாகும் பொழுது மனைவியைக் கூப்பிட்டுத் தான் இறந்த உடன் அந்தக் குடிசையை எரித்துவிடும்படி உத்திரவிட்டு உயிர் துறக்கிருன். அந்த ஸ்த்ரீயும் தன் எஜமானன் உத்திரவை மதித்துக் குடிசைக்குத் தீமூட்டி எரித்துவிடுகிருள். உலகிலேயே சிறந்த அற்புதச் சித்திரங்கள் தீக்கிரையாகி, அழிந்து விடுகின்றன. காகின் ஏன் அப்படிச் செய்யவேண்டினுன்? மனித வாழ்வே அற்பமானது. 'அந்த வாழ்விலே உண்டாகும் படைப்பும் அற்பமானது தானே என்று செய்யச் சொன்னுனு? அல்லது நான் என்பது என் உடலுடன் போய்விடப் போகிறது. 'என்னுடையது' என்பது மாத்திரம் இருப்பானேன் என்று அகங்கார மமகாரங்களை ஒழித்துவிட்ட 'ஞானி' என்பதை நிரூபித்துச் சென்ருனு? யார் கண்டார்கள்.

ஜி.எம்.ஹாப்கின்ஸ்என்பவர் ஒரு சிறந்த கவிஞர். அவர் 1889ல் காலமானுர். அவருக்கும், ராபர்ட் ப்ரிட்ஜஸ் என்று பிரசித்தி பெற்ற கவிஞருக்கும் இருபத்தைந்து ஆண்டுகால நட்பு உண்டு. சாவதற்கு முன்பு, தன் நண்பர் ராபர்ட் பிரிட்ஜஸிடம் தன் கவிதை

களைக் கொடுத்து நான் இறந்து பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு இதைப் பிரித்துப் பாருங்கள் என்று சொல்லிவிட்டு மரண மடைந்தாராம். 1918ல்தான், ராபர்ட் பிரிட்ஜஸ் ? ஹாப்கின்ஸின் முதல் கவிதைத்தொகுதியைப் புத்தக வடிவில் கொண்டு வந்தார். அப்பொழுதுதான் அந்தக் கவிதைகளின் சிறப்பு உலகத்திற்குத் தெரியவந்தது. பிற்காலக் கவிஞர்களுக்கு ஹாப்கின்ஸ் ஒரு வழி காட்டியாக ஆனார். அவர் கவிதைகளின் கருத்தும், விடுதலைக்காகப் போராடும் ஆன்ம வேட்கையைக் காட்டுவதாக இருந்தன. இவர்களுக்கெல்லாம் படைப்பில் ஆனந்தமே தவிர, உலகத்தைப் பற்றிக் கவலைப்படவில்லை.

சுயதரிசனம் என்பதும் 'உன்னை நீ அறிந்துகொள்" என்பதும் ஒன்றேதான். 'தன்னை அறிந்திடவே—வெண்ணிலாவே—ஒரு தந்திரம் நீ சொல்ல வேண்டும், வெண்ணிலாவே' என்று வேண்டினர் இராமலிங்க சுவாமிகள். ஒரு சீன ஞானி சொன்னர்.

'பிறரை அறிபவன்
புத்திசாலி
தன்னை அறிபவன்
ஒளிபெற்றவன்
பிறரை வெல்பவன்
சக்திமான்
திருப்தி உள்ளவன்
செல்வன்
மனேபலம் உள்ளவன்
தீரன்
இவர்களின் உடல்
அழிந்தாலும்
என்றும் உயிருடன்
இருப்பவர்கள்.

இப்படிப்பட்டவர்கள் ஜீவன் முக்தர்கள். எல்லோரும் இப்படிப்பட்ட பக்குவத்தை அடைய முடிகிறதில்லை. ஆனல் படைப்பாளி நிச்சயமாகத் தன்னை அறிந்து கொள்ள வேண்டும். தன் படைப்பின் குறைகளையும் நிறைகளையும் சந்தேகத்திற்கு இடமின்றித் தெரிந்துகொள்ள வேண்டும். ஒரு குழந்தை ஏதாவதொன்றைக் கிறுக்கிவிட்டு ஒரு அரிய சித்திரம் வரைந்துவிட்டதாகப் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கலாம். ஆனல் படைப்பாளி தன்னையே ஏமாற்றிக் கொள்ளக்கூடாது. வேற்று மனிதனைவிட இரக்கமின்றித் தன் படைப்புகளின் குறைகளைக் கண்டு பிடிக்க முயலவேண்டும். அப்பொழுதுதான் படைப்புக்களை குற்றமின்றிப் படைக்க முடியும். அப்படி குற்றமற்றதாகப் படைத்துவிட்டால், படைப்புகளுக்கு ஒரு சிறப்பும்மேன்மையும் இருக்கும்படி செய்து விட்டால் பிறரையோ உலகத்தையோ பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை.

ஆஸ்கார் ஒயில்டின் நாடகத்தின் அரங்கேற்றம் ஒரு கொட்டகையில் ஆரம்பமாகி இருந்தது. அதைப் பார்த்துவிட்டுத் திரும்பிவந்தார் நாடக ஆசிரியர். நண்பர் ஒருவர் உபசாரமாக 'ஆஸ்கார்'

உன் நாடகம் எப்படி?' என்று நாடகத்தின் வெற்றியைப் பற்றி வினவினர். ஆஸ்கார் ஒயில்டு பதில் சொன்னர். 'ஓ' நாடகம் பிரமாதமான வெற்றி தான். ஆனல் அவையோர் கள்தான் படுமோசம்' என்று சொல்லி நாடகத்துக்கு நல்ல வரவேற்பில்லை என்பதைச் சுட்டிக் காட்டினர்.

ஆகவே ஒன்று மட்டும் நிச்சயம். உலகத்திலே எல்லோரையும் திருப்தி செய்யக் கூடிய வஸ்து ஒன்றுமில்லை. இது இலக்கியத்துக்கு முழுக்க முழுக்கப் பொருந்தும். ஆகவே படைப்பாளி தன் திருப்திக்காக மட்டும் தனக்குச் சரியென்று பட்டதையே எழுதுவானுகில் அதற்கு இலக்கிய மதிப்பு ஏற்படுவதற்கு வழி இருக்கிறது. படைப்பாளி தன் கண்ணுடன் பார்த்து எழுத வேண்டுமே ஒழிய பிறர் கண்களையும் பிறர் மனங்களையும் பார்த்து எழுதுவது சாத்தியமானதல்ல; சரியானதுமல்ல—தன் சுய அனுபவத்தை வைத்து எழுதும்போது தான் உண்மையின் ஒரு கிரணமாவது அவனுக்குஅகப்படும். அதைப் பிடித்துக் கொண்டே போனல் என்ருே எப்பொழுதோ சுயதரிசனம் கிடைக்க வழி ஏற்படக்கூடும்.

★

# சருகுகள்

ஆனு, நமக்கு யாரு மில்லே
அதனலேதான் சோறு மில்லே
பிளாட்டுப் பாரம் அன்னுதைக்குப்
பேரு சொல்ல ஊரு மில்லே
ஆணிக் காலு மாணிக்கம் டேய்,
நீதான் எனக்கு நெசமா நண்பன்
ஒருத்த னுக்கு ஒருத்தன் காவல்
இருவ ருக்கும் கர்த்தன் காவல்
தங்கும் இடமோ தங்க சாலை
'பூட்டுப் பாலிஷ்' நம்ம வேலை
நம்பு வோண்டா கையைக் காலை
என்ன வேணும் இதுக்கு மேலே
நாயர் கிட்ட சாயாத் தண்ணி
ஆயா கிட்ட ஊசப் போண்டா
நெனச்சாப் போச்சி ஊறுது எச்சி
நடடா போலாம் நேரமும் ஆச்சி!

—பரந்தாமன்

## ரசனை

# உதய நிழல்

இது சமீபத்தில் வெளியான வைதீஸ்வரனின் கவிதைத் தொகுதி. புதுக் கவிதைக்காரரான, ஓவியம் பயின்ற, ம்யூஸியாலஜி படித்த, நடித்துப் பழக்கமுள்ள இந்தியன் ஏர்லைன்ஸில் பணியாற்றும் வைதீஸ்வரன் தன் சொந்தச் செலவில் இந்தத் தொகுதியைக் கொண்டு வந்து விற்பனை உரிமையை 'புக் வென்சரிடம்' கொடுத்திருக்கிறார். இதில் பெயரிடப்படாத உள்ளொளி உள்ள ஒரு முன்னுரை இருக்கிறது. அதில் 'என்னுடைய இந்த முதல் பிரசுரத்தில் விசேஷ ஆர்வமும், அக்கறையும் காட்டி உதவிகள் செய்த நண்பர்கள் ந. முத்துசாமி, ...... இவர்களுக்கு என் மனமார்ந்த' வந்தனங்கள், சொல்லி இருக்கிறார். இந்தத் தொகுதியை நான் ரசிக விமர்சனம் எழுத எடுத்துக்கொண்டிருக்கிறேன். முதுகு சொறிந்துவிடும் காரியம் இது என்று பிறருக்குப் படலாம். இதற்கு நான் ஒன்றும் சொல்வதற்கு இல்லை. என் கைகள் நீண்ட கைகள்; வலக்கை இடமுதுகும், இடக்கை வலமுதுகும் தோல் பட்டைக்குத் தோல் பட்டைத் துழாவித் தேய்க்க, சொறிந்து கொள்ளக் கூடியவை. என் முதுகு அழுக்கை எதிராளிக்குக் காட்ட நான் விரும்புவதில்லை. உதவிகள் செய்யமுன்வந்தபோதேஅதில் எனக்கு ரசனை இருக்கிறது என்று வேறு அர்த்தம் உண்டு. ரசனை விமர்சனம் எழுதுவதில் நியாயம் இருக்கிறது.

இங்கு எனக்கு சிரமம் குறைவுதான். ஏற்கனவே நான் அவ்வப்பொழுது, பத்திரிகைகளில் வந்த போதும், கையெழுத்துப் பிரதியிலும் படித்தவை இவை. என் நண்பர்களோடு குறிப்பாக வைதீஸ்வரன் எழுத ஆரம்பித்த நாளில் இருந்து சி. மணியுடனும், பிறகு சச்சிதானந்தத்துடன், இப்பொழுது இரண்டு ஆண்டுகளாக ஞானக்கூத்தனுடனும் அவ்வப்பொழுது இவர் கவிதைகளைப்பற்றி ஒருவருக்கொருவர் விமர்சித்துக் கொண்டிருந்

திருக்கிறோம். இடையில் ஒரு முறை நேரிலும், ஒரு முறை கடிதத்தின் மூலமும் டில்லியில் இருக்கும் விமர்சனம் என்றால் விமர்சனம்தான் என்னும் ஆனால் நண்பரான, வெ. சாமிநாதனுடனும் இவர் கவிதைகளைப்பற்றிப் பேசி இருக்கிறேன். பேசியவை என்னென்னவென்று மறந்து விட்டது. சாரம் வைதீஸ்வரனைப் பற்றி சிறுகச் சிறுக ஏற்பட்டு வரும் அபிப்ராயத்தில் கலந்து விட்டது.

இங்கு இன்னொரு சௌகரியம். இது விமர்சனமில்லை. ரசனை விமர்சனம். இதன் பொருளை இன்னும் நான் சரியாக வாங்கிக் கொள்ளவில்லை. சில விஷயங்கள் எப்படி ரசிக்கவில்லை என்பதும் ரசனை விமர்சனத்தில் அடங்குமா என்பதும் எனக்குத் தெரியவில்லை. ஆனால் இது விமர்சனம் இல்லை என்பதால் என் உடன்பாட்டு மாறுபாட்டுக்கருத்துக்களை ஒழுங்கு செய்து அமைக்கும் சிரமமில்லை. ரசித்தவற்றை மட்டும் தொடர்ந்து சொல்லிக் கொண்டே போகலாம் ரசித்ததை ரசித்த விதமாக. ஆனால், ரசனையும் அவ்வளவு சுலபமான காரியம் இல்லை என்றும் தோன்றுகிறது. கவிதைகளை சிரமப்பட்டுத்தான் படிக்க வேண்டியிருக்கிறது. அழகை அனுபவிக்க சிரமப்படவும் தயாராய் இருக்க வேண்டும்.

இந்தத் தொகுதியை ரசிக்க எனக்கு முதல் மூன்று கவிதைகளைத் தாண்டி நான்காவது கவிதை 'மரத்'திற்குப் போக வேண்டியிருக்கிறது. இடையில் 'என் அறைக் கதவு' பலரால் புகழப்பட்ட கவிதை. மரத்தைப் பற்றி நான் ஏற்கனவே கணையாழியில் ஒரு கட்டுரை எழுதிவிட்டேன். இதன் கடைசிப் பத்தி இன்றும் எனக்கு அதிகப்படியாகவே தோன்றுகிறது. முதல் பத்தியின் மூன்றாம் அடியில் கடைசிசிரும் நாலாம் அடியும் அதிகப்படி. இவ்விரண்டும் அதிகமும் முழுதாய் உருவாகும் ஒரு படிமத்தைச் சிதைக்கின்றன. அதனால ரசனை குறைகிறது.

ஆறும் பக்கத்தில் 'பாத மலர்' கவிதை. இது வெயில் எரிக்கும் வெறுந்தரையான தார் ரோடில், விழியை எரிக்கும் வெயிலும் இடையில் விழிக்கு மலராக இருபாதங்கள் பாவாடை நிழலுக்குள் பதுங்கி வரும் வெண்முயல்களாக இவருக்குத் தோன்றுகின்றன. அவை மண்ணை மிதித்து இவர் மனதைக்கலைக்கின்றன. ஒழுங்கான ஒரு பார்வை. வரட்சி தரும் வெறுப்புக்கு இடையில் ஆறுதல் தரும் ஒரு காட்சியைப் பொருத்திக் காட்டுவதால் அழகுணர்ச்சி ஏற்படுகிறது. இக்கார் அலையும் தெரு கடலாகிறது. பாதங்கள் மிதக்கும் மலராகின்றன. தொடர்ந்து யோசிக்கிறபோது சில சிக்கல்களை உணர்கிறேன். கடலில் மலர் மிதப்பதை என்னால் ஏற்றுக்

கொள்ள முடியவில்லை. வெயி லில் போகும் அவள் சிரமம் கவிதையில் இல்லை. பாதங்கள் தானே என்று சமாதானப் படுத்திக் கொண்டு அவை பாவாடை நிழலுக்குள் வெயி லுக்குப் பயந்து பதுங்கும் முயல்கள் என்று முழுச் சமா தானமும் அடைந்து விடலாம். ஆனால், ஒருவன் பார்வை என்ற அளவோடு நின்று விடாமல் வெயிலில் தவிக்கும் ஒருத்தி என்ற அளவிலும் காட்டி அவன் அதில் ஒன்றை ஒதுக்கித் தனக்கு வேண்டி யதை எடுத்துக் கொண்டு வெயில் வெறுப்பில் ஆறுதல் அடைவது வந்தால் கவிதை இன்னும் முக்கியத்துவ முள்ளதாகலாமோ என்றும் நினைக்கத் தோன்றுகிறது.

எட்டாவது பக்கத்தில் உரிப்பு. இது ஞானரதத்தில் வெளியான கவிதை. முதல் ரதத்தில் வந்த 'மைலாய் வீதி' எனக்குப் பிடிக்கவில்லை. 54–57 பக்கங்களில் இத்தொகுதி யில் உள்ளது மைலாய் வீதி. இதன் பொருளுக்காக இல்லை, கவிதையாக இது எனக்குப் பிடிக்கவில்லை. டைம், லைப் பத்திரிகைகளின் மைலாய் வீதி சம்பவம் (படங்களோடு) எனக்கும் வேதனையையும் கோபத்தை யும் கொடுத்தது. அது இந்தக் கவிதையில் இல்லை. அதற்குப் பிரயாச்சித்தமாகவே 'உரிப்பு' அடுத்த ரதத்தில் வரவேண் டும் என்று விரும்பினேன். 'இதுவரை எதிலும் வராத கவிதைகள்' என்று உதய நிழல் தொகுப்பிற்காக ஒரு காகிதக் கற்றை என்னிடம் வந்தது. நீங்கள் மட்டும் படிக்க வேண்டும் என்றார் வைதீஸ்வரன். கவிதைக் கற்றையும் செய்தியும் சச்சி தானந்தத்தின் மூலம் எனக்கு வந்தன. அருகில் ஞானக் கூத்தன் இருந்தார். செய்தி ரகசியமாக என்காதில் ஓதப் பட்டது. நான் ஞானக் கூத்தனுடன் பஸ்ஸில் ஏறிக் கொண்டு தாளைப்புரட்டி னேன். உரிப்பு. எனக்கு குஷி, உடனே ஞானக்கூத்தனிடம் காட்டினேன். அவருக்கும் உரிப்பு நல்ல கவிதை என்று பட்டுவிட்டது. மறுநாள் ஞானரதம் அலுவலகத்தில் நாங்கள் இருவரும் மொத்தக் கவிதையையும் பார்த்தோம். உரிப்பு அடுத்த இதழுக்கு என்று முடிவுகட்டி விட் டோம். மைலாய் வீதியைப் பற்றி ஞானக் கூத்தனுக்கும் அதே அபிப்ராயம். விஷயத் தைச் சொல்லி கவிதை சித்ர பாரதிக்குப் போயிற்று. உரிப்பு ஞானரதத்திற்கு என்று வைதீஸ்வரனிடம் சொன்னேன். உரிப்புக்கு முதல் எதிர்வினை ஜெயகாந்த னிடமிருந்து வந்தது. 'யார் வைதீஸ்வரன்? கவிதை நன் றாக இருக்கிறது' என்றார் அவர். அவ்வளவுதான். நன் றாக என்பதற்கு அர்த்தம் தெரியும். 'உங்களுக்குத் தெரிந்தவர் தான்' இது எங் கள் பதில்.

இந்தக் கவிதை எப்படி நன்ருக இருக்கிறது? இதைச் சொல்வது கொஞ்சம் சிரமமான காரியம். கவிதையின் ரசனை கெட்டுவிடும் இது அர்த்தம் தருகிறது என்று சொல்வதைவிட உணர்வைத் தருகிறது என்று சொல்ல வேண்டும். நகரத்து சுவர்களில் உள்ள பழைய வால் போஸ்டர்கள் இரவோடு இரவாகக் கிழிக்கப்பட்டு புது போஸ்டர்கள் ஒட்டப்படுவதை சட்டையுரித்துப் புதுத் தோலில் பளபளக்கும் பட்டணத்துப் பாம்புகள் இந்த நகரச் சுவர்கள் என்கிருர். சுவரை வெறும் சுவராக வைத்துக் கொள்ள வேண்டியதில்லை. மொத்த நகரத்தின் உருவகமாக இதை வைத்துக் கொள்ளலாம். நகர் நிந்தனைக்கு ஆளாகிறது. பாம்பாகிறது. தோல் வளர்ந்து தடித்துவிட என்று உணர்வு கெட்ட விதம் சொல்லப்படுகிறது. எல்லாம் நள்ளிரவில் அவசரம் அவசரமாய் நடப்பதைச் சொல்லி அவமதிக்கப்படுகிறது. புதுத் தோலில் விடிந்து பளபளத்தாலும் அது பாம்பு என்ற கண்டனம். இவை ஒன்றும் வெளிப்படையாகச் சொல்லப்படவில்லை. சுவர் என்ருல் நமக்குத் தெரியும். அது சுவரும் தான், மேலும் 'நெடுஞ்சுவரே, குட்டிச் சுவரே என்று திட்டலில் மனிதக் கண்டனத்துக்கு ஆகும் உருவகமும் தான், சுவரைச் சுவராக வைத்து ரசித்தால் சரி, கொஞ்சம் உள்ளே போய் நகர் நிந்தனையாக எடுத்துக் கொண்டாலும் சரி கவிதை நன்ருக இருக்கிறது. சமீபத்தில் மணிக்கொடி சீனிவாசன் புதல்வரான சத்யச்சந்திரனுடன் நகரங்கள் கிராமங்களை அழிக்கும் விதத்தைப் பேசிக்கொண்டிருந்தேன். சத்யச்சந்திரன் இன்றைய புதுத் தலைமுறைக்காரர். தெளிவான சிந்தனையுள்ளவர். உள்ளதை உள்ளபடி பார்ப்பார். அவரோடு பேசுவதால் களைப்பு நீங்கி புத்துணர்ச்சி வருவதோடு, இன்னொரு பாதையில் சிந்தனையைச் செலுத்துவதற்கு உதவியாக இருக்கும். இந்தக் கவிதையை அவரிடமும் படித்துக் காட்டி அன்று பேசிக் கொண்டிருந்தோமே பார்த்தீர்களா வைதீஸ்வரன் கவிதையை என்றேன். மேற்கொண்டு இன்னும் கொஞ்சம் பேச்சு. சுவாரஸ்யமாக இருந்தது. முடிச்சுகளை Taboos களை உதறி எறிந்து விட்டுச் சிந்தித்தால் எல்லாவற்றிற்குமே புது அர்த்தம் தெரிகிறது. உள்ளதை உள்ளபடி பார்க்க முடிகிறது.

வரிசையாக ஒவ்வொரு கவிதையாக ரசித்துக் கொண்டு போக இங்கு இடமில்லை. அதற்கு ஒரு ஞானரதம் போதாது. பக்கங்களை வேகமாய் புரட்டிக்கொண்டு போகிறேன். தவிர்க்க முடியாமல் சொல்ல வேண்டியவைகளை இங்குசொல்லியாக வேண்டும்.

பக்கம் 11 இல் விழிப்பு, திருவனந்த புரத்திலிருந்து கேரளா பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சி மாணவராக இருக்கும் கி. நாச்சிமுத்துவிடமிருந்து ஞானக் கூத்தனுக்கு உதய நிழல் பற்றி ஒரு கடிதம் வந்தது. இவரும் ஒரு கவிஞர். கடிதத்தில் ஒரு வரி! "அவருக்கு உண்பதும் கேட்பதும் கண்வழியே சென்று தான் ஜீரணமாகிறது. மொத்தத்தில் அவர் கவிதைகள் 'மனசை'ப் பறிக்கின்றன" வைதீஸ்வரன் ஓவிய ராதலால் இப்படி நேர்கிறது போலும். 'விழிப்பு' முழுதாய் ஒரு படிமம். கருக்கலில் — காபி விளம்பரப் பலகையைக் கவ்வும் கருப்புப்பல் வரிசைகள் — விடிவைக் கண்டு வாய் பிளந்ததும் வெறும் காக்காய்கள்.

அடுத்த பக்கத்தில் 'அரிசியல்' ஒரு வகையில் இவர் தொனியிலிருந்து வேறு பட்ட கவிதை இது. ஆனாலும், இவருடைய இயல்புகளை முழுதாகக் கொண்டிருக்கிறது இதுவும். கவிதை அரிசி புடைப்பதை அரசியலுக்கு ஒப்பிடுகிறது. 'காற்றின் சூழ்ச்சியில் கணக்காய் மெதுவாய் கல்லை, நெல்லை எடையால் பிரித்து தரைமேல் உருட்டுது தந்திரக்கரங்கள் என்பதன் உள்ளீட்டை நாமாக உணர வேண்டும். அடுத்த 'வெறி'யைப் பற்றி 'நகுலன்' தன் கட்டுரையில் குறிப்பிட்டிருககிறார். கை எழுத்துப் பிரதியில் இருக்கும் கட்டுரை இது. ஒரு விமர்சகர் கூட்டத்தில் படிக்கப்படுவதற்காக எழுதப்பட்டது. 'அர்த்தமற்ற ஒரு கணத்தில் நான், முகத்தோடு முகம் வைத்துக் கடித்துக் கொண்ட போது, இடைக் கண்ணாடி என் பல்லைக் கடித்தது!' இது நம் எழுத்தாளர்களுக்குப் பொருந்தும் என்கிறார் நகுலன்.

இருபதாம் பக்கத்திற்கு வந்து விட்டேன். உரிமை. இதுவும் மேல் பாராவைப் போன்றது. அழகுணர்ச்சியை மட்டும் சொல்லாமல் சமூக விமர்சனமும் சேர்கிறது இங்கு. ஒரு கவிஞனை மொத்தமாகப் பார்க்கிறபோது அவன் சிறப்புக்கு உதவும் விஷயங்கள் இவை. அடுத்த வீட்டு நாய் இவள் வீட்டுச் சங்சாயில் வந்து படுப்பது வழக்கம். விரட்டுகிறான், நகர்வதில்லை. ஆளுயரத் தடியெடுத்து அடிக்கிறான். வள்ளென்று வால் மடக்கி குதித்தோடுகிறது. அவன் வாய்க்குள்ளே சகதி தெறிக்கிறது. அது அவன் வீட்டுச் சகதி. இது தான் அதன் உள்ளடக்கம்.

முப்பத்தைந்தாம் பக்கத்திற்கு வந்து விட்டேன். கவிதை சவாரி. உரிப்பு போல தானே உணர வேண்டிய விஷயம் இது. கவிதை, தலையில் ஆரஞ்சு தூக்கி விற்பவனைப் பற்றியது. ஆரஞ்சு பற்றியது. இதுவும் அடுத்த 'ரிப்பேரும்' ஞானக் கூத்தனுக்குப் பிடித்தமான கவிதைகள். இரண்டிலும் அவரோடு எனக்கு

உடன்பாடு.

வேகமாகப் புரட்டி ஒரு விஷயத்திற்கு வரவேண்டும். 53ம் பக்கத்தில் அவர் வரைந்த ஒரு படத்தின் கீழ் காலை என்ற கவிதை. இதை நான் சிறப்பாகக் கவிதை என்கிறேன். இது கணையாழியில் வெளியான உடன், செல்லப்பா, ஞானக்கூத்தன் எனக்கு இடையில் விவாதத்திற்குக் காரணமாயிற்று இது. வேறு வேறு காரணங்களால் அவர்கள் இருவரும் என் கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. என் கருத்து இன்னும் அப்படியே தான் இருக்கிறது. மாறாது. இது 'சிக்கல் படிமம்' கொண்டது. சிக்கலான படிமம் என்றும் சொல்லலாம். (ஆனால் சிக்கல் விழுந்த படிமம் இல்லை) சிக்கல் படிமத்தால் இது சிறப்பான கவிதையாகிறது.

புல்லில் உருகிவரும்
மெழுகொன்று
காலை ஜில்லிட்டு
நனைக்கவும்,
உதறிக் குதித்து,
"அட நத்தை!"
என்றேன்.
மறுகணம்
உயிரைக் கல்லாக்கிய
மடராமனாகி
ஒரு காலைச் சொறிந்து
நின்றேன்.

இது தான் கவிதை உயிரைக் கல்லாக்கிய மடராமனில் பிரச்சனை வந்தது செல்லப்பாவுக்கும் எனக்கும். அந்த ராமன் மடயன் இல்லாத ராமன் கல்லை உயிராக்கிறான். இந்த மடராமன் உயிரைக் கல்லாக்குகிறான். அந்த கல்லினுள்ளும் உயிர் இருந்தது, இந்தக் கல்லினுள்ளும் உயிர் இருக்கிறது. இந்தக் கவிதை பற்றி மட்டும் விரிவான ஒரு கட்டுரை எழுத முடியும். முதல் பாராவில் என் முதுகு அழுக்கை எதிராளிக்குக் காட்ட நான் விரும்புவதில்லை, என்றேன். இது பிரக்ஞை நிலை உண்மை. நனவிலிமன உண்மை வேறு விதமானது. எல்லோரும் எப்போதும் முதுகை எதிராளிக்குக் காட்டிக் கொண்டே இருக்கிறார்கள். அதில் அழுக்கு இருக்கிறதா சுத்தமானதா என்பதைக் காண தனி அறிவு வேண்டும்.

பின்னால் வருவது ஞானக்கூத்தனின் பிரசுரிக்கப்படாத ஒரு கவிதையில் மூன்று வரிகள்.

'தர்மத்தை எடுத்துக் காட்ட
உயர்ந்திடும் கைகள் அக்குள்
மயிரையே முதலில் காட்டும்.'

இத்தொகுப்பில் எனக்குப் பிடித்தமான பல கவிதைகள் பற்றி ஒன்றும் நான் சொல்லவில்லை, அப்படியே பிடிக்காத கவிதைகளைப் பற்றியும்.

ந. முத்துசாமி

# கதையின் கதை

விளாடிமிர் போல்யாகாவ்

[ஒரு பத்திரிகை ஆசிரியரின் அலுவலகத்தில் இந் நிகழ்ச்சி நடைபெறுகிறது. புதிதாக எழுத ஆரம் பித்திருக்கும் ஒரு பெண் எழுத்தாளர் கூச்சத் துடன் ஆசிரியரின் அலுவலகத்தினுள் நுழை கிருள்.]

அவள் : மன்னிக்கவும்... தயவு செய்து என்னை மன்னிக்க வும்... ஆசிரியர் நீங்கள் தானே...?

அவர் : ஆமாம்.

அவள் : என் பெயர் கிரபிவினு. உங்கள் பத்திரிகைக்காக நான் சின்னஞ்சிறிய கதையொன்று எழுதி யிருக்கிறேன்.

அவர் : அப்படியானுல் அதை இங்கே கொடுத்துவிட்டுப் போங்கள்.

அவள் : உங்களிடமிருந்து அதைப்பற்றிய அபிப் ராயத்தைத் தெரிந்து கொள்ளலாம் என்றிருந் தேன். நீங்கள் என்னை அனுமதித்தீர்களானுல் நான் அதை உங்களுக்குப் படித்துக் காட்டுகிறேன்; மூன்று அல்லது நான்கு நிமிஷங்களுக்குமேல் போகாது... நான் படிக்கட்டுமா?

அவர் : சரி. படியுங்கள்.

அவள் : இதன் தலைப்பு "சிறப் பானதோர் செயல்" (அவள் படிக்கத் தொடங் குகிருள்)

அது நள்ளிரவு நேரம். மூன்றுமணி. நகரத்தி லிருந்த எல்லோரும் தூங் கிக்கொண்டிருந்தனர். ஒரு மின்சார விளக்குக்கூட எரியவில்லை. இருட்டாக வும், அமைதியாகவும் இருந்தது. ஆனுல் திடீ ரென்று பெரிய சாம்பல் நிற வீட்டின் நான்காவது மாடியிலிருந்து பயங்கர மான நெருப்பு வெடித்து வந்தது. "காப்பாற்றுங் கள்" "நாங்கள் நெருப்பி லிருக்கிருேம்" யாரோ ஒருவர் கத்திஞர். இது சிரத்தையற்ற ஒரு குடித் தனக்காரரின் குரல். மின் சார ஹீட்டரை அணைக் காமல் படுக்கைக்குச் சென்றுவிட்டதின் விளைவு தான் அந்த நெருப்பு. நெருப்பும் அந்தக் குடித் தனக்காரரும் அறையி னுள் துள்ளிக் குதித்துக் கொண்டிருந்தனர். தீய ணைக்கும் எஞ்சினின் சங்கு ஒலிக்கத் துவங்கியது. தீயணைப்பவன் ஒருவன் எஞ்சினிலிருந்து குதித்து

வீட்டினுள் நுழைந்தான். அக் குடித்தனக்காரன் குதித்துக் கொண்டிருந்த அறையினுள் புகை கடலாய்ச் சூழ்ந்துக் கொண்டிருந்தது. தீயணைப்பவன் புரொகார்சக்; நடுத்தர வயது உக்கிரேனியன். நீண்ட கருந்தாடி உடையவன். கதவின் அருகில் அவன் நின்று யோசித்தான். உடனே அறையினுள் அவன் நுழைந்தான்; உள்ளே தவிக்கும் குடித்தனக்காரனை வெளியே இழுத்தான். பிறகு தண்ணீர்க் குழாயை ஜ்வாலையின் பக்கமாகத் திருப்பினான். நெருப்பு அணைந்தது. நல்லவேளை, புரொகார்சக்கின் தைரியத்தினால் தீ அணைந்தது. தலைமை தீயணைப்பு அதிகாரி கார்புஷின் அவனை அணுகினார். "நல்லது இளைஞனே! புரொகார்சக்! நீ சட்ட திட்டங்களுக்குஉட்பட்டுச்செயல் பட்டாய்" என்றார். பிறகு புன்முறுவலோடு அவர் மேலும் தொடர்ந்தார். "நீ கவனிக்கவில்லை; ஆனால் உன் வலப்புற மீசை தீயில் பொசுங்கிக் கொண்டிருக்கிறது." புரொகார்சக் புன்னகையுடன் தன் மீசையை நோக்கித் தண்ணீர்க் குழாயைத் திருப்பிக் கொண்டான். பொழுது விடிந்துகொண்டிருந்தது.

அவர்: கதை பரவாயில்லை; தலைப்பும் சரியாகத்தான் இருக்கிறது. ஆனால் சில பகுதிகள் மாற்றியமைக்கப் படவேண்டும். இதோ பாருங்கள், ஒரு கதை நன்றாக இருக்கும்போது உங்கள் விருப்பத்திற்கு மாறாகச் சிலர் குறுக்கிடுவது மகாகேவலம். தங்களுடைய கதை எப்படித் தொடங்குகிறது என்பதை இப்போது பார்க்கலாம்.

அவள்: அது நள்ளிரவுநேரம். மூன்றுமணி. நகரத்திலிருந்த எல்லாரும் தூங்கிக் கொண்டிருந்தனர்.

அவர்: கொஞ்சமும் நன்றாக இல்லை. அது போலீஸ்காரர்கள் தூக்கத்திலிருப்பது போலவும்,காவல் காப்பவர்கள் தூக்கத்திலிருப்பது போலவும் சித்தரிக்கிறது. ...... இல்லை ...... அப்படி இருக்கவே கூடாது. அது அஜாக்கிரதையை — விழிப்பற்ற நிலையை உணர்த்துகிறது. அந்தப் பகுதி கட்டாயம் மாற்றப் படவேண்டும். அதை இப்படி எழுதுவது தான் நல்லது.

அது நள்ளிரவு நேரம். மூன்றுமணி. நகரத்திலிருந்த ஒருவரும் தூங்கவில்லை.

அவள்: ஆனால் அது சாத்தியமில்லை. அதுவோ இரவு நேரம். மக்கள் தூங்கத்தானே வேண்டும்?

அவர் : ஆமாம். நீங்கள் சொல்வதும் சரிதான். அப்படியானால் இப்படி வைத்துக் கொள்ளலாமே. நகரத்திலிருந்த எல்லோரும் தூங்கிக் கொண்டிருந்தனர்; ஆனால் வேலையிலிருந்தார்கள்.

அவள் : வேலையிலிருக்கும் போது தூங்குவார்களா?

அவர் : இல்லை. அது அபத்தம். இப்படி எழுதுவதே நல்லது.

சிலர் தூங்கிக்கொண்டிருந்தபோது மற்றவர்கள் உஷாராகக் கண்காணித்தார்கள்.

அடுத்தது என்ன வருகிறது?

அவள் : ஒருமின்சாரவிளக்குக் கூட எரியவில்லை.

அவர் : என்ன இது? நம் தேசத்தில் எரியாத பல்புகளை நாம் உற்பத்தி செய்வதாக அல்லவா இது எண்ணவைக்கிறது?

அவள் : ஆனால் அது இரவு நேரமாயிற்றே. எனவே அவைகள் அணைக்கப் பட்டு விட்டன.

அவர் : அது நம்முடைய பல்புகளின் தரத்தைக் குறை கூறுவதாக இருக்கும். அதை நீக்கி விடுங்கள். அவைகள்எரியாவிட்டால் அதைச் சொல்லும்படியான அவசியம் ஏன் ஏற்பட்டது?

அவள் : (படிக்கத் தொடங்குகிறாள்). ஆனால் திடீரென்று பெரிய சாம்பல் நிற வீட்டின் நான்காவது மாடியிலிருந்து பயங்கரமான நெருப்பு வெடித்து வந்தது. "காப்பாற்றுங்கள், நாங்கள் நெருப்பிலிருக்கிறோம்" யாரோ ஒருவர் கத்தினார்.

அவர் : அது என்ன, குழப்பமா?

அவள் : ஆமாம்.

அவர் : எங்கள் பத்திரிகையில் இந்த மாதிரியான குழப்பத்தைப் பிரசுரம் செய்ய வேண்டுமென்பதுதான் உங்களுடைய விருப்பமா?

அவள் : இல்லை அப்படி இல்லை. ஆனால் இது ஒரு கதை......... சிருஷ்டிக்கப் பட்ட ஒன்று...... நான் தீயைப்பற்றி விவரிக்கிறேன்.

அவர் : பொறுப்புணர்ச்சியுள்ள பிரஜையைச் சித்தரிப்பதற்குப் பதிலாக குழப்பத்தையும். பயத்தையும் பரப்பும் ஒரு மனிதனைச் சித்தரிக்கிறீர்கள். நானாக இருந்தால் அந்தக் கூக்குரலுக்குப் பதிலாக நிலைமையைச் சமாளித்துக் கொள்ளும் தைரியத்தோடு அவன் செயல்படுவதாகச் சொல்லியிருப்பேன்.

அவள் : உதாரணமாக......

அவர் : உதாரணத்திற்காக வேண்டுமானால்...... நாம் அதைப்பற்றிச் சிறிதும் கவலைப்படவில்லை. இங்கு நெருப்பே இல்லை. என்று யாரோ கத்தினான்.

அவள் : நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? தீ இருக்கும் போது தீ இல்லை என்று?

அவர் : இல்லை. "தீயே இல்லை" என்று சொல்வதின் பொருள் 'அதை நாம் அணைத்துவிடுவோம். அதைப் பற்றிக் கவலைப்படுவதற்கு ஒன்றுமே இல்லை' என்ற அர்த்தத்தில்தான்.

அவள் : அது முடியாத காரியம்.

அவர் : அது முடியும். அந்தக் கூக்கூரலே வேண்டாம்.

அவள் : (படிக்கிறாள்). இது சிரத்தையற்ற குடித்தனக்காரரின் குரல். மின்சார ஹீட்டரை அணைக்காமல் படுக்கைக்குச் சென்றுவிட்டதின் விளைவுதான் அந்த நெருப்பு

அவர் : எந்த மாதிரியான குடித்தனக்காரர்?

அவள் ; சிரத்தையற்ற...

அவர் : சிரத்தையின்மை எங்கள் பத்திரிகையில் பிரசுரமாகி விளம்பரப் படுத்தப்பட வேண்டுமென்று நினைக்கிறீர்களா? நான் அப்படி நினைக்கவில்லை. அப்புறம் அவன் ஹீட்டரை அணைப்பதற்கு மறந்து விட்டான் என்று நீங்கள் ஏன் எழுதினீர்கள்? இதை வாசகர்கள் தெரிந்து கொள்ள வேண்டுமா?

அவள் : நான் அதைப் படிப்பினைக்காக எழுதவில்லை. ஹீட்டரில்லாமல் நெருப்பிருக்க முடியாதே?

அவர் : அதனாலென்ன ஏதாவது குறைந்து விடுமா?

அவள் : இல்லை. சிறப்பாகவே இருக்கும்.

அவர் : நல்லது. அப்படித்தான் நீங்கள் அதை எழுதியிருக்க வேண்டும். ஹீட்டரைச் சொல்லாமல் விட்டுவிட்டால் நெருப்பைப் பற்றியும் நீங்கள் குறிப்பிட வேண்டியதில்லை. சரி... மேலே படியுங்கள் நேராக அந்தத் தீயணைப்பவனைப் பற்றிச் சொல்ல வேண்டும்.

அவள் : தீயணைப்பவன் புரொகார்சக்; நடுத்தர வயது உக்கிரேனியன்.

அவர் : அது சரியாகவந் திருக்கிறது.

அவள் : ...நீண்ட கருந்தாடி உடையவன். அவன் கதவின் அருகே நின்று யோசித்தான்.

அவர் : அபத்தம். தீயணைப்பவன்யோசிக்கவேகூடாது. அவன் கொஞ்சமும் யோசிக்காமல் தீயை அணைக்க வேண்டும்.

அவள் : ஆனால் கதையில் அது ஒரு நல்ல அம்சமாயிற்றே.

அவர் : கதையில் அது சரியான அம்சமாக இருக்கலாம். ஆனால் தீயணைப்பவனிடம் அல்ல. அதோடு நம்மிடம் இப்போது தீயில்லையாகையால் தீயணைப்பவனை வீட்டினுள் இழுப்பதற்கு அவசியமேயில்லை.

அவள்: அப்புறம் தலைமை தீயணைப்பு அதிகாரியுடன் அவன் நடத்தும் சம்பாஷணை என்ன ஆவது?

அவர்: அவர்கள் தங்கள் அலுவலகத்தில் பேசிக் கொள்ளட்டும்: அந்தச் சம்பாஷணை எப்படிப் போகிறது?

அவள்: (படிக்கிறாள்) தலைமை தீயணைப்பு அதிகாரி கார்புஷின் அவனை அணுகினார். "நல்லது இளைஞனே! புரொகார்சக்! நீ சட்ட திட்டங்களுக்கு உட்பட்டுச் செயல்பட்டாய்" என்றார். பிறகு புன்முறுவலோடு அவர் மேலும் தொடர்ந்தார். "நீ கவனிக்கவில்லை; ஆனால் உன் வலப்புற மீசை தீயில் பொசுங்கிக் கொண்டிருக்கிறது" புரொகார்சக் புன்னகையுடன் தன் மீசையை நோக்கித் தண்ணீர்க் குழாயைத் திருப்பிக் கொண்டான். பொழுது விடிந்துகொண்டிருந்தது.

அவர்: அது ஏன் அப்படியிருக்க வேண்டும்?

அவள்: எது?

அவர்: பொசுங்கும் மீசை.

அவள்: நான் அதை நகைச் சுவைக்காகவே வைத்தேன். ஒரு மனிதன் தன்னுடைய 'வேலையிலேயே' ஆழ்ந்திருக்கும் போது அவன் தன்னுடையமீசை பொசுங்குவதைக் கூடக் கவனிக்கவில்லை.

அவர்: என்னை நம்புங்கள். அதை நீங்கள் நீக்கிவிட வேண்டும். தீயில்லாததால் வீடும் எரியவில்லை. எந்த மீசையும் பொசுங்க வேண்டிய அவசியமும் இல்லை.

அவள்: அப்படியானால் நகைச் சுவைக்கு அடிப்படையான அம்சம் என்ன ஆவது?

அவர்: நகைச்சுவை எப்படியும் இருக்கும். சரி, எப்போது ஜனங்கள் சிரிப்பார்கள்? எப்போது விஷயங்கள் அவர்களுக்கு நன்றாக இருக்கும்? தீ இல்லையென்பதே அவர்களுக்கு நல்லதில்லையா? அதுதான் ரொம்பவும் நல்லது. அதனால் ஒவ்வொருவரும் சிரிப்பார்கள். இப்போது படியுங்கள்.

அவள்: (படிக்கிறாள்) "சிறப்பானதோர் செயல்" அது சலனமற்ற இரவு. மூன்று மணி. சில ஜனங்கள் தூங்கும்போது மற்றவர்கள் உஷாராகக் கண்காணித்தார்கள். ஒரு பெரிய சாம்பல் நிற வீட்டின் நான்காவது மாடியிலிருந்து யாரோ ஒருவர் கத்தினார். "நாங்கள் நெருப்பில் இல்லை." "நல்லது இளைஞனே, புரொகார்சக்," தலைமை தீயணைப்பு அதிகாரி கார்புஷின், நீண்ட கருந்தாடியுடைய, நடுத்தர வயதினனான, உக்கிரேனிய

தீயணைப்பவன் புரோகார்சக்கிடம் சொன்னான். மேலும் தொடர்ந்து "நீ சட்ட திட்டங்களை அனுசரித்து வருகிறாய்". புரோகார்சக் புன்முறுவலுடன் மீசையில் தண்ணீரை விட்டுக்கொண்டான். பொழுது விடிந்து கொண்டிருந்தது.

அவர்: இப்போது இது ஒரு சிறந்த சிருஷ்டி. இனி இதைப் பிரசுரிக்கலாம்.

—தமிழில் நா. கிருஷ்ணமூர்த்தி

★

# தொழுநோயாளிகள்

ஐயா உம் விரல்கள் மூன்று
கிடந்தன. பெற்றுக்கொள்ளும்
அம்மணி. உனதும்கூட.

கால்களின் செதில்கள் அங்கே
கிடப்பதைக் க்ண்டேன்.

உங்கள்
உடம்பினை ஏனிவ்வாறு
உதிர்க்கிறீர் தெருவிலெங்கும்?

கங்கையில் விருப்பைக் கொஞ்சம்
கைவிடச் சொன்ன நூல்கள்
கேணியில் உடம்பைக் கொஞ்சம்
கைவிடச் சொன்னதுண்டோ?

வெள்ளிக்கு முதல்நாள்

ஊரை
வலம்வரும் தங்கட்கின்னும்

உடைமையில் கவனம் வேண்டும்.
அம்மணி தங்கள் மேனி
சிந்தினால்
யாருக்காகும்?

ஞானக்கூத்தன்




குருடர்கள் சிலர் கூடி யானை பார்த்த கதையைப் போலவே செவிடர்கள் சிலர் கூடி சங்கீதம் கேட்ட கதை ஒன்று சமீபத்தில் நடந்திருக்கிறது. வர்க்க இலக்கியத்தின் ஒற்றைத் தனி வாரிசு என்று மார் தட்டிக் கொள்ளும் மாதப் பத்திரிகை ஒன்று ஜெயகாந்தன் ஓர் இலக்கியக் கூட்டத்தில் பேசியவற்றையும், பேசியதாக இவர்கள் கருதிக்கொண்டவற்றையும் விமர்சித்து ஒரு கட்டுரை வெளியிட்டிருக்கிறது.

தனது இலக்கியக் கொள்கைகளை வெளியிட்டு அவர் பேசினார். அவர் பேசியது இன்னதென்று புரிந்து கொள்ளக் கூட முயற்சிக்காமல் வேகமாகக் குறிப்பெடுத்துக் கொண்ட அந்தப் பத்திரிகை நிருபர் செவிடன் கேட்ட சங்கீதம் மாதிரி இவருக்குக் கேட்டதை வைத்து, இவருக்குக் கேட்டதாகத் தோன்றியதை வைத்து, படுகுழியில் விழுவதற்கிருந்த இலக்கிய உலகை தமது வர்க்கச் சங்கிலி போட்டு வலிந்து கட்டி சிஷ்ட பரிபாலனம் செய்துள்ளார்.

இதில் வெட்கப்படக் கூடிய விஷயம் என்னவென்றால் ஜெயகாந்தன் ஒரு விஷயத்தை எந்த Context ல் சொன்னாரோ அதற்குப் புறம்பாக, தேவையான இடத்தில் அவர் பேச்சைக் கத்திரித்து தேவையான இடத்தில் ஒட்டி ஒரு மாண்டேஜ் விவகாரத்தை நடத்தியிருப்பது தான்.

"என்னையே ஒரு லட்சியமாக, இயக்கமாக, வழியாக நான் நம்புகிறேன். நான் இன்றேல் இலக்கிய மில்லை" என்று அவர் சொன்னதாக அந்தப் பத்திரிகை க்வோட் செய்திருக்கிறது.

துரதிருஷ்டவசமாக நானும் அந்தக் கூட்டத்திற்குப் போயிருந்தேன். ஜெயகாந்தன் அப்படிப் பேசியதாக என் காதில் விழவில்லை. சந்தேக நிவர்த்திக்காக நாலுபேரை விசாரித்துப் பார்த்தேன். அவர்களும்

அப்படி அவர் பேசவில்லை என்று ஒப்புக்கொண்டார்கள்.

நான் இன்றேல் இலக்கிய மில்லை என்று அவர் கூறிய தாக ஒரு கூற்றை வெளியிட்டு வேண்டுமென்றே அவருக்கு ஒரு தன்னகங்கார வர்ணம் கொடுத்து அவரைப் பொது ஜன வெறுப்புக்கு ஆளாக்கும் பாஸிஸ்ட் தந்திரம் தான் இதில் எனக்குத் தென்பட்டது.

அடுத்தாற்போல் ஓர் அற்புதமான கூற்று. சமுதாயப் பிரச்சினையை வைத்து எழுத நான் வெட்கப்படுகிறேன் என்று அவர் கூறினாராம்.

எனக்குத் தெரிந்தவரை ஜெயகாந்தன் மட்டும் தான் அச்சு அசலான சமுதாயப் பிரச்னைகளை வைத்து எழுதத் தொடங்கியது முதல் இன்று வரைக்கும் கதைகள் எழுதி வருகிற ஒரே தமிழ் எழுத்தாளர். அவர் கிளப்பிவிடும் பிரச்னைகள் யாவும் பத்திரிகை பத்திரிகையாக இலக்கியக் கூட்டம் இலக்கியக் கூட்டமாக பெருத்த பிரச்னைகளையும் வாதப் பிரதிவாதங்களையும் கிளப்பிவிட்டுக் கொண்டிருக்கிறது என்பது நாடறிந்த விஷயம்.

அவர் சமுதாயப் பிரச்னையை வைத்துக் கதைகள் எழுத வெட்கப்படுகிறேன் என்று சொன்னதாகக் கேள்விப்படுகிறவர்களுக்குச் சிரிப்புத்தான் வரும். இப்படி ஓர் அபாண்டத்தைக் கேட்டதாகக் குறிப்பெடுத்துக் கொண்டு போயிருக்கிறார் அந்த நிருபர். அவர் ஓர் ஹியரிங் எய்ட் வாங்கிக் கொள்ள வேண்டும். அல்லது இப்படியெல்லாம் திரித்து எழுதி ஜெயகாந்தனைத் தவறான உருவம் காட்டிச்சித்தரித்து விட முடியும் என்ற உத்தேசத்தை விட்டுவிட வேண்டும்.

சமுதாயப் பொறுப்புக்களிலிருந்து அவர் நழுவி ஓட முயற்சிக்கிறார் என்று தமது துலாக் கோலால் வெகு சமர்த்தாக நிறுத்திவிட்ட மாதிரி மீசையை ஒதுக்கிக் கொள்கிறார் கட்டுரைக்காரர், பாவம். அவர் வயிற்றெரிச்சல் நமக்குப் புரிகிறது. ஜெயகாந்தன் வர்க்கப் புரட்சிக்கு ஏன் ஃபயர் ஆர்டர் கொடுக்கவில்லை என்று அவருக்கு ஒரே ரத்தக் கொதிப்பு.

கிழக்கையும் மேற்கையும் தமது கைவசமுள்ள மார்க்ஸீய உழக்கிலேயே அளந்து விடுவதில் கம்யூனிஸ்டுகள் மகா சமர்த்தர்கள்.

வேலை கிடைக்கவில்லையா? முதலாளித்துவச் சுரண்டல்.

கர்ப்பமாயிருக்கிற மனைவிக்கு மருந்து கிடைக்கவில்லையா? ஏகாதிபத்தியச்சதி.

இப்படி எதற்கெடுத்தாலும் தங்கள் துஓரேவாய்ப்பாட்டை இடைவிடாமல் புலம்பியே காலம் கழித்துக் கொண்டிருக்கும் கம்யூனிஸ்டுகள் இலக்கியத்தைப் பிடித்து ஜவ்வு மிட்டாயை இழு இழு என்று இழுப்பதற்காக ஒரு கூட்டமாகப் புறப்பட்டிருக்கிறார்கள்.

நானறிந்தவரை ஜெயகாந்த

னின் கதைகளில் சமுதாயப் பிரச்னைகளுக்கு அறிவு பூர்வமான, சாத்திய ரீதியான முடிவு கொடுக்கப்பட்டிருக்கிறது. கத்தியையும் சுத்தியையும் நீட்டிக் கழுத்தை அரிந்து தலையை நொறுக்கும் முடிவாக அது இல்லை, வளர்ந்து வருகின்ற தொழிற் கூடத்தில் தொழிலாளர்களின் வக்காலத்துக்காகப் போய் தொழிற் சங்கம் கட்டி ஸ்ட்ரைக் செய்யத் தூண்டி தொழிலாளர்களின் பிழைப்பைக் கெடுத்துத் தெருவில் நிறுத்தும் தேசவிரோதமான, வளரும் பொருளாதாரத்திற்குக் குந்தகமான கிரிசமன் வேலையாக அது இல்லை.

ஒரு கலைஞன் தான் சந்திக்கும் பிரச்னைகளுக்கு அறிவு பூர்வமாக என்ன பதிலைக் கொடுக்க முடியுமோ அதைக் கொடுக்கும் முடிவாகத்தான் அவரது கதைகள் இருந்திருக்கின்றன. Pseudo பிரச்னைகளை வைத்து ஒரு நூற்றாண்டுக்கு முன் செத்துப்போன 'தமிழ்ப் பண்பாடு'களை வைத்து உடம்பு நலுங்காமல் எழுதும் பேர்வழிகளுக்கு மத்தியில் அந்த ஒரு மனிதன் தான் உயிருள்ள பிரச்னைகளை எழுதி அதற்கு உயிருள்ள பதிலையும் சொல்லிக்கொண்டிருக்கிறார்.

சமுதாயப் பொறுப்புக்களிலிருந்து நழுவி ஓடாத வஸ்தாதுகளான இவர்கள் என்ன எழுதிக் கிழித்திருக்கிறார்கள் என்பதுதான் விளங்கவில்லை. எந்த சமுதாயப் பிரச்னைக்கு எந்த கம்யூனிஸ்டு எழுத்தாளர் என்னென்ன முடிவுகளைக் காட்டியிருக்கிறார் என்பது இன்று வரை பிரம்மரகசியம். அதற்கு அவர்கள் பட்டியல் போட்டுக் கொடுத்தால் நான் ரொம்ப நன்றியுடையவனாக இருப்பேன்.

எவனாவது உண்மையான எழுத்தாளன் தோன்றி எதையாவது எழுதியவுடனே தங்களது கிழிந்த கந்தல் டேப்பைத் தூக்கிக்கொண்டு இவர்கள் அளக்க வந்துவிடுகிறார்கள்.

ஜெயகாந்தன் அதே கூட்டத்தில் ஒரு கதை சொன்னார். ஒரு தேவ விருந்து. உள்ளே எல்லாரும் சம்பிரமமாக ஆனந்தமாகச் சாப்பிட்டு விட்டு எச்சில் இலையை வெளியே எறிகிறார்கள். அதை வெளியே கூடி நிற்கும் நாய்கள் மோந்து பார்த்துவிட்டு 'ஏன் எலும்பு சாப்பிடவில்லை? சாப்பாட்டில் ஏன் குருமா இல்லை?" என்று பெரிதாகக் கோபித்துக் கொள்கின்றனவாம்.

இதை — அந்த நாய்களை — படைப்பாளியின் படைப்பில் குறை காணும் அது இல்லை இது இல்லை என்று நொள்ளை நொட்டை கண்டுபிடிக்கும் விமரிசகர்களுக்கு உவமானமாகத் தான் கூறினார் ஜெயகாந்தன்.

அவர் வாசகர்களை அப்படிச் சொல்லி விட்டார் என்று வாசகர்களை உசுப்பிவிட்டு, அவர்களுக்கு நீலிக் கண்ணீர்

வடிக்கும் மாய்மாலத்தோடு அந்த கட்டுரைக்காரர் ஓர் ஒப்பாரி வைக்கிறார்.

தேவ விருந்து நடக்கிறது. படைக்கிறவன் (செர்வர்) தான் படைப்பாளி; உள்ளே உட்கார்ந்து சாப்பிடுகிறவர்கள் தான் ரசிகர்கள். வர்க்க இலக்கிய விமர்சகர் தமக்கு உவமானமாக சொல்லப்பட்ட நாய்கள் உதாரணத்தை ஏற்றுக் கொள்வதற்குக் கூசி நைஸாக நழுவுகிறாரா? இல்லை, ஜெயகாந்தனுக்கு எதிராக ஆள் சேர்க்கிறாரா என்று எனக்குச் சந்தேகமாக இருக்கிறது.

தமிழ் இலக்கியத்தில் எந்த ஆரோக்கிய மற்ற போக்குகள் வந்தாலும் இந்த மாதிரி புரட்டல் வேலைகள் வருவது நல்லதல்ல. ஒரு வேளை கம்யூனிஸ்டுகளின் யுத்த தந்திரங்களில் இதுவும் ஒன்றோ என்னமோ?

யார் கண்டார்கள்?

இதே ஜெயகாந்தன் கம்யூனிஸ்டுகளோடு சேர்ந்து இருந்து கொண்டே இவ்வளவையும் எழுதியிருந்தால் எந்த கம்யூனிஸ்டுக்கும் எது என்னவென்று புரிந்திருக்காது. கம்யூனிஸ்டுகளோடு இருக்கும் பொழுதுதான் அவர் 'விழுதுகள்' எழுதினார் 'கருங்காலி' எழுதினார். 'பிரம்மோபதேசம்' எழுதினார். இவர்கள் தான் அவருக்குச் 'சிறு கதை மன்னன்' என்று பட்டம் கொடுத்தார்கள். ஏதோ தனிமனிதவாதத்தை அவர் இன்றைக்குத்தான் பேசிவிட்ட மாதிரி விமரிசிக்க வருகிறார்கள் இவர்கள்.

ஏன், காரணம் உங்களுக்குப் புரிகிறதா?

இன்றைக்கு அவர் கம்யூனிஸ்டுகளோடு இல்லை.

★

# இல்லையெனக் கெதிரே!

பற்பமெனத்திகழ் பைங்கழலுன்றன் பல்லவமேவிரலும்
பாவனமாகிய பைந்துவராடை பதிந்தமருங்கழகும்
முப்புரி நூலொடு முன்கையிலேந்திய முக்கோல் தன்னழகும்
முன்னவர் தந்திடு மொழிகள் நிறைந்திடு முறுவல் நிலாவழகும்
கற்பகமே விழிகருணைபொழிந்திடு கமலக்கண்ணழகும்
காரிசுதன்கழல் சூடிய முடியும் கனநற்சிகை முடியும்
எப்பொழுதும் எதிராசன் வடிவழகென்னிதயத்துளதால்
இல்லையெனக் கெதிரில்லை யெனக்கெதிரில்லை யெனக்கெதிரே!

—ஸ்ரீ மணவாள மாமுனிகள்

(ஸ்ரீபெரும்புதூர் கோவில் கல்வெட்டிலிருந்து)

# கபீர்தாஸ்

1398-ல் கபீர்தாஸ் பிறந்தார். இந்திய சரித்திரம், மத விஷயத்தில் புரட்சிகளையும் தலைகுப்புற விழுந்த மாற்றங்களையும் சந்தித்த கால்கட்டம் அது. இஸ்லாம் ஹிந்து சமூகத்தை மூர்க்கமாகத் தாக்கிய வேளை அது. அந்தச் சமயத்தில் பிறந்த கபீர் தேசமுழுதும் பரவியிருந்த சலசலப்பை உற்றுக் கவனித்து அடிப்படையான உண்மையை விட்டு வெறும் சடங்காசார மத நோக்கின் பால் மக்கள் ரத்தம் சிந்தியும் சித்தம் குழம்பியும் அலைந்து திரிகிறார்களே என்று கவலையோடு தமது கவிதைகளை எழுதினார்.

கபீர் முஸ்லிம்களால் வளர்க்கப்பட்டவர். அதனால் முகம்மதிய மதத்தைத் தழுவினார். பின்னர் ராமானந்த தாஸ் என்ற மகானின் தொடர்பு கிடைத்து யோக மார்க்கத்திலிருந்து பக்தி மார்க்கத்திற்கு மாறினார்.

**குக்ஞஜலி**

கபீரிடம் கவனிக்கப்பட வேண்டிய முக்கிய அம்சம், அவர் தனிப்பட்ட கருத்தும் போக்கும கொண்டவர். நல்லதோ கெட்டதோ சரியோ தப்போ எதை ஆரம்பத்தில் வரித்தோமோ அதை வாழ்க்கை முழுவதும் மூர்க்கப் பிடிவாதத்துடன் பிடித்துக் கொண்டிருக்கும் அடிமைக் கொள்கை அவருக்கு அடியோடு பிடிக்காது.

பிரபல ஹிந்தி எழுத்தாளர் ஹஸாரி பிரஸாத் துவிதேதி அவரை உள்ளங்கால் முதல் உச்சந்தலை வரை விடுதலை வேட்கை கொண்டவர் என்றும், சென்றதைச் சிந்திக்க மாட்டார் நிகழ்காலமே எல்லாம் என்று கருதமாட்டார் என்றும், வருங்காலத்தில் எல்லாவற்றையும் தட்டி உதறி விட்டு வெளியே கிளம்பி விடுவார் என்றும் அறிமுகம் செய்கிறார்.

அவரது ஈடிணையற்ற தன்னம்பிக்கை, நாளுக்கு நாள் வளர்ந்து சென்ற சுதந்திர வேட்கை, தடைகளை நொறுக்கித் தள்ளிக் கொண்டு வளர்ந்த போக்கு இவை நம்மைக் கவர்கின்றன.

பக்தி மார்க்கத்திற்காக அவர் கூறிய வாக்குகள் உலக வாழ்க்கையில் மனிதர்களின் தேர்ந்த அனுபவங்களை பிரதிபலிக்கின்றன. கபீர்தாஸரின் கவித்வம் உவமைகளுக்குப் பெயர் போனது. எளிமை, அபூர்வமான உவம ஒற்றுமை இவற்றினால் சட்டென்று அவை நம் நெஞ்சில் நுழைந்து விடுகின்றன.

ஞானம் எந்தத் திக்கி

விருந்து எந்த மதத்திலிருந்து வந்தாலும், உவகையோடு ஏற்றுக் கொள்ளும் ஞான ரதம் இதை வாசகர்களுக்குப் பெருமையுடன் அறிமுகம் செய்கிறது.

### அன்பு

இது அன்பின் இல்லம். மாமனார் வீடு அல்ல, தலையைக் கழற்றி பூமியின் மீது வைத்து விட்டு உள்ளே பிரவேசி, அப்பொழுது தான் இந்த வீட்டில் இருக்க முடியும்.

அன்பு தோட்டத்தில் முளைப்பதல்ல. சந்தையில் விற்கப்படுவதுமல்ல. ராஜாவோ பிரஜையோ எவன் வேண்டுமானாலும் தன் தலையை விலையாகக் கொடுத்து விட்டு இதை எடுத்துச் செல்லலாம்.

**வையவன்**

தலையைத் தர முடியாத லோபி பிரேமை பிரேமை என்று எதற்காகப் பேசுகிறான்? பிரேமைக் கோப்பையைப் பருகுபவன் தலையை விலையாகக் கொடுத்துத் தீர வேண்டும்.

க்ஷணத்திலே உயர்ந்து க்ஷணத்திலே தாழ்ந்து விடுகிறதே அது அன்பல்ல; எது தேகத்தில் குறைவின்றி உறைந்து கொண்டிருக்கிறதோ அது தான் அன்பு.

நான் இருந்தேன். அப்பொழுது குருநாதன் இல்லை. இப்பொழுது குருநாதன் இருக்கிறார். நான் இல்லை. அன்பின் சாலை மிகவும் குறுகியது. அதில் ஏககாலத்தில் இருவர் சேர்ந்து போக முடியாது.

பிரேமை உண்டாயிற்று. நெகிழ்ந்தும் குழைந்தும் நெஞ்சில் அது குடி புகுந்து விட்டது. ஒவ்வொரு மயிர்க்காலும் அன்புக்குரியவனை நாடிக் கூவுகிறது. இனி வாய்ச் சொல்லுக்கு என்ன தேவை?

சாவுக்கு அஞ்சிக் கொண்டிருக்கும் வரை ஒரு பேர்வழி அன்பனாக மாட்டான். அன்பின் இல்லம் அதற்கும் அப்பால் தொலை தூரத்தில் இருக்கிறது. அதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

நெருப்பின் உஷ்ணத்தைப் பொறுப்பது எளிது. வாளின் கூர்மையும் எளிமையானது தான். ஆனால் அன்பை மட்டும் சமநிலையில் என்றும் காப்பாற்றுவது மிகவும் சிரமமான காரியம்.

கஞ்ஞுடி, ஈயம் போன்ற பலமற்ற மனிதர்களால் அன்பை வளர்க்க முடியாது. வைரமும் தங்கமும் தான் சாணையைத் தாங்க முடியும்.

### சூட்சும மார்க்கம்

அங்கேயிருந்து ஒருவரும் வெளியே வருவதில்லை. ஓடிச் சென்று கேட்க. இங்கேயிருந்து தான் எல்லோரும் போகிறார்கள், மூட்டையைச் சுமந்து கொண்டு.

போக வேண்டிய ஊரின் பெயர் தெரியவில்லை. தெரி

யாமல் எங்கே போவேன்? நடந்து நடந்து யுகம் கடந்துவிட்டது. இதோ கால் மைலில் உள்ள கிராமம் தான். ஆனாலும் கிட்டவில்லையே.

எங்கே எறும்பும் ஏற முடியாதோ, கடுகும் தங்க முடியாதோ அங்கே மனத்தைக் கூட்டிக் கொண்டு போய் ஸ்தாபி. அந்த மார்க்கத்தை அப்பொழுது அடைந்து விடலாம்.

(வழியைக் குறை சொல்லாதீர்கள்) வழி என்ன செய்யும்? வழிப்போக்கன் கவனித்து நடக்கவில்லை. அவன் வழியை விட்டு விட்டுப் பாழும் வழியில் போய்க் கொண்டிருக்கிறான்.

சாவதானால் செத்து முடி, சங்கடம் ஒழியும். இது என்ன சாவு, சும்மா சும்மா ஒரு நாளில் நூறு தடவை?

### பரிசோதகன்

சந்தை சரியில்லை என்றால் அங்கே வைரத்தைத் திறந்து காட்டாதே, இறுக்கி முடிச்சுப் போடு. எழுந்து வழி நட.

வைரத்தை நன்கு ஆராய்ந்து பார்த்துத் தான் வாங்கினேன். வீட்டிற்குக் கொண்டு வந்து சம்மட்டியால் அடித்தேன். உடைந்து போகாமல் அடி தாங்கிற்று. வைரம் உத்தமமானது என்று அறிந்து கொண்டேன்.

முத்தைத் தேடி உண்ணப் போகும் அன்னம் கூழாங் கற்களை நம்பியா புறப்படும்? அது கற்களுக்குத் தலை வணங்காது. முத்து கிடைத்தால் தான் புசிக்கும்.

சந்தனக் கட்டை அயல் தேசத்திற்குப் போயிற்று. அங்கே பார்த்தவர்கள் எல்லோரும் அதைப் புரசங் கட்டை என்றனர். பின்னால் அடுப்பிலே அது எரிய எரியத் தான் உண்மை விளங்குகிறது.

ஞானம் என்ற பொக்கிஷ அறையைப் பேச்சுக்கள் இன்றி பூட்டிவை. சரியான பரிசோதகன் வருவான். அப்போது திற. இனிமையான வார்த்தைகள் தான் திறவு கோல்கள்.

உலகத்தில் எல்லா இடத்திலும் ரத்தினமும் உண்டு; கற்களும் உண்டு; எல்லோரும் போய்ப் பார்த்து விட்டுத் தான் வருகிறார்கள். ஆனால் அவற்றின் பேதா பேதம் அறிந்த ஆராய்ச்சிக்காரர்கள் எத்தனை பேர்?

வைரம் கடைத் தெருவில் கிடந்தது மேலே அமோகமான அழுக்கு அசட்டு மனிதர்கள் பலர் அதைப் பார்த்துக் கொண்டே கடந்து சென்று விட்டார்கள். பரிசோதகன் தான் அதை எடுத்துக் கொண்டான்.

### சொல்லும் செயலும்

அஞ்ஞானி இரவும் பகலும் செயல் இல்லாமலேயே வெறும் பேச்சுப் பேசுகிறான். காதால் கேட்ட வார்த்தைகளையே திருப்பி நாய் போலக் குரைத்துத் திரிகிறான்.

அங்குமிங்குமாக பிறர் சொன்ன சொற்களைக் கல்லி எடுத்து வந்து ஞான வாக்குகள் செய்து கொண்டு வருகிறீர்கள்! எச்சில் இலையை

நக்கி எவ்வளவு நாள் வரை வாழ முடியும்?

தனக்குக் குடிக்கத் தண்ணீர் கிடையாது. மற்றவர்களுக்குத் தானம் செய்வதோ பால். தன் மனம் தைரியம் அடையவில்லை. மற்றவர்க்கு தைரியம் ஊட்டுகிருன் அவன்.

வார்த்தைகளைக் கோர்த்துக் கோர்த்து ஞான வாக்குகளைப் பேசுகிருர்கள். வெற்றி வீணுன மார்க்கத்திற்குப் போய்விடுகிறது. வெளியேறிய ஜலத்தைக் குடிக்கிற உத்தேசமும் இல்லை. இருக்கிற நீரை வெளியேற்றிக் குடிக்கும் ஆவலுமில்லை.

வழி நடக்கையில் தவறி வீழ்ந்தவனைப் பற்றி ஒரு குற்றமும் இல்லை. உட்கார்ந்தே இருக்கிருனே அவன் தலைக்குத்தான் கோடித் தூஷணைகளைக் கொட்ட வேண்டும்,

சொல்வதற்குப் புலர் கிடைக்கிருர்கள். ஆனல் சொன்ன சொல்லைப் பின்பற்றி நடக்க ஒருவரும் கிடைக்கவில்லை. தன் வாக்கைப் பின்பற்ற முடியாமல் வெறும் உபதேசியாக இருக்கிருனே, அவனைச் சட்டை செய்யாதீர்கள். அவன் போகட்டும் விடுங்கள்.

சான்ருேர்

சிங்கங்களின் மந்தை என்ற ஒன்று இல்லை. அன்னங்கள் அணிவகுத்து நிற்காது. ரத்னங்கள் மூட்டை மூட்டையாகக் கிடைக்காது. சான்ருேர்களும் மலிந்துபோய் கூட்டமாக இருக்க மாட்டார்கள்.

சான்ருேன் என்று அழைக்கப்படும் நிலை மிகவும் அல்லல் வாய்ந்தது. பெரிய ஈச்ச மரம் மாதிரி. ஏறிஞல் பிரேமை என்ற கள் கிடைக்கும். தவறி விழுந்தால் தலை சுக்கு நூரு கும்.

நல்லோர் சேர்க்கை ஏற்பட்டு என்ன ஆய்விட்டது? இதயம் அதே மாதிரி கல்லாய்த் தானிருக்கிறது. ஒன்பது கஜம் வரை தண்ணீர் மேலேறிஞலும் முனை கூட நனையவில்லையே.

மாட்டோடு பழக நேரிட்டு விட்டது. அதற்காக நினைத்து நினைத்துச் சலித்துக் கொள்ளாதே. செழிப்பில்லாத பூமியில் இரண்டு மடங்கு விதை போட்டாலும் முளைத்து வரப் போவது ஒன்று மில்லை.

மொட்டையடித்துக் கொண்டால் ஹரி கிடைப்பான் என்ருல் எல்லோரும் மொட்டை யடித்துக் கொள்வார்களே! செம்மறியாட்டை எவ்வளவு முறை மொட்டை யடிக்கிருர்கள், அது வைகுண்டம் போகவில்லையே.

★

# காலமென்ன காலம்?

கற்றதெல்லாம் மூடமாக்கும்
காலமென்ன காலம்;
கற்கக்கற்கத் தெளிவுகாட்டும்
காலமென்ன காலம்!

கண்ட உண்மை கனவாய்ப்போகும்
காலமென்ன காலம்;
காணக்காண உண்மையூட்டும்
காலமென்ன காலம்!

கொண்டதெல்லாம் கழியச்செய்யும்
காலமென்ன காலம்;
கொள்ளக்கொள்ளத் தந்துவைக்கும்
காலமென்ன காலம்!

அறிந்தமட்டில் வியந்து நிற்க
மனிதன் என்ன மாடா?
வாழ்ந்தவழியில் தொடர்ந்துசெல்ல
வாழ்க்கை ஒரே கோடா?

வாழ்ந்துசென்ற மனிதர்க் கெலாம்
வணக்கம்பல கோடி;
வாழப்போகும் என்னைத் தேக்க
எவருக்குண்டு நீதி?

காலமென்ன காலம்;
கருணைமிக்க காலம்!
கோலமென்ன கோலம்;
கோட்டைத் தாண்டின் எங்கும்!

—சித்ர

# அநுபவம்
EXPERIENCE

# வெளிப்பாடு
EXPRESSION

# நவீன ஓவியம்
MODERN ART

வெ. சாமிநாதன்

## 5

பறந்து மறைந்த பறவைகளின் சலனத்தில் மறைவில் பிரபஞ்ச சலனத்தையும் மறைவையும் கண்டதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். புல்விதழை ஆராயும் புகி யோயி கலைஞனையும் நினைவில் கொள்ளுங்கள். அந்த மனத்தை. அநுபவத்தை நம் தத்துவங்களில் மட்டுமல்ல. ஒரு அணுவின் அமைப்பில் Solar system-த்தைக் காணும் Modern physics-ல் மட்டுமல்ல, ஒவ்வொன்றிலும் நீங்கள் காணலாம். இதை பல ரூபங்களில் பலநிற வேறுபாடுகளில் காணலாம். Oscar Wilde ஒரு இடத்தில் சொல்லியிருக்கிறார். "When I see a child crying, to me the whole world cries."

Edward Munch என்னும் Norwegian artist-ன் CRY என்றொரு ஓவியம் பார்த்திருக்கிறீர்களோ, தெரியுமோ என்னவோ. ஒரு சிறு ஓடை. அதன்மேல் ஒரு பாலம். பாலத்தின் மறுமுனையிலிருந்து ஓடையின் அக்கரையிலிருந்து ஒரு நீண்ட வளைந்து செல்லும் பாதை. அப்பாதையின் ஒரு மருங்கில் வளர்ந்து செழித்த மரங்கள். மறுபுறம் வெட்ட வெளி. ஆகாயம், மேகங்கள். பாலத்தின் அக்கரையில், பாதையில்

ஓர் உருவம், கதறும் உருவம், இந்தச் சித்திரத்தைப் பார்த்தால் நீங்கள் நினைக்கலாம். "இதை விட நன்றாக நம்ம ஆனந்த விகடன் கோபுலுவுக்கு வரைய வரும். பாலு பிரதர்ஸ் கொண்டையா ராஜு எவ்வளவோ தேர்ந்த கலைஞர்கள்" என்று நீங்கள் நினைப்பீர்கள். இந்த ஆளுக்கு ஒடுவதாகப் படம் போடவே தெரியவில்லை என்று தீர்மானித்து விடுவீர்கள். நீங்கள் வேண்டுவது Edward Munchன் உலக மல்ல. அவனுடைய அனுபவமல்ல. நீங்கள் வேண்டுவது மாறாக ஒரு Box Camera. Edward Munch ஒரு அமெச்சூர் போட்டோகிராபர் அல்ல. 120 ரூபாய் சம்பளம் வாங்கும் ஸ்டுடியோ வேலையாள் அல்ல. பாலு பிரதர்ஸும், கோபுலுவும், கொண்டையா ராஜுவும் செய்யும் வேலையை இந்த வேலையாள் ஒரு Box Camera-வால் பல நூறு மடங்கு நேர்த்தியாகச் செய்து விடுவான். இந்த வேலையில், படைப்பில் அநுபவம் இல்லை, உணர்ந்த உலகம் இல்லை. Edward Munch-ஐயோ, இவற்றை அறிவதன் மூலம் நான் என்னையோ என் உலகத்தையோ காண்பதில்லை. உங்களையும் உங்கள் உலகத்தையும் நீங்கள் காண்பதில்லை.

Edward Munch-ன் பாஷை வேறு. அவன் உலகம் வேறு. அவன் பாஷை, அவன் கையாளும் நிறங்களில் அவன் Brush strokes-ல் இருக்கிறது. அந்த பாஷை உங்களுக்கு அந்நியமான பாஷை. அது அந்நியமானதானதால் அம்மாதிரி ஒரு பாஷை இல்லை, அநுபவமே இல்லை, உலகமே இல்லை, ஆதலால் Edward Munch இல்லை, என்று ஆகி விடாது.

அவன் பாஷையைப் புரிந்து கொள்வதில் ஏதும் கஷ்டம் இல்லை. உங்களுடைய தீர்மானமான, கண் பட்டை போடப்பட்ட குதிரைப் பார்வைகளை, பழக்கத்தினால் யந்திரமாக எதிர்பார்ப்பவற்றை, preconceptions-ஐ மறக்க வேண்டும். உங்களுக்குத் தெரிந்ததையே; உங்களுக்குப் பழக்கமானதையே, உங்களுக்குப் புரிவதையே எங்கும் பார்க்க வேண்டும், எல்லோரும் சொல்ல வேண்டும் என்பதில் உங்களுக்கு எவ்வளவு திருப்தி! உங்களை நீங்களே கண்ணாடியில் பார்த்துக் கொண்டு உங்கள் அழகை ரசிப்பதில் உங்கள் பெருமைகளில் மயங்குவதில் உங்களுக்குத்தான் எவ்வளவு ஆனந்தம்! அப்படிப் பார்த்துக் கொள்வதால் இன்னொருவரைச் சந்தித்ததாகாது என்பது ஏன் உங்களுக்குத் தெரிவதில்லை; தெரிவதில்லை என்ற அறியாமை ஒரு புறம். உங்களைத் தவிர வேறு யாரும் இல்லை, இருக்க முடியாது, இருந்தாலும் அந்த அந்நியனின் இருப்பை அங்கீகரிக்க மாட்டேன் என்ற அகங்காரம் அது. தனக்குப் புரியாததை, தனக்கு அந்நியமான

தை, தன் கிரஹிப்பிற்கு மீறியதைக் கண்டுவிட்ட தன் தாழ்வு மனப்பான்மை உங்களுடைய innate inferiority, அந்த அந்நியத்தை மறுக்கச் செய்கிறது. உலகமே உங்களைத் திரும்பக் காட்டும் கண்ணாடியாக, உங்களுக்குப் புரிந்த உங்கள் சொற்களையே திரும்பச் சொல்லும் கிளிப்பிள்ளையாக இருந்து விட்டால், (இருந்துவிட வேண்டும் என்று விரும்புகிறீர்கள், நிர்ப்பந்திக்கிறீர்கள், கட்டளையிடுகிறீர்கள்) பின் உங்கள் இருண்ட சாம்ராஜ்யத்தில் நீங்கள் தான் சக்கரவர்த்தி.

உங்கள் தாழ்வு மனப்பான்மையை மறந்து விடுங்கள். ஒரு கலைஞனின் முன், அவன் உலகத்தின் முன் நிற்கும் பொழுது, உங்களுக்குத் தெரியாத ஒன்றை, அவன் சொல்ல இருக்கிறான், அவன் உலகம் உங்கள் உலகத்திலிருந்து மாறுபட்டது என்ற நினைப்போடு அவனை, அவன் உலகத்தை அணுகவேண்டும். ஆகவே அவன் படைப்பின் முன் கால்களை மண்டியிட்டு, அவனைத் தலை நிமிர்ந்து பாருங்கள்.

அநுபவத்திற்கு சப்தக் குறியீடுகள் எவ்வளவு உறவோ, உறவில்லாமையோ கொண்டதோ, அவ்வளவு உறவும், உறவில்லாமையும் மற்ற குறியீடுகளுக்கும் வெளியீட்டுசாதனங்களுக்கும் உண்டு. Oscar wilde தன அநுபவத்தை வார்த்தைகளில் சொன்னது நியாயம் தான் என்றால், Edward Munch அத்தகைய தன் அநுபவத்தை நிறங்களாலும் தன் Brush strokes களாலும் சொல்வதும் நியாயம்தான். இதற்கும், சப்தங்களுக்கு உள்ள அளவு உறவும் உறவில்லாமையும் உண்டு. சப்தத்திற்கு மாத்திரம் அநுபவத்துடன் உறவு உண்டு என்று அங்கீகரித்து விட்டு, நிறங்களுக்கு, Brush strokesகளுக்கு, சங்கீதத்திற்கு அநுபவங்களுடன் உறவு இல்லை என்று சொல்வது சரியில்லை. உங்களிடம் intellectual honesty, aesthetic integrity உள்ளதா இல்லையா என்பதை இவைகளுக்கெல்லாம் நீங்கள் அளிக்கும் சம அங்கீகாரத்தைப்பொருத்துத் தீர்மானிக்க வேண்டும்.

இரண்டாவது வாதம்: குழந்தையின் அழுகையை, துக்கத்தை உலகத்தின் துக்கமாக Oscar wilde காணும் போது அவனுடைய அநுபவத்திற்கு (an experience and response that is very much personal) எவ்வளவு தகுதி (Validity) உண்டோ அவ்வளவு Edward Munch-க்கும் உண்டு.

Edward Munch-ன் சித்திரத்தில் நீங்கள் பெரிதாக நினைக்கும் தத்ரூபம் கிடையாது. நீங்கள் கூட வரைந்து விடலாம் என்று நீங்கள் நினைப்பீர்கள். மகாராஜபுரம் விஸ்வநாதய்யர் பாட்டைக் கேட்டு "இது என்ன பாட்டு? இது மாதிரி ஊளையிட எனக்குத் தெரியாதா என்ன?" என நான் நினைத்தால் என்னை எவ்

வளவு பெரிய புத்திசாலி என்று நினைப்பீர்களோ, அவ்வளவு பெரிய புத்திசாலியாகத்தான் தத்ரூபத்தை சித்திரத்தின் ஆதியும் அந்தமுமாக நினைக்கும், கட்டளையிடும் உங்களையும் நான் நினைப்பேன். தத்ரூபம் தான் உரைகல் என்றால், சங்கீதமே இராது; வெறும் பேச்சுத்தான், நம் பேச்சின் ரிகார்டுகள்தாம் கலையாகிவிடும் என்பதை நீங்கள் சிந்தித்துப்பார்ப்பதில்லை. இம்மாதிரியான aesthetic dishonesty-க்கு lack of intellectual integrity-க்குப் பின்னர் வருகிறேன். இப்போதைக்கு, Edward Munch-ல் இல்லாத தத்ரூபத்திற்காக நீங்கள் முகம் சுளிக்கக் கூடாது என்கிறேன். Edward Munch கண்ட உலகம், உங்களுக்குச் சொல்ல விரும்பும் உலகம், "தனி ஒருவனுக்கு......... இல்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்" என்ற பாரதி உலகம் தனிமனிதனிடம், அவன் சுகத்தில், சோகத்தில் ஜகத்தின் சோகத்தை சுகத்தைக்கண்ட உலகம். பாரதிகூடஅந்தத்தனிமனிதன் வெங்கட்ராமனா, சாமிநாதனா என்ற பெயர், ஊர், விலாசம் ஏதும் கொடுக்கவில்லைEdward Munch-ன் Cry என்ற சித்திரத்தில் அழும் ஜீவனை நீங்கள் கண்டால் போதும். அது ஆணா, பெண்ணா, குழந்தையா கிழவனா என்று கூட நீங்கள் காண முடியாது, அவசியமில்லை என்ற காரணத்தால், அந்த அழும் ஜீவன் மிகக் குறைந்த பட்சக் கோடுகளால்—(அவை கோடுகளும் அல்ல. Brush-க்குப் பதிலாக கத்தியினால் சின்ன சின்ன தீட்டல்களாக நிறங்கள் வழிக்கப்பட்ட daubing Process மூலம்) ஆக்கப்பட்டுள்ளது. இந்த daubs அழும் உருவத்தை—அழும் போது உங்கள் உதடுகள், முகம், புருவங்கள் கோணிச் செல்கின்றனவே அதுபோல, அக்கோணல்களின் தொடர் அலையாக, கைகால்கள் உடல் முழுதுமே அழுகையில் கோணி, உங்கள் உதடு துடிப்பது போல, உடலே துடிக்கும் தோற்றத்தில்—ஒரே சீரான daubs களால் அச்சித்திரம் முழுதும் வரையப் பட்டுள்ளது. இந்த அழும் சதைக் கூட்டத்தின் தொடராக, அந்த ஜீவனைச் சுற்றியுள்ள பாலம், ஓடும் நீரோடை, வானம், மேகங்கள், நீண்டு குறுகி வளைந்து செல்லும் பாதை, பாதையோர மரங்கள் எல்லாமே அந்த ஜீவனின் அழுகையை தாமும் பகிர்ந்து எதிரொலித்து அழுவதுபோல் தோற்றம் கொள்கின்றன. ஏனெனில் அவையும் இதே daubing process-னால் தீட்டப்பட்டவை இது வெறும் கற்பனை அல்ல. உண்மை அநுபவம். உங்கள் மனிதாபிமானத்தைப் பொருத்தது இது. உங்கள் அளவு கடந்த அன்பிற்கு ஆளான ஜீவனைத் திடீரென இழந்துவிட்டால் உலகமே வெறிச்சென்று ஆகிவிட்டதை, ராம்

லீலா மைதானம் பெருந்திரள் கூட, உங்களுடன் உறவற்ற, அன்பற்ற, உயிரற்ற வெறும் நிழல் கூட்டமாக ஆகிவிடுவதை நீங்கள் உணர்ந்திருக்கலாம்.

உங்கள் பிரத்யேக, இருட்டறை மனச்சாய்வுகளை, அறியாமையை ஒதுக்கி வைத்து விட்டு அடுத்தவனின் உலகு எத்தகையது என்று அறியும் நோக்கோடு எதிர்கொள்ள வேண்டும். உங்கள் பாட்டியின் நீட்டிய கால்களின்மேல் தலைவைத்து "ஒரே ஒரு ஊரில் ஒரே ஒரு ராஜா இருந்தானும். அவனுக்கு......" என்று கதை கேட்டுவிட்டு, "ஜானகிராமனே, க. நா. சுப்பிரமணியமோ ஏன், இந்தமாதிரி கதை சொல்லவில்லை. இவர்களுக்கு என்ன தெரியும்?" என்று நீங்கள் வினை எழுப்புவதில்லை.

இந்த தத்ரூபம் என்ற பார்வை, என்றுமே எந்த நாட்டிலுமே இருந்ததில்லை. இடையில் சமீபகாலத்தில் ஏற்பட்ட சீரழிவு இது. நம்முடைய Prudery, false puritanism, ஏதோ ஒன்றை இல்லாத ஒன்றை நம் பண்பாடு என்று சொல்லி நாம்போடும் கூச்சல்கள், நம் பேச்சுக்கள், நடவடிக்கைகள் எல்லாம் நம்முடைய சமீபத்திய சீர்கேட்டின் அறிகுறியாவதுபோல் இந்த தத்ரூப சித்தாந்தமும் சமீபத்தியது. சீரழிவின் அறிகுறி. நாம் ஆராய்ந்து பார்த்தால் தத்ரூபம் என்ற ஒன்று எதிலுமே இல்லை என்பது தெரியும். தத்ரூபம் என்பது மிகவும்மேலெழுந்தவாரியான, ஆழமற்ற ஒன்று. இது உண்மையில் நம் நடைமுறை சௌகர்யங்களுக்காக நாம் உண்டாக்கிக் கொண்டுள்ள ஒரு Pragmatic artificiality. தத்ரூபம்என்றால் எதன் தத்ரூபம்? உணரும், பார்க்கும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ரூபம், தோற்றம் கொள்கிறது என்னும்போது, நம் ஒவ்வொருவர் உலகமும் தனித்தனி என்றாகி விட்ட பொழுது தத்ரூபம் என்று எதைச் சொல்வது? தத்ரூபம் என்று நீங்கள் வேண்டும்பொழுது, "என்னைச் சிரமப்படுத்தாதே" என்று வேண்டுகிறீர்கள். ஒரு உணர்வுள்ள மனிதனுக்கு தத்ரூபம் என்றஒன்று இல்லவே இல்லை. அவன் காணும் ரூபம்தான் உண்டு. நீங்கள் ஆழச்செல்ல முடியாதவாறு, உக்கிரமாக உணர முடியாதவாறு, மேலாகவே நின்றுவிட்டுக் காண்கிறீர்களே, உங்களைப் போன்றவர்களுடன் அவர்களும் நீங்களும் அன்றாட நடைமுறை சௌகர்யங்களுக்காக அவரவர் மேல்வாரியான் ரூபத்தோற்றத்திற்கு, அநுபவத்திற்கு ஒரு சமரசம் செய்து கொண்டு இந்த ரூபத்திற்கெல்லாம் ஒரு அச்சை (type) நிர்ணயித்து வைத்துக்கொண்டிருக்கிறீர்களே, அந்த ரூபத்தை, அநுபவத்தை தெய்வ சாந்நித்யம் கொண்டதாக, ரூபமாக கொண்டிருக்கிறீர்கள். அந்த ரூபம், அநுபவம், ஆழ்ந்த உணர்வுள்ள ஒரு

வனின் ரூபத்துடன், அநுபவத்துடன் ஒத்திசையா விட்டால் அதில் தத்ரூபம் இல்லையென அவனுடைய உலகத்தை நிராகரித்து விடுகிறீர்கள்.

இதெல்லாம் ஏதோ புதிதாக ஏற்பட்டவை என்றும் நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் கலாச்சாரத்திற்கு, பண்பாட்டிற்கு அப்பாற்பட்டது, எனவே, வெறுத்து ஒதுக்கத்தக்கது, நிராகரிக்கத் தக்கது என நிச்சயித்து விடுகிறீர்கள். சரி. அந்த உங்கள் கலை, பண்பாடுதான் என்ன? அதில் தத்ரூபம் எங்கிருக்கிறது என்று பார்க்கலாமா?

எதிலிருந்து ஆரம்பிக்கலாம்? மதுரை நாயக்கர் காலச் சிற்பங்களை எடுத்துக் கொள்ளலாமா? அல்லது ராஜ ராஜனின் கங்கை கொண்ட சோழபுரச்சிற்பங்களை எடுத்துக் கொள்ளலாமா? அல்லது, பல்லவர்கால கைலாச நாதர் கோயில் சிற்பங்களையா! அல்லது கல்யாணி சாளுக்கியர்களின் ஹொய்சால சிற்பங்களையா? அல்லது கிருஷ்ண தேவராயர் காலத்து ஹம்பி சிற்பங்களையா? அல்லது சாளுக்கியர் கால நாகார்ஜுன கொண்டா சிற்பங்களையா? அல்லது சாளுக்கிய — குப்த ஒன்றியை பைக்காணும் கொணாரக் சிற்பங்களிலா? அல்லது எல்லோராச் சிற்பங்களிலா, அல்லது கிரேக்கர் பாதிப்பு பெற்ற காந்தார சிற்பங்களையா? அல்லது பாலர்களின் நலாந்தா சிற்பங்களையா? இவற்றில் எதில்; எந்த சிற்ப முறைகளில், எந்த சிற்பங்களில் தத்ரூபத்தைக் காண்கிறீர்கள்? அல்லது எந்த ஓவிய முறையில்தத்ரூபத்தைக் காண்கிறீர்கள்? . சித்தன்ன வாசல்? அஜந்தா? குகை ஓவியங்களில்? அல்லது தஞ்சாவூர் கிருஷ்ணன் படத்தில்? எதில் தத்ரூபம் காண்கிறீர்கள்? இவையெல்லாம் distorted images தான் என்பது ஏன் உங்கள் கண்களுக்குத்தெரியவில்லை? கும்பகோணம் ராமஸ்வாமி கோயில் சிற்பங்களின் Vital statistics எவ்வளவு தான் scintillating ஆக இருந்தாலும் அதுவும் deliberate distortion of human form to conform to an ideal in the sculptor's conceptual image என்பதும், நீங்கள் கொண்டுள்ள தத்ரூப image இல்லை என்பதையும் ஏன் மறந்து விடுகிறீர்கள்? சாஸ்தா கோயில் வாசலில் நிற்கும், மீசையும் அரிவாளுமாக நிற்கும், பூதாகார உருவத்தைப் பாருங்கள். அங்கிருக்கும் குதிரை, யானைகளைப் பாருங்கள். புராதன தொல்பொருள் ஆராய்ச்சியாளர் தோண்டியெடுக்கும்terracota clay figures ஐப் பாருங்கள். மொகஞ்சதாரோ, ஹரப்பா seal களைப் பாருங்கள். பங்கூரா குதிரைகளைப் பாருங்கள். உங்கள் தத்ரூப வேண்டுதலுக்கு அடிபணியும் ஒரு கலைப்படைப்பை எனக்கு எங்கிருந்தாவது காட்டுங்கள். உங்களுக்குக்

கிடைக்கும் என்று கூட தோன்றுகிறது. எங்கே? நானே சொல்லி விடுகிறன். மௌன்ட்டுரோட் ரவுண்டாணாவில், சென்னைக் கடற்கரையில் Maidenform brazzierre அணிந்து நிற்கும் கண்ணகியைக் காட்டுவீர்கள். ஆனால் நான் கேட்டது ஒரு கலைப்படைப்பை உங்கள் aberration — ஐ அல்ல.

நம் சித்திரங்களிலேயே நீங்கள் பார்க்கலாம். அஜந்தா, சிகிரியா, சித்தன்னவாசல் உருவங்கள் distort — செய்யப்பட்டவை. நீங்கள் அறிந்த ரூபத்தில் வருவது என்பது எதையுமே சொல்லாததாக, கலைஞன் தன் பார்வையைச் சொல்லாததாக ஆகிவிடும். சாகித்யத்தின் மொழிரூபமேடு பள்ளங்களைப் பிசிறுகளை, தொங்கும் உதிரிகளை, இழைத்து, தன் இசை ரூப அச்சில் சங்கீதக்காரன் பதித்து விடுவதுபோல, நமது உடற்கூறுகளின் பிசிறுகளை, தொங்கும் உதிரிகளை எல்லாவற்றையும் அவனது லட்சிய ரூபத்தின் அச்சுக்கு இசைய இழைத்து விடுகிறான் இக்குகை ஓவியன். இவையெல்லாம் தசை நார்களோ, எலும்புகளோ, கடின பிசிறான ஓரங்களோ, எதுவுமே இல்லாது strcamlined figures அஙகஙகள், கண்கள், தலை அலங்காரங்கள் மேகப்பின்னணிகள் சுற்றியிருக்கும் உருவங்கள் எல்லாமே ஒரு மொத்த இசை ரூபத்தின் பல்வேறு இழைகள்.

நம் தஞ்சாவூர் சித்திரங்களைக் காண்பீர்களானால் கண்ணணின் முன், ஏதோ ஒரு தெய்வத்தின்முன் கைகூப்பி நிற்கும் பக்தர்கள், அது கோபிகா ஸ்திரீகளாக இருந்தாலும் சரி, அர்ச்சகப் பெருமான் ஆக இருந்தாலும் சரி யசோதையாக இருந்தாலும சரி அல்லது தெய்வத்தின் இரு பத்தினிகளாக இருந்தாலும் சரி, அவை எல்லாமான கூட்டம் Group photo ஆக இராது. தெய்வம் நீங்கலாக மற்ற எல்லாம் ஏதோ பிள்ளையார் காலடியில் தலை நீட்டிப் பார்க்கும் மூஞ்சுறுகளாக, சிறு சிறு உருவங்களாகத் தீட்டப்பட்டிருக்கும். தத்ரூபமா இது? நமது சிறுமை, சிற்றுருவத்தால்சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு மட்டுமல்ல, எங்கேயும் தான்.

ஐரோப்பிய ஓவியம், சிற்பம் இவற்றின் ஆதிகாலத்திலிருந்து எடுத்துக்கொள்ளுங்கள். கிரேக்க சிற்பங்கள் எவையும் தத்ரூபமானவை அல்ல. அவையெல்லாம் idealized distortions. அவர்களுக்கென ஒருதனிConception of beauty இருந்தது. ஐரோப்பிய ஓவிய ஆரம்பங்களை எடுத்துக் கொள்ளுங்கள். கியோட்டோவின் சுவர் சித்திரங்கள்: More than the recognizability of the human form, which are not of the photographic realism variety, the attempt of Giotto has been, the balancing of human forms with the surroun-

ding presence. Human figures are taken not as forms that are human, but first as forms. Nothing more than forms. & what is achieved is the re-arrangement of these forms, balancing one another in an architectonic order. Raphel-ன் School of Athens என்ற சுவர்ச் சித்திரத்தைப் பார்த்தீர்களானால் இந்த architectonics என்ற concept அதிகம் விஸ்தரிக்கப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். இச் சித்திரம் வெறும் Group Photo இல்லை. இங்கு மனித உருவங்கள் வெறும் formsதான். அங்கு நீண்டு உயர்ந்திருக்கும் தூண்களைப்போல, மாடிப்படிகளைப் போல, மனித உருவங்களும் வெறும் உருவங்கள் (forms), இச்சித்திரம்,—மனிதர்கள், தூண்கள், மாடிப்படிகள், கட்டிடம் எல்லாம் சேர்ந்த ஒரு architectonic arrangement. எங்கோ உட்கார்ந்திருக்கும் உருவம் எழுந்து நின்று விட்டாலோ அல்லது இடது புறம் இருக்கும் மாடிப்படி வலதுபுறம் மாறிவிட்டாலோ இந்த architectonics பாதிக்கப் பட்டுவிடும். இதைப் புரிந்து கொள்ள, இதுமாதிரி forms என்றும் architectonics என்றும் ஏதும் உண்டா என்று கேள்வி எழுப்புகிறவர்கள் புரிந்துகொள்ள அவர்கள் சங்கீதம் தெரிந்தவர்களாக இருந்தால் எந்த ஒரு ராகத்தினரும் இசை அமைப்பை, மாற்றி, ஷட்ஜத்தையும், நிஷாதத்தையும் மாற்றி அவற்றின் ஒழுங்கு தவறி பாடச் சொல்லுங்கள். இரண்டாவது சோதனை, அவ்வாறு பாடும் பொழுது, சங்கீதமும் தெரியாதவனை அவ்வொழுங்கு மாற்றத்தைக் கண்டறியச் சொல்லுங்கள்.

இதை எதற்காகச் சொல்கின்றேன் என்றால், abstract forms-ஐப் பற்றிப் பின்னர் நான் பேசவேண்டிவரும். இது என்ன abstract forms இழவு என்று சலிப்பீர்கள். சங்கீதம் தெரியாதவன் இதென்ன இழவு ஷட்ஜமும், நிஷாதமும் என்று சலிப்பதுபோல. சங்கீதம் தெரிந்தவனுக்கு, இந்த ரூபங்கள், இழைகள் புரிவது போல, கலை ரசிகனுக்கும் இந்த architectonics, abstract formal relationships புரியும்.

(தொடரும்)

---

## சமயம் என்பது...

சமயம் என்பது மனித வாழ்க்கையின் பூரணத்துவமாகும். அந்த அனுபவத்தில் மனித இயல்பு ஒவ்வொன்றும் அதன் உச்சத்திற்கு உயர்வு பெறுகிறது.

—டாக்டர் ராதாகிருஷ்ணன்

# தோல்விகள்

வாரா திருந்திட்ட நாட்களுக் காக
வசைபாடச் சென்றிருந்தேன் !—அவள்
நேரா திருந்த நிகழ்ச்சிக ளெல்லாம்
நிகழ்ந்திடச் செய்துவிட்டாள் !

பிணக்கு வளர்ந்தினி பேசா திருக்கப்
பிடிவாதம் கொண்டிருந்தேன் !—அவள்
உனக்கும் எனக்கும் பகையும் உறவென்றோர்
உண்மை உணர்த்திவிட்டாள் !

பார்த்துப் புறக்கணித் தேகிய நாட்களின்
பட்டியல் வைத்திருந்தேன் !—அவள்
சேர்த்துப் பிடித்துச் சிரித்தத னாலந்தச்
சிட்டைக் கிழித்துவிட்டாள் !

பித்தம் பெறிதாய்ப் பிறர்வீட்டு வாசலில்
பிச்சைக்குட் கார்ந்திருந்தேன் !—அவள்
முத்தம் கொடுத்து மூலையும் கொடுத்து
முழுதுந்தெ ளியச்செய்தாள் !

—சந்திரமௌலி



# பாம்பு

வில்லியம் ஸரோயன்

மே மாதத்தில் ஒரு பார்க் வழியாக நடந்து போய்க்கொண்டிருக்கும் பொழுது அவன் ஒரு சிறிய பழுப்பு நிறப் பாம்பைப் பார்த்தான். அது புல் வெளி வழியாக இலைகளினூடே அவனை விட்டு நழுவி ஓடிற்று. அவன் கையில் ஒரு நீளமான குச்சியை எடுத்துக் கொண்டு, மனிதர்களுக்கே உரிய ஊரும் பிராணிகளின் மீதுள்ள பீதியை உணர்ந்தவாறே அதைப் பின் தொடர்ந்தான்.

'ஆ, இது தானே பாவத்தைக் குறித்து மனிதர்களாகிய நாம் போட்டு வைத்திருக்கும் இலச்சினை' என்று எண்ணியவாறே அவன் தன் கையிலிருந்த குச்சியால் அந்தப் பாம்பைத் தொட்டான். அது நெளிந்தது. பாம்பு தலையைத் தூக்கிப் பார்த்து குச்சியை ஒரு தடவை சீறியடித்தது. பின்பு பீதியோடு புல்லினூடே வேகமாக ஓடிற்று. அதைப் பின் தொடர்ந்தான்.

அது மிகவும் அழகாக இருந்தது. பிரமிக்கத்தக்க விதத்தில் புத்தி கூர்மையோடு காணப்பட்டது. ஆனாலும் அவன் அதை மேலும் ஒரு கணம் கவனித்து அதைக் குறித்து மேலும் ஏதாவது கண்டறிய விரும்பினான்.

அந்தச் சிறிய பழுப்புப் பாம்பு நேராக அவனை பார்க்குக்கு உள்ளே இழுத்துச் சென்று விட்டது. அதனால் வெளிப்பார்வைக்குத் தெரியாமல் அவன் வெகு உள்ளே போய்விட்டான். பாம்பைத் தொடர்ந்து செல்லும் இந்த வேலையில் பார்க்கின் சட்டதிட்டங்களில் எதையோ அத்துமீறி விட்ட மாதிரி ஒரு குற்ற உணர்ச்சி அவனுக்கு ஏற்பட்டது. அவனைக் கண்டு யாராவது கேள்வி கேட்டால் என்ன சொல்வது என்று அவன் ஒரு பதில் தயாரித்துக் கொண்டான்.

'நிகழ்கால ஒழுக்கவியலில் நான் ஒரு மாணவன்.' இப்படிச் சொல்லலாமா, இல்லை நான் ஒரு சிற்பி. ஊரும் ஜந்துக்களின் உடலமைப்பைக் குறித்துப் படித்து வருகிறேன். இப்படிச் சொல்லலாமா என்று யோசித்தான்.

எந்த விதத்திலாவது ஒரு பொருத்தமான விளக்கத்தை அவன் கொடுத்தாக வேண்டும். பாம்பைக் கொல்ல உத்தேசித்ததாக அவன் சொல்லக் கூடாது

பீதியுற்ற அந்த ஜந்துவின் பின் அவன் தாண்டிக் குதித்தும், வேகமாக நகர்ந்தும், போய்க் கொண்டிருந்தான். கடைசியில் அந்தப் பாம்பு களைத்து விட்டது, அதனால் மேலும் நகர முடியவில்லை. குந்து கால் போட்டு உட்

மொழிபெயர்ப்பு
**வையவன்**

கார்ந்து அந்தப் பாம்பைக் குச்சியினால் தூக்கி உற்றுக் கவனித்தான். அதைக் கையினால் தொடப் பயமாக இருக்கிறது என்ற விஷயத்தை அவன் மனப்பூர்வமாக ஒப்புக் கொண்டான்.

ஒரு பாம்பைத் தொடுவது என்பது மனிதனின் மனத்திலுள்ள ரகசியத்தைத் தொடுவதற்கு நிகர் என்று அவனுக்குத் தோன்றிற்று. வெளிச்சத்திற்குக் கொண்டு வரக் கூடாத ஒரு விஷயம். அந்த வழவழப்பான நழுவலும், அந்தப் பீதியூட்டும் மௌனமும் தான் ஒரு காலத்தில் மனிதன். அந்த மனிதன் தான் இன்றைக்கு இந்தக் கடைசிப் பரிணாம கதியை எட்டியிருக்கிறான். இருந்தாலும் இன்றைக்கும் பாம்புகள் பூமியின் மீது அப்படி ஒரு மாற்றம் எந்தக் காலத்திலும் ஏற்படாதது மாதிரி உலவித் திரிகின்றன.

முதல் மனுஷனும் மனுஷியும். பைபிள் கூற்று. பரிணாமம். ஆதாமும் ஏவாளும். மனித கர்ப்பம். அவன் மனம் இதையெல்லாம் எண்ணிற்று.

அந்தப் பாம்பு அழகானது. சுத்தமானது, சற்றுக் கம்பீரமானது. சச்சிதமானது. அந்தப் பாம்பின் பீதி அவனை அச்சுறுத்திற்று. அவன் முகம் பயத்தினால் வெளுத்துப் போயிற்று. அந்தப் பார்க்கிலுள்ள சகல பாம்புகளும் நிதானமாக இந்தச் சிறிய பழுப்புப் பாம்பை அவனிடமிருந்து மீட்பதற்காக வரக் கூடும்; வந்து தங்கள் சபிக்கின்ற மௌனத்தோடும் தங்கள் உருவத்தின் பயங்கர வகைகளோடும் அவனைச் சூழ்ந்து கொள்ளும் என்று அவன் நினைத்துக் கொண்டான்.

அது ஒரு பெரிய பார்க். அங்கே நிச்சயம் ஆயிரக்கணக்கான பாம்புகள் இருக்கும். எல்லாப் பாம்புகளும் அவன் இந்தச் சிறிய பாம்பின் அருகில் அமர்ந்திருப்பதைப் பார்த்தால் எல்லாம் சேர்ந்து அவனை லேசில் வெல வெலக்கச் செய்து விடும்.

அவன் எழுந்தான். சுற்றிலும் கவனித்தான். எல்லாம் அமைதியாக இருந்தது. அந்த மௌனம் பைபிளில் சொல்லப்பட்ட உலகம் ஆரம்பமான அந்தக் காலத்துக்கு நிகராகத் தோன்றியது. ஒரு குட்டையான புதரின் மீது கிளையிலிருந்து கிளைக்கு ஒரு பறவை தாவிக் கொண்டிருப்பதை அவன் கவனித்தான். ஒரு பெரிய நகரத்தின் பப்ளிக் பார்க்கில் தான் நின்று கொண்டிருப்பதையே அவன் மறந்து விட்டான். ஏரோப்ளேன் ஒன்று அவன் தலைக்கு மேலே பறந்து சென்றது. அந்த ஓசையை அவன் கேட்கவும் இல்லை. அதைப் பார்க்கவுமில்லை. அந்த மௌனம் மிகவும் சக்தி வாய்ந்ததாக இருந்

தது. அவனுக்கு முன்னுலிருந்த பாம்பின் மீது அவன் கவனம் கூர்மையாகப் பதிந்து போயிருந்தது.

அவன் மீண்டும் குந்துகால் போட்டுக் கொண்டு பாம்போடு மௌனமாக உரையாடத் தொடங்கினுன். உள்ளுக்கும் வெளிக்கும் அவனுக்கு சிரிப்பு வந்தது. தன் சுய உருவத்தின் ஒரு பகுதியாக இல்லாமல். தனக்கு வெளியே கண்ணெதிரில் ஒரு பாம்பின் உருவத்தைப் பார்க்கும் விஷயம் அவனுக்கு வெகு தமாஷாகப் பட்டது. உண்மையில் அது ஒரு மகத்தான விஷயம் தான். ஆரம்பத்தில் அவன் உரக்கப் பேசுவதற்குப் பயப்பட்டான். நேரமாக ஆக அவனுக்குக் கிலி குறைந்தது. அவன் அதனுேடு இங்கிலீஷில் பேசத் தொடங்கினுன். பாம்போடு பேசுவது ரொம்ப இன்பமான விவகாரம்.

"ஆல்ரைட் ... இதோ நான் ஓர் இளைஞன். இத்தனை வருஷங்களுக்கு அப்பால், இதே பூமியின் மீது இதே சூரியனின் கீழே ஒரே வகையான ஆவலோடு வாழ்ந்து கொண்டிருக்கிறேன். இதோ நீ என் முன்னுல் நிற்கிருய். சூழ் நிலையும் ஒரே மாதிரி இருக்கிறது. நீ என்ன செய்வதாக உத்தேசம்? தப்பியோடப் போகிருயா? நான் விடமாட்டேன். உன் மனதில் என்ன ஓடுகிறது? நீ எப்படி உன்னைக் காப்பாற்றிக் கொள்ளப் போகிருய்? உன்னை நான் அழிக்க விரும்புகிறேன். அது மனிதனுக்குச் செய்ய வேண்டிய உபகாரம்."

பாம்பு அவன் எதிரில் வேறு வழியின்றி குச்சிக்குத் தப்பிக்க முடியாமல் நடுங்கிற்று. பல தடவை அது குச்சியைக் கடித்துக் கடித்துப் பார்த்தது. பிறகு அதைப் பொருட்படுத்த முடியாத அளவு மிகவும் களைத்து விட்டது. அவன் குச்சியை இழுத்துக் கொண்டான். பாம்பு நன்றி சொன்ன மாதிரி அவனுக்குப் பட்டது.

அவன் பாம்பை நோக்கி விசிலடிக்கத் தொடங்கினுன். சங்கீதம் பாம்பை ஆட வைக்கிறதா என்று காண.

"யு ஆர் மை ஒன்லி லவ்" அவன் விசிலடித்தான். அது ஷோபர்ட். ஒரு நியூயார்க் மியூஸிகல் காமெடிக்காக அமைத்தது. "மை ஒன்லி லவ் மை ஒன்லி லவ்" ஆனுல் பாம்பு நடன மாடவில்லை.

ஏதாவது இத்தாலியில் பாடுவோமா? அவன் "லாடோன்ன ஈ, மொபைல்" பாட ஆரம்பித்தான். வேண்டுமென்றே தனக்கு வேடிக்கையாக இருக்கட்டும் என்ற நோக்கத்தோடு தப்புத் தப்பாக உச்சரித்தான். பயனில்லை. அவன் ஒரு பிராம்ஸின் தாலாட்டை ஆரம்பித்தான். அதுவும் பாம்பை ஒன்றும் செய்யவில்லை. அது மிகவும் களைத்துப் போயிருந்தது. பயந்து போயிருந்தது. அங்கிருந்து நகர்ந்தால் போதுமென்று காணப்பட்டது.

திடீரென்று தன்னைக் குறித்து அவனுக்கே ஒரு வியப்புத் தோன்றியது. அந்தப் பாம்பை நழுவித் தப்பியோடி தன் உலகத்திற்குப் போக அனுமதிப்பது போல் அவனுக்குத் தோன்றியது. அவன் ஏன் அதைத் தப்பியோட அனுமதிக்க வேண்டும்?

அவன் ஒரு பெரிய கல்லை தரையிலிருந்து எடுத்தான். 'இப்போது உன் தலையை இந்தக் கல்லால் நசுக்கி நீ சாவதை நான் பார்க்கப் போகிறேன்."

அந்தத் தீய கம்பீரத்தை அழிப்பது; அந்த பாவகரமான அழகை நசுக்கி விடுவது. அந்த விஷயம் விசித்திரமாக இருந்தது. அவன் ஓங்கிய கரத்திலிருந்து கல்லை விட இயலாமல் இவ்விதம் தான் நடந்து கொள்வதற்காக வருந்தத் தொடங்கினான். கையிலிருந்த கல்லைக் கீழே போட்டுவிட்டு "வருந்துகிறேன்" என்று முனகினான் அவன்.

"என்னை மன்னித்துக் கொள். இப்போது உன்மீது எனக்கு அன்பு மட்டுமே இருக்கிறது."

அவன் தன் கையால் அந்தப் பாம்பைத் தொட்டுப் பார்க்க விரும்பினான். அதைப் பிடித்து, அதன் ஸ்பரிசத்தைப் புரிந்து கொள்ள ஆசைப்பட்டான். ஆனால் அது கடினமாக இருந்தது. பாம்பு அஞ்சி நடுங்கிற்று. ஒவ்வொரு தடவை அவன் கைகளை நீட்டும் போதும் அது அவன் மீது சீறிப் பாய்ந்தது.

"உன் மீது எனக்கு அன்பு மட்டுமே இருக்கிறது. பயப்படாதே. உன்னை நான் துன்புறுத்தப் போவதில்லை" என்று அதைப் பார்த்துக் கூறினான். பின்பு வேகமாக தரையிலிருந்து அந்தப் பாம்பை உயர்த்திப் பிடித்தான். அதன் உண்மையான ஸ்பரிசத்தை அறிந்து கொண்டதும் அதைக் கீழே போட்டான்.

"இப்போது உண்மை புரிகிறது. ஒரு பாம்பு சில்லென்று ஆனால் சுத்தமாக, நான் நினைத்தது போல் பிசு பிசுப்பாக இல்லாமல் கிடக்கிறது" என்று அவன் சொல்லிக் கொண்டான்.

அவன் பாம்பைப் பார்த்துப் புன்னகை செய்தான்.

"இப்போது நீ போகலாம். பரிசோதனை முடிந்துவிட்டது. இன்னும் நீ உயிருடன் இருக்கிறாய். ஒரு மனிதன் முன்னால் நீ வந்தாய். இருந்த போதிலும் நீ உயிருடன் இருக்கிறாய். நீ போகலாம்."

ஆனால் பாம்பு போகவில்லை. அது பயத்தினால் களைத்துப் போயிருந்தது. அவனுக்குத் தான் செய்த காரியத்தைக் குறித்து ஆழ்ந்த வெட்கமாக இருந்தது; தன்மீதே கோபம் வந்தது.

"ஏசுவே! இந்தச் சின்னப் பாம்பை நான் நடுங்கச் செய்து விட்டேன். அது இதை மறக்கப் போவதில்லை. எப்போதும் என்னை ஞாபகத்தில் வைத்

துக்கொள்ளும், என்று எண்ணினான் அவன்.

"கடவுளுக்காக நீ போய் விடு. உன் ஜாதியிடம் போய்ச் சேர், அவர்களிடம் போய், உன் சொந்தக் கண்களால் நீ பார்த்ததைச் சொல். உனக்கு என்ன தோன்றியது என்று சொல். மனிதனுடைய கரத்தின் நோய் பிடித்த வெப்பத்தைப் பற்றிச் சொல். மனிதனுடைய தோற்றத்தைக் குறித்து உனக்குத் தோன்றியதைச் சொல்'' என்று பாம்பைப் பார்த்து அவன் சொன்னான்.

திடீரென்று பாம்பு அவனிடமிருந்து திரும்பி வேகமாக நெளிந்தவாறே நகரத் தொடங்கிற்று.

"ரொம்ப நன்றி" என்றான் அவன்.

அந்தச் சிறிய பாம்பு தன்னை முன்னால் தள்ளிக் கொண்டு புல்லினூடும் இலைகளினூடும் நகர்ந்து செல்வது அவனுக்கு ஆனந்தமான சிரிப்பைக் கொடுத்தது.

"அற்புதம்" என்றான் அவன், "அவர்களிடம் சீக்கிரம்போ. மனுஷனின் முன்னால் நீ நின்றாய்; இருந்தும் கொல்லப்படவில்லை. அதை அவர்களிடம் சொல், மனிதனையே பார்க்காமல் வாழ்ந்து மடிந்து போகும் பாம்புகளைக் குறித்து சிந்தித்துப்பார், உன் வாய்ப்பு எத்தனை உன்னதமானது என்பதை யோசி" அவனிடமிருந்து நகர்ந்து செல்லும் பாம்பின் அசைவுகள் அவனுக்கு ஆனந்தச் சிரிப்பின் சாரமாகத் தோன்றியது அவனுக்கு ஏகக் களிப்பு, அவன் வழிக்குத் திரும்பி, நடையைத் தொடர்ந்தான்.

அன்று மாலை பியானோவிற்குப் பக்கத்தில் உட்கார்ந்து அவள் இதமாக அதை வாசித்துக் கொண்டிருக்கையில் அவன் சொன்னான்.

"ஒரு தமாஷான விஷயம் நடந்தது." அவள் வாசித்துக் கொண்டே கேட்டாள் "தமாஷான விஷயமா?" "ஆமாம், நான் பார்க் வழியாக நடந்து போகும்போது ஒரு சிறிய பழுப்புப் பாம்பைப் பார்த்தேன்."

அவள் வாசிப்பதை நிறுத்தினாள். பியானோ பெஞ்சிற்குப் பின்புறமாகத் திரும்பி அவனைப் பார்த்தாள்.

"பாம்பா? எவ்வளவு விகாரமான ஜந்து?" என்று கேட்டாள்.

"இல்லை. அது அழகாக இருந்தது" என்றான் அவன்.

"அதை என்ன செய்தீர்கள்?"

"ஒன்றுமில்லை. அதைச் சும்மா பிடித்தேன். கொஞ்ச நேரம் அதைப் போகவிடவில்லை."

"ஏன்?"

"எந்தப் பொருத்தமான காரணமுமில்லை."

அவள் எழுந்து அறைக்குக் குறுக்கே நடந்து வந்து அவனருகே உட்கார்ந்தாள். அவனை விசித்திரமாக உற்றுப் பார்த்தாள்.

"அந்தப் பாம்பைப் பற்றி எனக்கும் சொல்லுங்கள்" என்று கேட்டுக்கொண்டாள்.

"அது ரொம்ப அழகாக இருந்தது. கொஞ்சமும் விகாரமானதல்ல. அதைத் தொட்டுப் பார்த்தேன். சுத்தமாகத்தான் இருந்தது."

"எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. அப்புறம் என்ன?" என்று இடைமறித்தாள் அவள்.

"நான் பாம்பைக் கொல்ல விரும்பினேன். ஆனால் என்னால் முடியவில்லை. அது ரொம்ப ரொம்ப அழகாக இருந்தது."

"சந்தோஷம், அப்புறம் நடந்தது எல்லாவற்றையும் சொல்லுங்கள்."

"அவ்வளவுதான்" என்றான் அவன்.

"இல்லை. எனக்குத் தெரியும், அது அவ்வளவு மட்டும் இல்லையென்று. எல்லாவற்றையும் என்னிடம் சொல்லுங்கள்."

"அது வேடிக்கையான விஷயம். நான் பாம்பைக் கொல்லப் போனேன். அப்புறம் இங்கே வரக்கூடாதென்று முடிவு செய்தேன்."

"உங்களைப் பற்றி உங்களுக்கே வெட்கமாக இல்லை?" அவள் கேட்டாள்.

"ஆமாம்"

'அப்புறம் என்ன? பாம்பு உங்கள் எதிரில் இருந்தபோது என்னைப் பற்றி என்ன நினைத்தீர்கள்?"

"உனக்குக் கோபம் வரும்"

"ஓ" நான்சென்ஸ், உங்களோடு கோபித்துக் கொள்வது முடியாது. சொல்லுங்கள்?"

"நல்லது நீ அழகாக இருக்கிறாய் அதே சமயத்தில் தீயவளாகவும் இருக்கிறாய் என்று நினைத்தேன்.

"தீயவளா?"

"பார்த்தாயா, உனக்குக் கோபம் வருமென்று நான் சொல்லவில்லை?"

"அப்புறம்?"

"நான் பாம்பைத் தொட்டுப் பார்த்தேன். அது சுலபத்தில் முடியவில்லை. ஆனாலும் நான் அதைக் கரங்களால் பற்றித் தூக்கினேன். இதைக் கேட்டு நீ என்ன நினைக்கிறாய்? நீ இம்மாதிரி விஷயங்களைக் குறித்து ஏராளமான புத்தகங்களைப் படித்திருக்கிறாய். இதற்கு ... நான் பாம்பைப் பிடித்துத் தூக்கியதற்கு ...என்ன அர்த்தம்?"

அவள் மிருதுவாக, புத்திசாலித்தனமாகச் சிரிக்கத் தொடங்கினாள். "ஏன்?" அவள் சிரித்தாள். "இதற்கு நீங்கள் ஒரு முட்டாள் என்றுதான் அர்த்தம். ஏன், இது ரொம்ப அற்புதம்" என்றாள்.

"ஃப்ராய்ட் இப்படித்தான் சொல்கிறாரா?" என்று கேட்டான் அவன்.

"ஆமாம்" அவள் சிரித்தாள். "ஃப்ராய்ட் ! இப்படித்தான் சொல்கிறார்"

"எப்படியோ பாம்பை சுயேச்சையாகப் போகவிட்டது அருமையாக இருந்தது"

"எப்போதாவது நீங்கள் என்னைக் காதலிப்பதாகச் சொல்லியிருக்கிறீர்களா?"

"உனக்குத் தெரிந்திருக்க வேண்டுமே. உன்னிடம் சொன்ன விஷயங்கள் ஓரிரண்டு எனக்கு ஞாபகமில்லை."

"இல்லை. நீங்கள் என்னிடம் சொன்னதில்லை"

அவள் சிரிக்கத் தொடங்கினாள். அவளைப் பற்றி அவளுக்குத் திடீரென்று சந்தோஷம் உயர்ந்தது.

"நீங்கள் எப்போதும் வேறு விஷயங்களைக் குறித்து, கவைக்குதவாத விஷயங்களைக் குறித்துப் பேசி வந்திருக்கிறீர்கள், மிகவும் அபூர்வமான நேரங்களில் கூட" அவள் சிரித்துக்கொண்டே கூறினாள்.

"இந்தப் பாம்பு ஒரு சின்ன பழுப்புப் பாம்பு" என்றான் அவன்.

"அதுவே விளக்கி விட்டது. நீங்கள் எப்போதும் தலையிடுகிற ஆசாமி யல்ல"

"ஓ... நீ என்ன பேச்சுப் பேசுகிறாய்?"

"நீங்கள் பாம்பைக் கொல்லாதது குறித்து எனக்குச் சந்தோஷம்" என்றாள் அவள்.

அவள் பியானோவின் அருகே போனாள். பியானோக்கட்டைகளில் தனது கைகளை மிருதுவாக வைத்தாள்.

"பாம்பிடம் நான் சில பாட்டுக்களை விசிலடித்தேன். ஷுபர்ட்டின் முற்றுப்பெறாத சிம்பனியிலிருந்து ஓர் அடியை நான் விசிலடித்தேன். எனக்கு அதைக் கேட்கப் பிரியமாக இருக்கிறது. உனக்குத் தெரியுமா, அந்தப் பாட்டு பிளாஸம் டைம் என்ற மியூஸிகல் காமெடியில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதி என்ன தெரியுமா? யூ ஆர் மை ஒன்லி லவ் ... மை ஒன்லி லவ் ... (நீ தான் என் ஒரே காதலி...ஒரே காதலி)."

அவள் மிருதுவாக வாசிக்கத் தொடங்கினாள். அவனது கண்கள் தனது கூந்தலின் மீது படுவதை, கைகளின் மீது, கழுத்தின் மீது, முதுகின் மீது, கரங்களின் மீது படுவதை உணர்ந்து கொண்டே, அவன் பாம்பைப் பரிசீலித்தது போன்று தன்னையும் பரிசீலிக்கிறான் என்று உணர்ந்தபடியே அவள் மிருதுவாக வாசிக்கத் தொடங்கினாள்.

★

## அன்பும்—வெறுப்பும்

அன்பு எல்லாவற்றையும் நேசிக்கச் செய்யும். ஆனால் வெறுப்போ வெறுக்கப்படும் ஒரே விஷயத்திலேயே எல்லாக் கவனத்தையும் சேர்த்துக்கொண்டு விடுகிறது.

# பீதைஹோ [1]

## மாசே - துங்

ஆங்கிலம் வழி தமிழில்: கோ. ராஜாராம்

ஒரு புயல்மழை இந்த வடக்கு நிலத்தில் விழுகிறது.
அலை தெறித்து வானில் குதிக்கிறது.
'சின்வாங் தாங்'(2) இன் மீன்பிடிக்கும் படகுகளில்
ஒன்றையுமே கடல்மீதிற் காணேமே.

அவை எங்கே போயின?

ஆயிரம் வருஷம் முன்னொருகாலம்
"வீ"(3)யின் மன்னன் "வூ"(4)தன் சவுக்கைச் சுழற்றி
கிழக்குப்புறத்தே, பயணம் செய்தான் இங்கே;
அவன் பாடல் இன்றும் இருக்கிறது.
"சோகத்தில் இலையுதிர் காற்று நெடுமூச்சு விடுகிறது."

ஓ! உலகம் மாறிவிட்டது.

---

(1) Peitaiho—கோடை வாசஸ்தலம்;

(2) Chin wangtao—இதன் தெற்கேதான் Peitaiho உள்ளது.

(3), (4) The Emperor Wu of Wei.

# ஒத்த சிந்தனை

[கேள்விகள் சிந்தனையைத் தூண்டக் கூடியதாக, எது பற்றியும் இருக்கலாம். கேள்விக்கு ஏற்ற தொனியிலேயே பதிலும் இருக்கும்.]

—ஆசிரியர்

கே : பம்பாயில் உள்ள 'ரெட் லைட் ஏரியா போன்ற அங்கீகரிக்கப்பட்ட விபசாரப் பிரதேசங்கள் நாடு முழுவதும் ஏற்படுத்தப்பட்டால் குடும்பக் கட்டுப்பாடுத்திட்டம் வெற்றி பெறுமா?

—கே. சின்னசாமி, மதுரை-1.

ப: பெறாது. அங்கீகரிக்கப் படாத குழந்தைகள் வேண்டுமானால் உற்பத்தியாகலாம். விபசாரம் சட்டபூர்வமாக்கப் பட வேண்டும்; அதாவது அடிப்படையான சமுதாய மாற்றங்களைச் செய்யாமல், விபசாரத்தை ஒரு குற்றமென்று தண்டிக்க வருகிற சட்டம் மாற்றப்பட வேண்டும் என்கிற எண்ணம்எனக்கு உண்டு என்றாலும், அதற்கு ஆதரவாக இப்படி ஒரு வாதத்தை முன்வைக்க நான் தயாராக இல்லை. பிறப்பு விகிதத்தைக் குறைப்பது என்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல. அதற்கு மனித சமூகம் இத்தனை ஆண்டுகளாகக் கட்டி பாதுகாத்த எத்தனையோ கோட்டைகளை உடைக்க வேண்டி நேரிடும்.

கே : மனித மனம் சஞ்சலமின்றித் தெளிந்த நீரோட்டம் போலிருப்பதற்கு, இறைவழிபாடு அவசியம் என்று நான் கருதுகிறேன். உங்கள் அபிப்பிராயம் என்ன?

—சி. கே. கோவிந்தசாமி, விழுப்புரம்.

ப: உங்களுடைய அபிப்பிராயம் ரொம்பவும் சரி என்று நான் கருதுகிறேன். ஆனால் இதற்கு மாறுபடுகிற

வர்களுடைய அபிப்பிராயங்களையும் நீங்கள் கௌரவித்தால் சமுதாயத்தில் ஏற்படும் பல சஞ்சலங்களைத் தவிர்க்கலாம்.

இறை வழிபாடு என்பதும் இறை வழிபாடு மறுப்பு என்பதும் முழுக்க முழுக்க தனி மனித சுதந்திரத்தின் பாற்பட்டது. சிலருக்குத் தங்கள் மனம் தெளிந்த நீர்போல் சஞ்சலமற்றிருப்பதே சந்தோஷத்தைத் தராமலிருக்கலாம். அவர்களை உங்கள் வழியில் சந்தோஷப்பட்டே ஆகவேண்டும் என்று நிர்ப்பந்திப்பது இறை வழிபாட்டின்பேரால் வரும் அநாகரிகமாகும். இது சரியல்ல.

கே: உடலுறவு இல்லாமல் க்ணவன் மனைவியாக ஒரு தம்பதியர் வாழ்க்கை நடத்த முடியாதா?

—வி. பி. சுப்புரத்தினம், வாணியம்பாடி.

ப: நடத்தலாம். ஆனால் தாம்பத்தியத்தின் அடிப்படையாக அவர்கள் உடலுறவு கொண்டு எப்போதேனும் இருந்திருக்க வேண்டும். அதுவுமில்லாவிட்டால் அவர்களில் யாரேனும் ஒருவர் வேறொருவரோடு உடலுறவு கொள்வதை — கணவன் அல்லது மனைவி என்ற உரிமையின் பேரால் — மறுக்காமல் இருக்க வேண்டும். அதாவது சரக்கு இல்லாத பொட்டணத்தின் மீது லேபிள் ஒட்டிக் கொள்வதுபோலாகும் அது. கணவன் மனைவி என்ற உறவே உடலுறவின் அடிப்படையை வைத்துத்தான். வேறு காரணங்களுக்காக அது வருமேயானால் அது வேறுவகை உறவே; அது தாம்பத்தியமாகாது.

கே: சென்ற இதழில் வெளியான மன்னிக்கப்படாத பாவங்கள் சிறு கதையை நீங்கள் பிரசுரித்துக் கிறிஸ்தவர்களின் நெஞ்சங்களைப் புண்ணாக்கி விட்டீர்களே! இது நியாயமா?

—ஜி. இக்னேஷியஸ், ராயபுரம்.

ப: ஞானரதத்தில் ஆசிரியர் குழு என்று ஒன்று இருக்கிறது. அவர்கள்தான் கதைகளைத் தேர்ந்தெடுக்கிறார்கள். சிலவற்றைத்தான் அவர்கள் என் பார்வைக்கு அனுப்புவார்கள். பிறவற்றைப்பிரசுரத்திற்குப்பின் தான் நான் படிப்பேன். நீங்கள் குறிப்பிட்ட கதையை பிரசுரத்திற்குப் பின்னுலும் நான் படிக்கவில்லை. எனவே உங்கள் குற்றச்சாட்டு சரியா என்றுகூட நான் தீர்மானிக்க முடியாது. எங்கள் நோக்கம் இலக்கியம் தானே ஒழிய, ஒரு கதையின் மூலம் எந்த மத நம்பிக்கைப் புண்படுகிறது, எந்தக் கட்சியின் நம்பிக்கை சிதைகிறது என்பதைப்பற்றி எங்களுக்குக் கிஞ்சிற்றும் கவலை கிடையாது அது சரி. கதையைப்பற்றி என்ன சொல்கிறீர்கள்?

கே: கம்யூனிஸமும் முதலாளித்துவமும் கிறிஸ்தவ மதமும் இஸ்லாம் மதமும் போல நிரந்தரமாக இருந்து கொண்

டே இருக்கும் என்று ரஸ்ஸல் கூறியதைச் சுட்டிக் காட்டியுள்ளீர்கள். கம்யூனிஸ்டுகளின் நம்பிக்கை மதவாதிகளின் நம்பிக்கைக்கு நிகர் என்று சொல்கிறீர்கள்?

—சி. ஞானபண்டிதன்,
அருப்புக்கோட்டை.

ப: நான் சொல்லவில்லை. ரஸ்ஸல் அப்படித்தான் சொல்லியிருக்கிறார். மதவாதிகள் தான் தங்களை வெறும் ஆன்மீகவாதிகள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் சமூக விஞ்ஞானிகள் மதங்கள் தோன்றுவதற்கு ஒரு விஞ்ஞான அடிப்படை உண்டு என்று அறிவார்கள். அதே மாதிரி இவர்கள் தங்களுடைய இஸங்களுக்கு அடிப்படை விஞ்ஞானம் என்று கூறுவது உண்மையேயாயினும், இவர்களும் மதம் போன்ற சில 'நம்பிக்கை'களுக்கு மாறி வருவதை நாம் காண்கிறோமே.

மாசேதுங் தன்னை ஓர் அரசியல் புரட்சிக்காரர் என்று கருதுவதைக் காட்டிலும் தன்னை ஒரு 'ஃப்ராபட்' (முகம்மது நபி, கிறிஸ்து இவர்களைப் போல) என்று நினைப்பதாகத் தெரிகிறதே.

கே: தேச உடமையாக்கப்பட்ட சொத்துக்களைத் தன் சொத்தாகப் பாதுகாக்கும் பக்குவமில்லாத நிலையில் தேச உடமை விஸ்தரிப்பு எந்த அளவுக்குச் சரியாகும்?

—ஏ. பி. தாமஸ், பரங்கிமலை.

ப: இந்தக் கேள்வியைத் தான் நானும் கேட்டுக்கொண்டிருக்கிறேன். மேலும் அரசாங்கம் அடிக்கிற கரன்ஸி நோட்டுக்களைவிட கள்ள நோட்டுகள் நன்றாக இருக்கிறதாம். அரசாங்கம் போடுகின்ற தபால் தலைகளைவிட கள்ளத்தனமாக அடிக்கப்படுகின்ற தபால் தலைகள் நன்றாக இருக்கிறதாம்; இந்நிலையில் தேசிய மயம் என்கிற ஒரு நெறியே இங்குள்ள அரசாங்கத்தினரால் முற்றாக முறியடிக்கப்பட்டிருக்கிறது. அப்படி முறியடித்தவர்கள்தான் இன்றைக்கு அரசாங்கத்தைத் தங்கள் சொத்தாக மக்களிடமிருந்து அபகரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

தனி யுடைமையாளர்களை விடவும் வியாபாரிகளை விடவும் இந்தப் 'பொதுவுடைமை அதிபர்'களுக்குத் தொழிலில் நாணயமில்லை. நாணயமின்மையும் சுயநலமுமே அரசாங்கத்தின் ஏகபோகமான தேசிய உடைமையாகியிருக்கிறது. இந்த ஒரு விஷயத்தில் தான் தனியார் இவர்களோடு போட்டி போட்டு ஜெயிக்க முடியவில்லை.

தேசியமயமாக்குதல்என்பது குருட்டுத்தனமாகக் கடைப்பிடிக்க வேண்டியமந்திரமல்ல. கூட்டாகவும் பொதுவாகவும் உடைமைகளின்மீது நிர்வகிக்கும் பொறுப்பு வளரவளர, தனியுடைமைச் சமுதாயம் என்பது எவ்வளவு தூரம் இயற்கைக்கு ஒவ்வாதது என்று உணர்த்தியாதல் வேண்டும். இந்தியாவில்

தேசியமயக் கொள்கை எவ்வளவு நடைமுறைக்கு ஒவ்வாதது என்பதைத்தான் இதுவரை நிரூபித்திருக்கிறார்கள். தனியுடைமையின் நாணயமும் இல்லை; பொறுப்புணர்ச்சியுமில்லை. ஊரைக் கொள்ளையடிக்க வேண்டுமென்ற எண்ணமுள்ளவர்கள் எல்லாம் வாயளவில் தேசியமயத்தை ஆதரித்துவிட்டு சந்தர்ப்பம் வரும்போது ஊரைக்கொள்ளையடிக்கிறவர்களோடு சேர்ந்து கொள்கிறார்கள் என்பதே இதுவரை நடந்துவரும் வெட்கப்படத்தக்க விஷயம்.

கே: சென்ற இதழில் தமிழ் படித்தால் தமிழ்தான் கற்பிக்க முடியும் என்று கிண்டல் செய்துள்ளீர்கள். ஆங்கிலமோ விஞ்ஞானமோ கணிதமோ ஆகிய எதைப் படித்தாலும் அதைத்தானே கற்பிக்க முடியும்? இது எப்படி கேலிக்குரியதாகும்?

—ஜே. ஆறுமுகம்,
கொள்ளேகாலம்.

ப: ஆங்கிலம் படித்தால் விஞ்ஞானம் படிக்கலாம்; மருத்துவம் படிக்கலாம். தமிழ் தவிர மற்ற எல்லாவற்றையும் படிக்கலாம். ஆங்கிலம் படித்தவர்கள் எல்லாருமே ஆங்கில வாத்தியார் உத்தியோகத்துக்குப் போவதில்லை. விஞ்ஞானம் படித்தவர்கள் எல்லாரும் விஞ்ஞான வாத்தியார் உத்தியோகத்துக்குப் போவதில்லை. ஆனால் தமிழ் படித்தவர்கள் எல்லாருமே தமிழ் வாத்தியார் உத்தியோகத்துக்கு மட்டுமே போகிறார்கள். எந்தப்படிப்பும் ஆக்கபூர்வமான பின் விளைவுகளுக்கு ஊக்கம் தருவதாக இருத்தல் வேண்டும். தமிழ்ப் படிப்பு என்று தனியாக ஒன்றைக் கொண்டு போய் வைத்துக் கொண்டு, அந்தத் தனிப் படிப்பு படிக்காதவர்கள் எல்லாம் தமிழ் படிக்காதவர்கள் என்ற நிலை மாறவேண்டும்.

கல்வியின் பயன் மனிதனை உருவாக்குவதுதானே ஒழியப் பாடப்புத்தகங்களை அல்ல. செயல்திறன் இல்லாத கல்வி மடைமையை வளர்க்கும்.

கே: உங்கள் கதைகளில் குடியைப் பற்றியும் குடிப்பதைப் பற்றியும் நீங்கள் எழுதும்போது வாசகர்கள் மதுவின் மீது ஈடுபாடு கொள்ளுமளவு மதுவைப் புகழ்கிறீர்களே அதனால் அதைப்படிக்கும் இளைய சந்ததியினர் கெட்டுப் போக மாட்டார்களா?

—ஏ. பி. கனகசபை, காரைக்கால்.

ப: மதுவைப் பற்றிய பயமும் அது ஒரு தடை விதிக்கப்பட்ட இன்பமென்ற கருத்தும் இருக்கிறது. அதனால் அதன் மீது ஏற்படுகின்ற ஒரு ரகசிய மோகத்தினால்தான் மதுவைக் குடித்துப் பலர் கெட்டுப் போகிறார்கள். வேதங்கள் எல்லாம் மதுவைப் புகழ்ந்திருக்கின்றன. தேவர்களும் மது அருந்தியிருக்கிறார்கள். இன்பமான எல்லாவற்றிற்கும் மதுரம் என்று பெயர் வழங்கப்பட்டிருக்கிறது. மது ஒன்றுதான் உணவாகவும் மருந்தாகவும் இருக்கிறது. அமைதியில்லாத

மனத்திற்கும் உழைப்பினுல் அலுத்துப்போன உடலுக்கும் அது அமைதியையும் நிம்மதியையும் தருகின்ற Tranquilizer ஆகவும் Sedative ஆகவும் செயல் படுகிறது.

மகிழ்ச்சியாய் இருப்பவன் அதைக் கொண்டாடவும் குடிக்கலாம்; துயரமாய் இருப்பவன் அந்தத் துயரத்தைத் தேற்றிக்கொள்ளவும் குடிக்கலாம். பசி மந்தித்துப் போனவன் நன்ருகச் சாப்பிடுவதற்காக (appetizer ஆக) முன்னுலும் குடிக்கலாம். நன்ருகச் சாப்பிட்டவன் அது ஜீரணமாகவும் குடிக்கலாம். மதுவிலே அத்தனை வகைகள் உண்டு. மதுவை விலக்கிய தனி மனிதர்கள் உண்டே தவிர மதுவை விலக்கிய சமூகங்கள் இல்லை. மதுவை விலக்குவது. ஒரு தனி மனித நெறியாக எப்போதும் இருந்திருக்கிறது. அது ஒரு சமூக நெறியாக எப்போதும் இருந்ததில்லை. எதையுமே அளவறிந்து அதன் தன்மையறிந்து நம்முடைய தன்மையையும் நிலையையும் அறிந்து இன்பத்திற்காகவும் ஆனந்தத்திற்காகவும் கைக் கொள்வது தவருகாது. பெண் மோகத்திஞல் கெட்டுப்போனவர்களை உதாரணம் காட்டி பெண்ணையே பழிக்கின்ற போக்கினை நாம் எப்படி வாழ்க்கையில் புரிந்து கொள்கிருேமோ அதுமாதிரி தான் மதுவைப் பழிக்கிற, அதைக்கண்டுஅஞ்சுகிறபோக்கையும் எந்தவிதமான பயத்திற்கும் ஆட்படாதவர்கள் பார்க்க முடியும். அளவுக்கு மீறிக் குடிப்பது மட்டுமல்ல அளவுக்கு மீறிச்சாப்பிடுவதும் கூட முன்னதை விடவும் ஆபத்துக்களை ஏற்படுத்த முடியும். ஆகவே குடித்தவர்கள் எல்லாம் கெட்டுப்போனவர்களும் அல்ல. குடிக்காதவர்கள் எல்லாம் நல்லவர்களும் அல்ல. ஆனுல் குடிப்பது என்பது ரொம்பவும் சாதாரண விஷயமாக மாறிப்போனுல் குடியினுல் கெட்டுப்போகிறவர்கள் குறைந்து போவார்கள்.

குடியைப் பற்றி எழுதக் கூடாது; பேசக்கூடாது; குடிப்பது என்பதே ரகசியமான தடைவிதிக்கப்பட்ட இன்பம் என்கின்ற சூழ்நிலை மாறவேண்டும்.

கே: நம் தமிழ் சினிமாவின் நிலை, தரம்—உயர்வதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்? நாம் ஏதாவது செய்தாக வேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறதே!

—பி. ராமப்பிரபு, கோவை.

ப: இப்படிப் புலம்பிக் கொள்வது, தமிழர்கள் மத்தியில் ஒரு ஃபாஷனுகிவிட்டது. என் தரத்துக்கு ஒத்துவராத எதையும் நம்முடையதாக நினைப்பது என் வழக்கமில்லை. ஆனுல் தமிழ் சினிமாவைப் பற்றி நீங்கள் அப்படி நினைக்கிறீர்கள் என்று தோன்றுகிறது. இப்படிப்பட்ட கேள்விகளிலும் இப்படிப் பட்ட உங்கள் அதிருப்தி

களிலும் உங்கள் தரம் உயர்ந்து விட்டதாக நான் கணிக்க மாட்டேன். உங்கள் ரசனைக்கும் அறிவுக்கும் உள்ள முரண்பாடு எனக்குப் புரிகிறது. தமிழனின் தரத்தை இன்றைய தமிழ் சினிமா நன்கு காட்டுகிறது. இதுதான் தமிழனுக்குத் தகுதி என்றால் நான் என்ன, எவர் என்ன செய்ய முடியும்?

கே: தமிழில் புதுக் கவிதைக்கு அவசியமென்ன?

—கி. கண்ணபிரான், சென்னை-26.

ப: உங்கள் கேள்வியே அவசியத்தை ஒப்புக் கொள்கிறது. அதற்கு நீங்கள் விளக்கம் கோருகிறீர்கள். மரபுக் கவிதையில் கவித்வம் என்பது கொஞ்சங் கொஞ்சமாக அருகிக் கொண்டே வருகிறது. வெறும் சொற்களின் கூட்டமாக எதுகை மோனைகளின் இசைவாக, சந்தங்களின் லயமாக மட்டும் எஞ்சி நிற்கிற பொழுது கவித்வம் என்கிற மொழி கடந்த உணர்வினை இதில் வளைத்துக் கொண்டு வர முடியாமற் போய் விடுகிறது. நம் கவிதைகள் எல்லாம் ஏறத்தாழச் செய்யுள்களாகவும், சினிமாப் பாட்டாகவும் மாறிக்கொண்டிருக்கின்றன. மரபு வேறு செய்யுள் வேறு. மரபுக் கவிதைகள் அனைத்தும் அதிகமாகச் செய்யுள் தன்மை கொண்டு விட்டன. கவித்வத்தோடுகூடிய மரபுக் கவிதையை யாரும் என்றைக்கும் ஒதுக்கித்தள்ளிவிட முடியாது. ஆனால் திரும்பத் திரும்பப் பெண்களின் முகத்தைத் தாமரைக்கே ஒப்பிட்டுக் கொண்டிருப்பதை எவ்வளவு காலம் தாங்கிக் கொண்டிருப்பது? மரபுக் கவிதையில் நவீன விஷயங்களைச் சொல்லவே முடியாமல் தவிக்கிறார்கள். எனவே கவிதை எழுதுகிறவன் பழைய தமிழனாகவே இருக்கிறான். இயற்கையின் சூழலில் வாழ்ந்த ஆதித் தமிழனின் கவித்துவம் எவ்வளவு ரசனைக்கு உட்பட்டதோ அதே அளவு நவீன காலத் தமிழனின் யந்திரங்களோடு ஏற்பட்ட உறவிலே விளைகின்ற கவிதையிலும் ஏற்படவேண்டும். மரபு வழிக் கவிஞர்களால் இது சாத்தியப் பட மாட்டேனென்கிறது. இன்றைக்கும் மரபுக் கவிதைகளிலே வருகின்ற 'அவன்' படம் போடுகின்ற ஓவியரால் காதில் வளையமும் காலில் கழலுமாகத் தீட்டப் படுகிறான். மரபுக் கவிதையில் வருகின்ற அவள் கச்சணிந்து, கோயிலிலே இருக்கிற சிலை போலவே தீட்டப்படுகிறாள். இதற்கென்ன காரணம்? உங்கள் மரபுக் கவிதையில் வருகின்ற விஷயங்கள் பழசாக இருப்பதுதான் என்று படம் போடுகிறவன்கூட முடிவு செய்துவிடுகிறான். புதிய விஷயங்களைக் கூறப் புதிய வடிவம் தேவைப்படுகிறது.

கே: ஆங்கிலப் படங்களில் வருகின்ற நெருக்கமான காதல் காட்சிகளைப் பார்க்கும் போது தமிழனுக்கு ஏற்படும் உணர்வு,

தமிழ்ப்படங்களில் 'வருகின்ற' காதல் காட்சிகளைப் பார்க்கும் போது வித்தியாசமாக இருக்கிறதே ஏன்?

—நடராஜன். மதுரை.

ப: நீங்கள் தமிழன் என்று கேட்டிருக்கிறபடியால், சராசரியான ஒரு நல்ல தமிழ் ரசிகன் என்று வைத்துக்கொண்டு நான் சொல்கிறேன். முதலில் நீங்கள் பொதுவாகக் கேட்டுள்ள தமிழ்ப்படங்கள் ஆங்கிலப் படங்கள் என்பதையும் அதேமாதிரி நம்மத்தியில் சராசரியாக உயர்ந்த தமிழ் ஆங்கிலப்படங்கள் என்றே வைத்துக்கொள்வோம்.

இந்த வித்தியாசத்திற்குப் பல காரணங்கள் உண்டு.

(1) தமிழ்ப் படங்களில் என்னதான் தரம் மிகுந்த படம் என்று நாம் பேசிக் கொண்டாலும் அதில் காதல் காட்சிகள் அதாவது ஆண் பெண் நெருக்கக் காட்சிகள் எந்தத் தரம் குறைந்த படங்களில் வருகின்ற நெருக்கக் காட்சிகளுக்கு இணையாகவே இருக்கின்றன.

(2) அந்த நெருக்கக் காட்சிகளில் சம்பந்தப்பட்ட நடிக நடிகையரைப்பற்றி ஒரு கதாபாத்திரம் என்ற முறையில் அந்தப்படத்தில் அவர்கள்மீது எவ்வளவு பண்புகள் ஏற்றப்பட்டாலும்—அந்த நடிக நடிகையரின் சொந்த வாழ்வின் அந்தரங்கங்கள் அளவுக்கு அதிகமாக நம் தமிழ் ரசிகர்களுக்குத் தெரிந்திருக்கின்றன. மேலும் இந்த நெருக்கக் காட்சிகளில் நடிக்கும்போது தங்களை அறியாமலே அந்த நடிக நடிகையர் அதைத் தெரியப்படுத்திக்கொள்கின்றனர்.

(3) நம் படங்களில் வருகின்ற காதல் காட்சிகள் எதுவும் பாத்திரங்கள் தம் அனுபவங்களைப் பரிமாறிக் கொள்வதாக அமைவதில்லை. அந்தக் காட்சிகளின் நோக்கமே பார்ப்பவர்களைக் கிளர்ச்சியூட்டுவதற்காக ஒரு காதல் நிகழ்ச்சியை Perform பண்ணிக்காட்டுவதுதான். இங்கே நம்முடைய நடிக நடிகையரின் நடிப்பு என்பதே ஒரு Performance தான்.

(4) ஆண் பெண் நெருக்கமென்பது நமது சமூக வாழ்வில் அவ்வளவு சாதாரணமாகக் காணக் கிடைக்கக்கூடிய ஒன்றல்ல. ஒரு தமிழனும் ஒரு தமிழச்சியும் ஒருவரை ஒருவர் கட்டித் தழுவிப்புரள்வது என்பது படுக்கை அறையைத் தவிர வேறெங்கும் பகிரங்கமாக நிகழ்வது அல்ல. பிறர் அந்தரங்கத்தைக் காண்கின்ற Curiosityக்கு நமது தமிழ்ப்படங்களில் கற்பனையாக ஒரு வாய்ப்புக் கிடைக்கிறது. எனவே இது இயல்புக்கு மாறானதாக இருப்பதும் தவிர்க்க முடியாததாகிறது.

(5) ஆனால் ஆங்கிலப் படங்களில் ஆண் பெண் நெருக்கக் காட்சிகளுடைய தரம்உயர்ந்த படங்களுக்கும் குப்பைப்படங்களுக்கும் இடையே அதிகமான வித்தியாசம் காட்டி நிற்

கிறது. ஒரு கலை நயமில்லாத குப்பைப் படத்தில் இருப்பதை விடவும்கூட ஓர் தரமுள்ள ஆங்கிலப்படத்தில் அதிகமான நெருக்கக் காட்சிகளும் ஏன் நிர்வாணக் காட்சிகளும்கூட இருக்கலாம். ஆனால் அது ஒரு கலைப்படைப்பு என்கிற முறையில் அனுபவ வெளிப்பாட்டுக்கு அவசியமானதாக நிற்கும். அங்கே அது ஒரு Performance அல்ல; ஒரு Expression அது. கதையோடு ஒன்றிவிட்ட நலல ரசிகன் கலையனுபவத்திலிருந்து விலகி வேறு சொந்தக் கிளர்ச்சிகளுக்கு இரையாவது இங்கு சாத்தியமில்லை.

(6) தமிழ்ப்படங்களில் காதல் காட்சி என்பது போலியானதும், இயல்புக்கு மாறானதும், வாழ்க்கையில் இல்லாததுமாகும். எனவேதான் இந்த வித்தியாசம் ஏற்படுகிறது.

ஆனால் நான் கடைசியாக ஒன்று சொல்லவேண்டும். தமிழ்ப்படங்களில் நிலவி வருகின்ற இந்தப்போக்கு சமீப காலமாக ஆங்கிலப்படங்களிலும் தலையெடுத்து வருகிறது.

கே: மனிதப்பிறவியின் நோக்கமென்ன?

— ஆறுமுகசாமி, தென்காசி.

ப: மனிதப் பிறவிக்கென்று தனித்த நோக்கம் என்பது எதுவும் இருக்க முடியாது. எல்லாப் பிறவிகளுக்கும் என்ன நோக்கமோ அதுவே தான் மனிதப்பிறவிக்கும் இருக்க முடியும். அதாவது உயிர்வாழ்க்கை. Just Existence is the purpose of life.

ஆனால் மனித மனம் ஒன்று தான் எல்லாவற்றிற்கும் நோக்கங்கள் கற்பிக்கிறது; கண்டு பிடிக்கிறது. நோக்கம் என்பது ஒரு காரியத்திற்கு முன்னால் உருவாவது. பிறவி என்கிற காரியத்திற்கு முன்னால் அப்படி ஒரு நோக்கம் இருந்ததாக இந்த மனித சித்தத்திற்கு இன்றுவரை புலப்படவில்லை.

கற்பனை பூர்வமான ஆன்மீக வாதிகள் பிறவியைப் பாவத்தின் விளைவு என்றும் அல்லது புண்ணியத்தின் வெகுமதி என்றும் ரொம்ப காலமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் பிறவியைப் பொறுத்தவரை நிரூபிக்கத் தக்கவண்ணமாக முன்கூட்டிய நோக்கங்கள் எதுவும் இது வரை நிலை நிறுத்தப்படவில்லை. எனினும் பிறவியின் மூலம் ஏற்பட்டுவிட்ட உயிர் வாழ்க்கைக்கு ஆனந்தம் என்பது நோக்கமாக அமைந்து கிடக்கிறது. மிருகங்களுக்கு புலன்களின்மூலம் கிட்டுகின்ற ஆனந்தமே போதுமானதாக இருக்கிறது. மனிதனுக்கு இந்த ஆனந்தங்களுக்கும் மேலானதாக இன்னொரு ஆனந்தம் இருக்கிறது என்று ஓர் உள்ளுணர்வு உறுத்திக் கொண்டே இருக்கிறது. அந்த உள்ளுணர்வின் உறுத்தலால் எல்லா ஆனந்தங்களிலும் கிட்டவேண்டிய நிம்மதி இவனுக்குப் பாதிக்கப் படுகிறது. எனவே இவன் ஆனந்தங்களைத் தேடித் தேடி அலைகிறான். அப்படி அலை

வதால் ஆனந்தங்களைத் தேடுவதையே பிறவியின் நோக்கமாக இவன் கொள்ள வேண்டி நேரிடுகிறது. மனிதப் பிறவியின் லட்சியமே ஆனந்தமாகிப் போய்விட்டது.

அது ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு வகைப்படுகிறது. அது காலத்தினுல் மாறுபடுகிறது. 'மனிதப் பிறவியும் வேண்டுவதே இம் மாநிலத்தே' என்று பாடியவன்கூட உயிர் வாழ்க்கையில் கிட்டிய ஓர் ஆனந்த அனுபவத்தில்தான் இவ்வாறு பிதற்றுகிருனே தவிர, இப்படிப் பிதற்ற வேண்டுமென்பதற்காக நான் பிறந்து வந்தேன் என்று சொல்லவில்லை.

மனிதப்பிறவியின் நோக்கம் இன்புற்றிருத்தல்; எல்லாரும் இன்புற்றிருத்தல்.

கே: மனிதன் ஏன் பொய் சொல்லுகிருன்?

சிட்டிபாபு, சென்னை.

ப: தன் பலவீனத்தை மறைத்துக்கொள்ளவே மனிதன் பொய் சொல்கிருன். எவன் தன்னிடம் பலவீனங்கள் இல்லையென்கிற நிலையை எய்துகிருனே அவனிடம் பொய்யும் இருப்பதில்லை.

★


மதுரையிலிருந்து
வாரந்தோறும்
மலர்கிறது

# குறிஞ்சி

(தேசிய முற்போக்கு
வார இதழ்)

ஆசிரியர்:
ப. நெடுமாறன்

ஆண்டுச் சந்தா ரூ. 12/-
ஆறுமாதச் சந்தா ரூ. 6-50
தனிப்பிரதி 25 காசுகள்

48, மேலமாசி வீதி,
மதுரை-1.



# ஞானரதம்

| விளம்பர விகிதம்: | ரூ. |
|---|---|
| பின் அட்டை (இருகலர்) | 300/- |
| உள் அட்டைகள் ( ,, ) | 250/- |
| ,, ,, (ஒருகலர்) | 200/- |
| முழுபக்கம் | 100/- |
| அரைப்பக்கம் | 60/- |
| கால்பக்கம் | 30/- |

ஒப்பந்த விளம்பரங்களுக்கு
தள்ளுபடி உண்டு

புத்தக விளம்பரங்களுக்கு
தனிச் சலுகை

விவரங்களுக்கு:

நிர்வாகி: ஞானரதம்,
சக்தி இல்லம், சென்னை-36

# காதலர் இருவர்

சிந்திரமௌலி

அவர்கள் இருவரும் ஆழ்ந்து பேச ஆரம்பித்து விட்டனர்.

ஒருவன், மெலிந்த தேகமுடையவனாய், திசை முடிவுகளில் சஞ்சரிக்கும் பார்வையுடன், உணர்ச்சிகளின் பரிபூர்ண ஆளுகைக்குட்பட்ட முகபாவங்கள் கொண்டிருந்தான்.

இன்னொருவன், சற்றே இருண்ட நிறத்தினனாய், ஆரோக்கியமான முகக்கட்டும் உருவ அமைப்பும் கொண்டு, மட்டைகளின் மறைவில் பாளை வெடித்ததைப் போன்று, தன் உணர்வுகளை அடக்கமாகப் புலப்படுத்திக் கொண்டிருந்தான்.

அந்தச் சிற்றூரின் ஒரு வீட்டுத் திறந்த வெளியான மாடியில், பிரம்பு நாற்காலிகளில் அவர்கள் சாய்ந்திருந்தனர். வெள்ளிப் பிறையும் நட்சத்திரக் கோலமும் அவர்களுக்கு விதானம் சமைத்திருந்தன. அவ்வப்பொழுது சிறு காற்று அவர்களைக் கண்மூடச் செய்தது. தொடுவானில் பனைவிளையும், ஆங்காங்கே தோற்றங்கள் மங்கிய புலங்களுமாய் வெவ்வேறு தூரத்துக் காட்சிகள் சூழ்ந்து நின்று சமர்ப்பித்து உரை செய்யும் அவர்களின் அகண்டமான உணர்ச்சிகளைச் செவிமடுக்கும் ஒரு மாபெரும் சபை போன்றிருந்தன.

மிகவும் நுணுக்கமாகவும், பாவ பூர்வமாகவும் தங்களது எண்ணங்களை வெளியிட முயன்று, ஒழுங்காகப் பின்னப்பட்ட ஒரு வலைஞனின் வலையைப் போல விரிந்து பரந்தும், ஆழங்களிலிருந்து அர்த்தங்களைக் கொணர்வதுமான முறையில் வார்த்தைகளை அவர்கள் தேர்ந்து தேர்ந்து பேசியதால், பெரும்பாலும் அவர்கள் உரையாடல் இலக்கண பூர்வமாகவே இருந்தது. இருப்பினும், ஆங்காங்கே கொச்சைகளின் பிரயோகமும் உணர்ச்சித் ததும்பல்களும் கூடி அவ்வுரையாடலை இயல்பானதாக்கின. அதோடு கூட, சற்றுமுன் கண்ணாடிக் கிண்ணங்களில் மாற்றிமாற்றி அவர்கள் பருகிய மதுவின் தீவிரம் வேறு, தங்கள் சம்பாஷணை சாதாரணப் பேச்சு வழக்கிற்குப் புறம்பானதொரு தன்மையில் நிகழ்ந்து கொண்டிருப்பதாகக் கருதி அவர்கள் தயக்கமுறா வண்ணம் தவிர்த்தது.

இருவரில், மெலிந்த தேகமுள்ள அந்த மாதவன் என்கிற இளைஞனே அதிகம் பேசினான்.

வாழ்க்கையின் சன்னிதானத்தில் பிரமிப்புற்று நின்றவன்போல் அவன் பேசினான். அதன் எல்லையற்ற தன்மைகளைக் கண்டு தத்தளிப்

பதுபோல் தடுமாறினான். அதன் சின்னஞ்சிறு நயங்களையும் கூடத் தேர்ந்துணர்ந்து அனுபவித்தான். கடைசியாய் அவ்வப்பொழுது அதன் மெத்தென்ற மடியில் தலை சாய்த்து, தனது மனப்போக்குக்கும் வாய் வார்த்தைகளுக்கும் மகுடம் சூட்டுவதுபோல மௌனமானான்.

சங்கரன் என்பான், இவன் இங்ஙனம் பேசுவதைத் தலையசைத்தவாறோ — அல்லது தலை கவிழ்ந்தவாறோ — உன்னிப்பாகக் கேட்டான். அடிக்கடி இடைமறித்து ஏதேனும் சொன்னான். அவன் சொற்கள் சோர்ந்துபோய் வந்தன. ஆயினும் அவன் முகம், நிறைந்த கன்னங்களும் நெற்றியிற் கலைந்து விழுந்த கேசமுமாய் அழகாயிருந்தது. பொதுவில் இவன் வாழ்க்கையைச் சலித்துக் கொண்டு, தனக்கு அதில் தென்படுகிற வெறுமையுணர்ச்சியைக் குறைபட்டுக் கொண்டான்.

## ஆக்கம்

இவர்கள் சம்பாஷணையின் முக்கியமான பகுதி முத்தொளி வீசும் பிறைநிலவு ஒரு சிறிய கருமேகத் திரளுள் மறையும் அழகை மாதவன் சுட்டிக் காட்டியபொழுது ஆரம்பமாயிற்று.

அதைப் பார்த்துச் சங்கரன் நாடகபாணியாக, "எனது வாழ்க்கையைப் போலவே இதுவும் மறைந்துபோயிற்று" என்றான். சற்று முன்புதான் அவன் மேலும் கொஞ்சம் மது பருகியிருந்தான்.

'வாழ்க்கை' என்று அவன் எதைக் குறிப்பிடுகிறானென்று மாதவனுக்குத் தெரியும். சில சில அம்சங்களையே, அவற்றின்மீது கொண்ட பற்றின் காரணமாக, அல்லது அவையின்றி இருக்க முடியாத பலவீனங்களின் காரணமாக, வாழ்க்கையின் முழு அம்சமாகக் கருதிக் கொள்கிற பொதுப்படையான மனித இயல்பை அவன் அறிவான். இன்னும் சொல்லப் போனால், அவனும் அத்தகைய இயல்புடையவனே. இருப்பினும், இப்பொழுது அவன் மனம், அத்தகைய சோகங்களின் சாயல் ஏதும் இல்லாத ஆரோக்கியமானஒருசிந்தனைப் பாங்குடன் இருந்தது.

"மறைவதுதான் அழகு சங்கரா!" என்றான் அவன். "துடைத்து வைத்தாற் போலிருக்கும் சுத்தமான வானத்தில் நிலவு காயும் போது, அது பட்டப் பகலைப் போலப் பாலொளி வீசலாம். ஆனால், இந்த மாதிரி மாரிக் காலத்து மழை மேகங்களிடையே நிலவு மறைவதில், வெறும் ஒளிப் பிரவாகத்தை விட வேறு எத்தனையோ அழகுகள் இருக்கின்றன!"

அந்த அழகுகள் எத்தகை

யன என்று அப்புறம் மாதவன் விவரித்தான். அது ஒரு மாசற்ற கன்னிப் பெண்ணின் மனத்துறையும் காதல்போன்றது. கருமுகில்களின் ஓரமெலாம் அற்புதமான ஒளிச் சாயைகள் கரையிட்டதால், உலகாயதக் காட்சிகளுக்கெல்லாம் புதுப்பொருளில் உருக் கொடுக்கும் ஒரு கவிஞனின் உள்நோக்கு போன்றது. மேலும் அது, அடங்கிய ரகஸ்யம் போன்றது; பிரத்யக்ஷமாகாத கனவொன்றின் பிரமை போன்றது.

பிறகு மாதவன் நேரடியாகப் பேசினான்.

"உனது அனுபவம் அவ்வாறு அதோடு முடிந்து போனதால், பிரிவு, ஞாபகம் — என்கிற பெருந் திரைகளுக்கப்பால் இருந்து கொண்டு, வாழ்வின் அவலங்களாலும் கஷ்ட நஷ்டங்களாலும் பாதிக்கப்படாத ஒரு துன்பக் கலப்பற்ற காதல் வாழ்க்கையாக இன்னும் எவ்வளவோ காலத்திற்கு அது அற்புதமாய் ஒளி வீசிக் கொண்டிருக்கும் சங்கரா!...... 'உனது எண்ணங்கள் ஈடேறியிருந்தால், கணவன் மனைவியாக நீங்கள் காலமெல்லாம் வாழ்ந்திருந்தால்...' என்கிற ஊகத்தின் இன்பங்கள் ஒருபுறம் இருக்கட்டும்... ஆனால், இத்தகைய திருமணங்களை அனுமதிப்பதில் இன்னும் பூரண வளர்ச்சியுறாத நம் சமூகத்தில், அது—உன் காதல் —அவ்வாறு முடிந்து போனதே, அதன் அழகு காப்பாற்றப் பட்டதுபோல—"

மாதவனது பேச்சின் பின் பகுதிகளையெல்லாம் விட்டு விட்டு, நடுவிலிருந்து ஒன்றைக் கொத்தியெடுத்தான் சங்கரன்.

"துன்பக் கலப்பில்லாத காதல் வாழ்க்கையா?— அப்படியானால் இப்பொழுது நான் அத்தகைய ஒரு காதலையா அனுபவித்துக் கொண்டிருக்கிறேன்? நான் படும் வேதனைகள் உனக்குத் தெரியாதா ...?"

மாதவன் தீர்க்கமாக, "அது தவறு!" என்றான். பின், ஆதரவாய் சங்கரனின் புறம் திரும்பிச் சாய்ந்து அவன் தோளைத் தொட்டான். "உன் காதலின் அழகுகளையெல்லாம் நினைந்து நினைந்து அனுபவிப்பதை விட்டுவிட்டு, நீ வீணாக அதன் துயரங்களையே அதிகப் படுத்திக் கொள்கிறாய்?"

சங்கரன் சிறிது மௌனமாயிருந்தான். அது அவனது அந்தரங்கமான ஆட்சேபனை என்பதை மாதவன் உள்ளூற உணர்ந்து கொண்டான். அதற்கேற்றாற்போல் சங்கரனும் சீக்கிரமே பேசினான்.

"இல்லை........ திடீரென்று அவ்வளவு அநியாயமாக நாங்கள் பிரிந்து போனோம். எங்களுடைய—என்னுடைய அத்தனைக் கோடி உணர்ச்சிகளுக்கும் அப்புறம் எங்கே போக்கிடம்? உன்னைப்போல நான் கவிதைகள் எழுதித் தணித்துக் கொள்ள முடியாது...... மௌனமாய் நினைவதொன்றே விதியாய் நான் ஓர் ஊமை

யைப்போல்திணறிக்கொண்டி ருக்கிறேன்... அதோடு அன்று மதுரையில் நடந்த அந்தச் சம்பவம் வேறு... இவையெல் லாம் துயரங்கள் இல்லையா?''

—இவனுக்கு எப்படிச் சமா தானம் கூறுவது என்று நெற்றியைக் கீறிக் கொண் டான் மாதவன்.

"மதுரைக்கு நான் எதற் காகப் போனேன் மாதவா?" இந்த இடத்தில் சங்கரனின் குரல், உணர்ச்சியின் மிகுதியி ைலோ மதுவின் காரணமாக வோ முற்றிலும் மாறுபட்டு விட்டது. "எந்த விபரீத ஆசைகளின் காரணமாகவும் அவளை நாடி நான் அவ்வளவு தூரம் போகவில்லை......... ஓர் ஆறுதலுக்காக......... பிரிந்து விடுவோம் என்கிற சந்தேகங் கூடத் தோன்றுதபோது நான் கண்டதுதான் அந்த முகம், அதை இப்பொழுது, பிரிந்து விட்டோம் என்கிற நிச்சயத் தின் பெருந்துயரத்தோடுமீண் டும் பார்க்க நினைத்தேன். அதற்காக...... எல்லாவற்றை யும்விட முக்கியமாக, அவள் எழுதிய அந்தக் கடிதங்களை அவளிடமே ஒப்படைப்பதற் காக......ஆனால் அவள் அதை எவ்விதம் அர்த்தம் செய்து கொண்டாள்! முகத்திலடித் தாற்போல் எப்படிப் பேசி விட்டாள்!......சே......இந்தக் கொடுமைகளெல்லாம் துயரங் களில்லையா மாதவா?........."

சற்று அதிகமாகவும், உணர்ச்சிகரமாகவும் அவனது இயல்புக்கு மீறியே பேசி விட்டுச் சங்கரன் சாய்ந்து கொண்டான்.

மாதவன் அவனுக்கு வெகு விரிவாகப் பதில் கூற விரும்பி னன். எனவே கண்ணாடிக் கிண்ணத்தில் மேலும் சிறிது மதுவை ஊற்றிக்கொண் டான். சம்பாஷணைப் போக் கிற்குத் தன்னைவிட அவன் அதையே அதிகம் சார்ந்திருப் பதுபோல் தோன்றிற்று. இல்லையெனில் இவன் விரை வில் சங்கரனின் மனப்பாங் கை அங்கீகரித்து விடுவான் போலும். ஏனெனில் பெரும் பான்மையான நேரங்களில் அவனது அனுபவங்களும் உணர்ச்சிகளும்கூட அத்தகை யனவே.

ஆனால் இப்பொழுது—இது பொய்யுணர்வு என்றும்,மதுத் தன்மையின் நிலையில்லா மாய மென்றும் கணிக்கலாமாயி னும்—அவன் நோக்கு ஒரே ஆனந்த பரவச முள்ளதாயி ருந்தது.

எனவே அவன் பேசினான்: "துயரங்கள்தான் சங்கரா... ஆனால், எந்தத் துயரத்திலும் நீ ஒரு பேரானந்தத்தை அனு பவிக்கக் கற்றுக்கொள்!"

சங்கரன் புருவங்கள் சுருங் கக் கம்மென்றிருந்தது, தான் சொன்னது அவனுக்குப் புரிய வோ அல்லது சரியாய் உறைக் வோ இல்லை என்று மாதவ னுக்கு உணர்த்தியது.

"சற்று யோசித்துப் பார், சங்கரா........" என்று அவன் தன் கருத்தை விளக்க முனைந் தான். கை முதலிய அவயவங்

களின் அசைவுகள் சற்றே தடுமாறிய போதிலும், மாதவன் தான் சொல்லவந்த விஷயங்களை, ராகத்தின் மூர்ச்சனையை முயன்றேனும் பிடிப்பது போல, வரிசையாகப் பற்றிக் கொண்டான்.

"நானும்தான் காதலித்தேன்... அந்தச் சிறிய பெண் ... எனது உணர்ச்சிகளைப் போன்று அவள் ஏட்டிலும் படித்திருக்க மாட்டாள்......... ஆனால் நான் அவற்றை அவளுக்குஅர்ப்பணம் செய்தேன்! வார்த்தை அமைப்புகளின் ஆரம்ப இலக்கணங்களைக் கூடச் சரிவர அறியாத அவளை எனது வார்த்தைகளின் அதி உயரத்தில் வைத்து வழிபாடு செய்தேன்.........

"ஏதேனும் உணர்ந்தாளோ ...... அல்லது அது ஒருவிதச் சலனமோ......நான்அறியேன். அவளும் என்னைக் காதலித்தாள். காதலிப்பதாக, ஓர் அழகான அந்தி மாலையில் கரந்தொட்டுச் சொன்னாள்... ... அவ்வளவுதான். அந்த இடத்திலேயே, அந்த ஆனந்தத்திலேயே நான் இன்னும் தேங்கி நிற்கிறேன்......... பின்னால் எத்தனையோ கசப்பான நிகழ்ச்சிகள் நடக்கத்தான் செய்தன. அதனால் என்ன...!

"அருகே இருந்து என்னை அவ்வாறு பார்த்த அந்தக் கண்கள்...பரந்த இந்த வானத்தின் கீழே ஒருமுறை எனக்குப் பதில் கூறிய அந்த உள்ளம்... இவை நிறுவிய பேரானந்தத்தைச் சிதறடித்து விட்டு என்னுள் நுழையும் சக்தி, உலகில் எந்தப் பெருங் கசப்புக்கும் இல்லை....."

சங்கரன் அமைதியாயிருந்தான்.

"உண்டோ இல்லையோ என்று போக்குக் காட்டி, பின், ஒரு நாள் ஒரு சிறிதே கண்ட எனக்கே இந்த உன்மத்தம்! ஆனால் நீ......... நீ எத்தகைய பாக்கியசாலி! கனவுகள் சூழ்ந்த காதலின் திசைகளை எல்லாம் கண்டறிந்தவன் நீ... ...... அவ்வப்பொழுது எனக்கு நீ தெரிவித்த நிகழ்ச்சிகளையெல்லாம், தொடர்ந்த பல சித்திரங்களாக உனக்கே இப்பொழுது சொல்லிக் காட்டட்டுமா?......"

கண்களை மூடிக்கொண்டு மாதவன் அவற்றைக் கவனப்படுத்திக் கொண்டான்.

"நீ பையல் பருவத்தைக் கடக்கின்ற நிலையிலேயே அவள் உனக்குப் பரிச்சயமாகிறாள்... அதிகாலையில், ஆவி பறக்கும் ஹோட்டலின் முதல் காப்பியைப்பருகிய பின்பு அவளோடு உரையாடிச் செல்லும் அந்த நீண்ட பாதை உனது நித்திய அனுபவம்......... ஆலயத்தில் ஒருநாள், அரையிருளில் பறித்துத் தந்த பவழ மல்லிகைகளைப்போல, அவளது கடிதங்களும் உனது பெட்டியிலே ரகஸ்யமாய் மணம்வீசுகின்றன... தனித்துப் பேசவும் உங்களுக்குத் தாராளமான நேரங்கள் ......... ஒரு பெண்ணின் மனம் என்னும் அந்தரங்க மாளிகையுள் உனது ஆத்மாவே பரி

பூர்ண சுதந்திரத்துடன் பவனி வருகிறது......"

சென்று மறைந்த நிகழ்ச்சிகள் சங்கரனின் கண்முன்னே பொன்னுருக் கொண்டன.

"அதோடு நின்றுவிடு சங்கரா!...... அதுதான் காதல்! நினைவுகள், வாழ்நாள் பூராவும் உலவி வரத் தகுந்த பெரிய பரப்பாய் உனக்கது நேர்ந்திருக்கிறது... அதை விடுத்து, முடிவுகள் என்னும் வாழ்க்கைச் சுவரில் போய் முட்டிக் கொள்ளாதே!...... பார்க்கப் போனால் நீ எவ்வளவு ஆனந்தத்தோடு இருக்கலாம்! உனது டயரியின் பக்கங்களைச் சாகும் வரை அவ்வானந்தங்களால் பொற்கோடிடலாம் ......!" என்றெல்லாம் பேசிய மாதவன், "கலியாணத்தில் முடியாததை உன் காதலின் தோல்வி என்று கருதுகிறாயா?" என்று கேட்டு முடித்தான்.

சற்றுப் பொறுத்து மறுபடியும், "அதுதான் சங்கரா...... எந்தத் துயரத்திலும் ஒரு பேரானந்தத்தை அனுபவிக்கக் கற்றுக்கொள்!" — குடித்திருக்கும் வேளைகளில் அடிக்கடி அவன் 'கூறியது கூறல்' என்னும் குற்றத்தின்பாற் படுவதுண்டு — "அந்தக் கண்கள் உனக்காகத் தாழ்ந்த போதே, அந்த இதழ்களில் உன் நினைவால் ஒரு புன்னகை அரும்பியபோதே, உனது காதல் நிறைவுற்று விட்டது! இதை ஒப்புக்கொள்...... உன் காதலின் நிறைவின் அடையாளம் கல்யாணமல்ல......"

"நீ சொல்கிற தத்துவம் நம்மை நாமே ஏமாற்றிக் கொள்கிற மாதிரி யல்லவா இருக்கிறது?..." எனத் தயங்கிய சங்கரன், "வாழ்க்கையின் நிதரிசனமான அம்சங்களை நீ வலிய வேறுவிதமாய் அர்த்தப் படுத்திக் கொள்ள, அல்லது பாவித்துக் கொள்ளச் சொல்கிறாய்!" என்றான்.

பதிலுக்கு, குளிர்ந்த குரலில் "உனக்கு ஒன்று தெரியுமா? வாழ்க்கையே, நாம் அர்த்தப் படுத்திக் கொள்ளும் விதத்தில் தான் இருக்கிறது. அதற்கென்று தனியாக எந்த அர்த்தமும் இல்லை. எவ்வளவு உயர்வாக முடியுமோ அவ்வளவு உயர்வாக நாம்தான் அதை அர்த்தப்படுத்திக் கொள்ள வேண்டும்........." என்றான் மாதவன்.

பிறகு, "நீ அதை ரஸானுபவமிக்க முறையில் அர்த்தப் படுத்திக்கொள்ள வேண்டுமென்று உனக்கு நான் சொல்கிறேன்... துயரங்கள், துயரங்கள் என்று மொடமொடத்த வெற்றுக் காகிதங்களைப்போல் கசங்கிக் காய்ந்துபோய் இராதே! உலகம் ரஸமயமானது ......... அதோடு நீயும் உருகிப் போய்க் கலந்துவிடு!" என்றான்.

அப்புறம் அவன் இந்த ரஸமயமான உலகத்தின் அழகுகளைப் பேசவாரம்பித்தான்...

"சாலைப் பிரயாணத்தில், வழியிலே எத்தனையோ சின்னஞ் சிறு கிராமங்களைச்சந்திக்

கிறோம். ஏதோ ஓர் ஊர் அல்லது வீடு, யாரோ சிலரின் முகங்கள்—இவை அப்போது நம்முள் அபாரமான உணர்வுகளைத் தோற்றுவிக்கின்றன! அந்த மாதிரி ஊர்கள் ஏதேனும் ஒன்றில் நம் வாழ்க்கையின் கனவுகளை அசை போட்டுக்கொண்டு தங்கிவிடலாமா? ...அந்த வீடுகளோடும் முகங்களோடும் நமக்கு ஓர் உருக்கமான உறவு ஏற்படலாகாதா? ......... இவ்வாறு அவ்வுணர்வுகள் விஸ்தரிக்கின்றன... எத்தகைய சலிப்பிற் கப்புறமும், மேலும் மேலும் இன்பம் ஊறுவதாக வாழ்க்கை அப்போது தோன்றுகிறது......... நீயோ, தேக்கடி முதல் காஷ்மீரம் வரை பார்த்தவன்...... சொல்லப்போனால், இன்னும் கூட நீ எங்கெங்கோ போகலாம்...... அந்தப் பிரயாணங்களில் உன்னுள் இவ்வாறு ஒரு ஜீவரஸம் ஏற்வில்லையா? ......... வாழ்க்கையை இந்தக் கோணத்தில் நீ தரிசிக்கவில்லையா? ........

"சமுத்திரக் கரையிலே உனக்கு என்ன தோன்றுகிறது? அந்தக் கடலின் ரகஸ்யம் என்ன என்பது கவிஞர்களின் புராதன வாக்கு. அவர்கள் அதன் எதிரே அவ்வாறு பிரமிப்புற்றார்கள். ஆனால், வாழ்க்கையின் ரகஸ்யத்தை—தனது கரையிலே ஒவ்வொரு தலைமுறைக்கும் ஒவ்வொரு பேரலையாக வந்து மோதிக் கொண்டிருக்கும் ஜனசமுத்திரத்தின் வாழ்க்கை ரகஸ்யத்தைக் கண்டு, அந்தக் கடல்தான் பிரமிப்புறவேண்டும்... எத்தனை வகையான மனிதர்கள் அங்கு வருகிறார்கள்! குச்சு நாயின் கழுத்துக் சங்கிலியைப் பிடித்துக்கொண்டு கரையிலே நிற்கும் பெரியவர் அடிக்கடி எச்சரிக்க, சிவந்த கணுக்கால்களுக்கு மேலாகப் பாவாடையைத் தூக்கிப் பிடித்தவாறு, அலைகளின் நுரை பரவுகிற இடத்தில் நின்று, தெற்றுப் பற்களின் மோகன அழகோடு சிரிக்கும் அந்தச் சிறுமி......... அவள், யுவதியாகி எதிர்காலத்தில் உல்லாசமாய் வாழ்வது பற்றி நம்முள் ஓர் உன்னதமான ஏக்கம்...... உலக வாழ்க்கைக்கான உண்மையான ஆசீர்வாதங்கள் இத்தகைய உணர்வுகளே அல்லவா?...... அதோடு உருவாகும் கணத்தில் இவ்வுணர்வுகள் நம்மையே நமது கவலைகளிலிருந்து உயிர்ப்பிக்கின்றன அல்லவா?......

"'ஓடக்கரை மண்ணெடுத்து உன்னுருவம் செஞ்சு வைச்சேன்'னு ஒரு நாட்டுப் பாடல் ... சொல்லிப் பார் இன்னொரு முறை...... 'ஓடக்கரை மண்ணெடுத்து உன்னுருவம் செஞ்சு வைச்சேன்'...... ஓ...... என்ன சோகம்! என்றோ எங்கோ மணலைப் பிசைந்தவளின் தாபங்கள் இப்போது இங்கே நம்மைத் தாக்குகின்றன..... காலம், களம்—என்கிற வித்தியாசங்களை வென்று வாழ்க்கையின் உணர்வுகளைக் கொணர்கின்ற இந்த வார்த்தைக் கலை

......இதைச் சிறிது பயின்றால், அப்புறம் அவ்வகையில் எத்தனைக் கோடி இன்பங்கள்!..."

அப்போது, மாடிச் சுவருக்கு அருகிலிருந்து, காற்று அலைக்கழிக்கும் தென்னங் கீற்றுக்களின் ஓசை சலசலவென்று வந்தது. அது அவன் உணர்வுகளைப் பாதித்தவுடன், மெள்ளக் கண்களை மூடிக்கொண்டான் மாதவன். பிறகு அந்தப்புறமாகக் கையை நீட்டிக் கொண்டு, "இதோ பார், இந்த ஓசை எவ்வளவு அருமையாயிருக்கிறது...... அடடா!" என்று ஆனந்தித்தான்.

"இந்த நிசப்தமான இரவில் இந்த நிலா வெளிச்சத்தில், மோனத்திருந்து வையகமே மூழ்கித் துயில்கையில், இந்தத் தென்னையின் ஓசை உனக்கு அதியற்புதமானதாகத் தென்படவில்லையா? எனக்கு இது இம்மதுவினும் வெறியூட்டுகிறது......" என்றான்.

அவனது உணர்ச்சிகளின் மெஸ்மெரிஸத்தில்சங்கரனும், "ஆமாம்!" என்றான்.

"இதை ரஸிப்பதையொத்ததே நான் சொல்கிற வாழ்க்கை நோக்கு! இந்த ஓசை போன்றதுதான் வாழ்க்கையும், காதலும்—அதன் இன்ன பிற அம்சங்களும். எல்லாமே காற்றிலே பறந்து பின் காற்றிலே மறையும் ஒரு கள்ளூறும் கவிதைபோல:....... இது, மறைந்து போகிறதே என்பதில் அர்த்தமில்லை... மிகவும் சொற்பமான அனுபவமேயாயினும், மனிதர்கள் கண்ட முடிவுகள் எல்லாம் சோகமேயாயினும், வாழ்க்கை நெடுக இவற்றின் அழகை மட்டுமே நினைந்து நினைந்து ஆனந்திக்க வேண்டும்......"

ஒரு சரியான புள்ளியில், மாதவன் சங்கரனின் கவனத்தைக் குவியச் செய்தான்.

'எனவே........ எல்லாமே இன்பமயம் சங்கரா! உன் வீட்டுக்கு உனது மனைவியாக அவள் வராதது துயரம்தான்; ஆனால், அகாலமான ஒரு நேரத்தில் உன்னை நம்பி அவள் அந்தச் சரக்கொன்றை மரத்தின் கீழ் வந்தாளே, இந்த நினைவின் இன்பம் அந்தத் துயரத்தை முந்திக் கொள்ளட்டும்...... பெருமூச்சுக்களை உண்டாக்கும் எண்ணங்களைப் பின்னுக்குத் தள்ளி, முறுவலுண்டாக்கும் இனிய நினைவுகளை உன் மன அரங்கின் முன்னணியில் வை!........ எல்லாவற்றிலும் ஒரு பேரானந்தத்தை அனுபவிக்கக் கற்றுக் கொள்!"

சங்கரன் ஒரு குறுஞ்சிரிப்புடன், "என்ன, இன்றைக்கு எல்லாம் ஒரே 'ஆனந்த' மயமாயிருக்கிறது!" என்றான். மாதவன் சிரித்தவாறே, அவன குரலின் கேலியைத் தானும் பகிர்ந்து கொண்டான்.

உணர்ச்சிகளும் கருத்துக்களுமான அந்த இறுக்கமான மனநிலையில், இந்த வேடிக்கை ஒரு சிறிய காற்றைப்போல் வீசியது. ஆனால் மீண்டும் அந்த இறுக்கம் — அவர்கள் பேச்சின் 'ஸீரியஸ்னஸ்' —

உடனேயே அங்கு நிலவிற்று.

அப்புறமாக, "நீ அப்படித் தான் வாழ்கிறாயா?" என்றான் சங்கரன்.

"ஆம்; அப்படித்தான் வாழ்கிறேன். சாதாரண கணங்களில் உன்னைப் போலவே நானும் சஞ்சலப்படுகிறேன். ஆனால், என் உணர்வுகள் அடுக்கடுக்காய்ப் பூக்கிற அபூர்வமான கணங்களில் நான் இப்படித்தான் வாழ்கிறேன் ...... வேறெதையும் விட, அன்று என் கைப்பிடிக்குள் அடங்கிய அந்தக் கரங்களையே வாழ்க்கையில் நான் கண்ட பெரிய வெற்றிகளாக நினைக்கிறேன்... அவள்பால் நான் உற்றது தோல்வியல்ல ...... இப்படி நோக்கும்போது அவள் எனக்குத் தருவது துயரமுமல்ல ..."

"ம்ஹும் ..." என்றான் சங்கரன். பிறகு சற்று இடம் மாறிச் சாய்ந்தான். அண்ணாந்து வானத்தைப் பார்த்தான்.

குறியிடங்களில் பங்கெதறிவது போன்ற இப்போக்கு இத்துடன் நின்று போய், மேலும் அவர்களது சம்பாஷணை அவரவரின் பொதுவான எண்ணங்களின் பரிமாறலாக நீண்டது.

ஓர் இடத்தில், "அந்தக் கடிதங்களை மீண்டும் எடுத்து ..." என்று ஆரம்பித்தான் மாதவன். சட்டென்று, "ஓ ...... அவற்றை நீ எரித்து விட்டாய் ......" என்று அடங்கிப் போனான்.

பிறகு, "அவற்றை எரிக்க உனக்கெப்படி மனசு வந்தது சங்கரா! ...... ஓர் ஆடவனின் காதலிலே பெண்ணொருத்தி எழுதுகிற வார்த்தைகள் ......! அடடா, உனக்கு அவ்வாறு கடிதங்கள் வந்தன! ... ஏழேழு ஜன்மத்துக்கும், அவற்றை எடுத்தெடுத்து வாசிக்கும் இன்பம் மட்டுமே போதுமே சங்கரா!" என்றான்.

"அவற்றை எரித்ததே, நான் எவ்வளவு தூரம் மனம் நொந்து போனேன் என்பதற்கு அடையாளம்!" என்றான் சங்கரன்.

அந்தக் கடிதங்கள் எரிகிற போது ..... அவற்றின் ஜ்வாலையும் புகையும் ...... என்று கற்பனை செய்து கொண்டான் மாதவன். அப்புகையின் குமறலை, வாழ்க்கையின் குமறல் போன்று இப்போது அவன் உணர்ந்தான். அதன் பின் அவனுள் வேறு நினைவுகள் புரண்டன ......

'நாங்கள் இருவருமே இரு வேறு விதங்களில் பாதிக்கப்பட்டோம் ...... இவன் தனது வாழ்வில் சாரமிழந்து வெறுமையுற்றான் ...... வாய்ப்புகளை வைத்துக் கொண்டு, அவை மூலம் அடையத் தகும் வாழ்க்கையையும் வைத்துக் கொண்டு, அவற்றின் பால் பற்றற்றிருக்கிறான் ... நானும், இந்த ஒரு விஷயத்திலேயே — காதல் காதல் என்னும் உணர்ச்சிகரமான, உச்சரிப்பிலேயே — தேங்கிப் போனேன் ...... துயரமற்ற இன்ப நினைவுகளாய் இருந்தால் மட்

டும்தான் என்ன? — ஆனால் உண்மையிலேயே அவை இன்பகரமானவை தானா? — அவள் நினைவுகளினின்றும் என்னால் வெளியேற முடியவில்லை ...... கவிதையின் பன்முகங்கள் இதனால் எனக்குக் கைவரவில்லை ...... நூறு நூறு தொழில்களின் ஓசை மிகுந்த உலகத்தில், நூபுரங்களின் ஒலியை மட்டுமே நான் பாடிக் கொண்டிருக்கிறேன்! ......'

— இந்நினைவுகளின் முடிவில் அவன் சோர்ந்து போனான். உடலிலும் கூட அசதி மிகுந்தது. அப்போது வானில் பிறை நிலவு அஸ்தமித்து, நட்சத்திரங்கள் இடம் பெயர்ந்திருந்தன.

இறங்கிவருகிற குரலில் மாதவன் சொன்னான் :

"போதும்! ...... வேறெதாவது பேசலாம்!"

ஆனாலும் அப்புறம் அவர்கள் எதுவும் பேசவில்லை. வெகு நேரம் மௌனமாக இருந்து, அப்படியே தாறுமாறாக உறங்கிப் போயினர். அந்நிலை, எல்லா உணர்ச்சி விஸ்தாரங்களையும் யாரோ ஓர் அரக்கன் அடித்து வீழ்த்தி விட்டு நிற்பதைப் போல் இருந்தது.

* * *

ஒழுக்கம் சம்பந்தமான கொள்கை நிர்ணயம் ஏதும் இல்லாமல், உணர்வுகள் கிளர்ச்சியுறும் நூதனமான அந்த ஒரே அனுபவத்திற்காக, அவ்வப்பொழுது நிலாச் சோறு போல மதுவருந்தப் பழகிக் கொண்ட அந்த இளைஞர்களின் அன்றைய இரவு இவ்வாறு இருந்தது.

அந்தப் பெண்கள் ...... !

சங்கரன் காதலித்த பெண் ஒரு பெரிய குடும்பத்தின் மூத்த மகனுக்கு வாழ்க்கைப் பட்டிருக்கிறாள். அவன் ஓர் அரசாங்க உத்யோகஸ்தன். தென் மாவட்டங்களில், ஆங்காங்கே சில ஊர்களுக்கு அவ்வப்பொழுது அவனுக்கு மாறுதல் கிடைக்கிறது. அவனோடு அவளது தாம்பத்ய வாழ்க்கையின் போக்கு, அமைதியாகவும் இயல்பாகவுமே இருக்கிறது. இப்பொழுது ஒரு பெண் குழந்தை பிறந்த பிறகு, அது மிகவும் சந்தோஷமாயிருக்கிற தென்றே சொல்லலாம். எப்பொழுதாவது பழைய நாட்களின் கவனமும், சங்கரனின் நினைவும் வருகிறபொழுது அவள் தர்ம சங்கடமுறுகிறாள். அந்தச் சங்கடம், பழைய நிகழ்ச்சிகளால் தன் வாழ்க்கை இனி எப்பொழுதேனும் பாதிக்கப்பட்டு விடுமோ என்கிற அச்சத்தினால் மட்டுமே விளைந்தது எனலாம்.

மாதவன் காதலித்த மற்றொரு பெண்ணுக்கோ, மிகவும் சிறிய பிராயம். அதோடு அவள் நாட்டுப் புறத்தினள். நடைமுறை வாழ்க்கைக்குப் புறம்பான மனக் கற்பிதங்களை அவள் அறியாள். எனவே, ஆரம்ப நாட்களில் அவனது காதலுக்கு அவள் இணங்கினாளாயினும், போகப்போக

அவன் உணர்வுகளின் வேகத்தையும் விசித்திரங்களையும் கண்டு திகைத்துப் போனாள். வாலிபக் குறும்பு இல்லாத, வழிபாடு போன்ற அவன் நடத்தை அவளை வசீகரிக்கவில்லை போலும். திடீரென்று ஒரு கட்டத்தில் மாதவன் அதை உணர்ந்து, விலகிக் கொண்டான். அவளைப் பற்றி அவ்வப்பொழுது பல விஷயங்களைக் கேள்விப் படுகிறானாயினும், இன்னல் கலந்த அழகான அவனது எத்தனையோ முயற்சிகளினால் அவள் மனத்தில் அந்தக் காலத்தில் ஏற்பட்ட அந்த ஏதோவோர் சிறிய உணர்ச்சி, இப்பொழுது மிச்ச சொச்சம் இல்லாமல் முழுக்கவும் மறைந்துவிட்டது என்பதை மட்டும் தீர்மானமாக உணர்கிறான்.

—இந்தப் பெண்களைப் பற்றியே அவர்கள் இரவெல்லாம் பேசினர்.

அவர்கள் பேசுதற்குரிய பிற பிரச்சினைகள் நிறைய இருந்தன. இருவரது வாழ்க்கையிலும் எவ்வளவோ இடர்ப்பாடுகள். சங்கரன் இனிமேல்தான் தனது தனிப்பட்ட வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும். மாதவனுக்கோ, ஒரு பெரிய குடும்பம், மனைவி, வறுமை என்கிற மற்றப் பிரச்சினைகள். ஆயினும் அவர்கள் அவற்றைப் பற்றிப் பேசவில்லை. அப்பெண்களைப் பற்றியே பேசினர்.



# எக்ஸ்—ரே

இரவு.

மரத்திற்கொரு

நெகடிவ் படமாய்

வெள்ளைக்கிளை படர்ந்த

மேகக் கூட்டம்.

கீழே

நிழல் இருட்டில்

கழுத்து நீட்டி

உதிராத நிலவுக்கனி

பார்த்துக்

கலயம் தடவும்

வறுமையின் எக்ஸ்—ரே

படங்கள்

—எஸ். வைதீஸ்வரன்

*

# எங்கோ-யாரோ-யாருக்காகவோ...

## 4

நான் 'பிக்னிக் ஸ்பாட்' தேடினேன். கம்பங்கொல்லைக்கு அப்பால் சற்றுத் தள்ளி ஒரு மேடும் மேட்டின் மீது ஒரு புளிய மரமும் அதனடியில் வட்டமாய் நிழலும் தெரிந்தது.

"அங்கே போய்விடலாம்..." என்று நான் கூறிய யோசனையை நண்பரும் நினைத்தவர் போல் உடனே ஒப்புக்கொண்டார்.

காரிலிருந்து ஜமுக்காளத்தை நான் எடுத்துக் கொண்டேன். காரின் கண்ணாடிகளை உயர்த்தி கதவுகளை அடைத்துக் காரைப் பூட்டிக் கொண்டு அவர்களின் பின்னால் தொடர்ந்தேன். வயலின் வரப்புகளில் நண்பர் முன்னாலும் அவருக்குப் பின்னே அவளும், கடைசியில் நானுமாக-போகிற காட்சியை நானே சற்றுத் தள்ளி நின்று பாத்து மிகவும் விஷமமாய் ராமன் சீதை லட்சுமணன் மூவரும் கானகத்தில் நடக்கிற காட்சியைக் கற்பனை செய்து சிரித்துக் கொண்டேன். என்னுடைய குறும்புத்தனத்துக்காக நானே என்னைக் காதை முறுக்கித் தலையில் ஒரு குட்டு வைத்துக் கொள்ள வேண்டுமென்று தோன்றியது.

அவள் போகும்போது திரும்பித் திரும்பி என்னைப் பார்த்துச் சிரித்து கொண்டே நடந்தாள்.

"உங்க பேரு என்னான்னு கேட்டேனே — சொல்லவே இல்லையே ..." என்று அவள் பேச்சுக் கொடுத்தாள்.

நான் பொய்யாக ஒரு பேரைச் சொன்னேன். நண்பரைக் கேட்டாள். அவரும் அதேமாதி ஒரு பொய்யைச் சொன்னார்.

"உன் பேர் என்ன?" என்றார் நண்பர்.

"கமலா" என்றாள் அவள். அவளும் பொய்தான் சொல்லுகிறாளோ என்று எங்கள் புத்திக்குப் பட்டது; எனக்கும் பட்டது. நண்பருக்கும் அப்படித்தான் பட்டிருக்க வேண்டும். சரி, எப்படி இருந்தால் என்ன? அவள் எதற்காகப் பொய் சொல்லப் போகிறாள்? நாங்கள் ஏன் சொன்னோம்?...

"ஆமா உன்னை அந்த ஆளு அவன்தான் உன்னை இட்டாந்துட்டவன் வந்து எங்கே காணோமேன்னு தேடமாட்டானா?" என்று கேட்டேன் நான்.

"ம்... தேடட்டுமே... காத்தாலே என்னெப் போட்டு எப்பிடி மாட்டை அடிக்கிற மாதிரி அடிச்சான் தெரியுமா?... அவங் கையிலே கட்டை வெக்க...... பாவி..." என்று மனம் குமுறிச் சபித்தாள் அவள்.

"நீ எதனாச்சும் வம்பு பண்ணி இருப்பே...... புருசன்னா அடிக்க மாட்டானா? அதுக்காக நீ இப்பிடி திட்டலாமா" என்றேன் நான்.

அவள் அங்கேயே—வரப்பில் எனக்கு முன்னால் நடந்து கொண்டிருந்தவள்—என் பக்கம் திரும்பி நின்று தனக்கு நடக்கிற கொடுமையை முறையிட ஆரம்பித்து விட்டாள்.

அவள் கண்கள் கலங்கிக் கண்ணீர் வழிய நின்று அழுது கொண்டே சொன்னாள்:

"நீங்களே சொல்லுங்க...... நா சண்டைக் காரியா, வம்பு தும்பு பண்றவளான்னு எங்க தெருவுலே வந்து கேளுங்க... இந்த ஆம்பளையெ நம்பிப் புத்தி கெட்டுப்போயி ஓடியாந்துட்டவ தான் நானு ... எனுக்கு யாருமில்லே ... நானு ஒரு அநாதி ... உன்னை நம்பி ஓடியாந்ததனாலே நானு அநாதி ஆயிட்டேன் ...... ஆருமில்லாதவளாப் பூட்டேன் ...... அப்பிடி வந்துட்ட ஒரு பொண்ணெ நீ என்னா மாதிரி வெச்சிக்கினு இருக்கணும் ...... உனக்குப் பொண்டாட்டி இருக்கா ...... புள்ளக்குட்டிக இருக்குது — மக்க மனுஷாளுங்க இருக்காங்க ...... இருக்கட்டும். நானு வேணுண்ணு சொல்லலே ...... உன்னோட ஓடியாறப்போ நானு காதிலே ஒரு சோடி கம்மலு, கழுத்திலே ஸெயினு எல்லாம் போட்டுக்கினு இருந்தவ ...... தோ சம்பளம் வாங்கி மூட்டுத் தரேன்னு வாங்கிக்கினு போயி வட்டிக் கடையிலே வெச்சி வருஷம் ஒண்ணாச்சி — கடைசியிலே வாயிலே போட்டுக்கினே ...... தாலிகட்டிக்கின உன் பொண்டாட்டி தருவாளா? கேட்டிருக்கியே ...... தந்திருக்காளா? ...... ஊருக்கு வெளியிலே ஒரு குடிசையிலே என்னைக் குடுத்தனம் வெச்சிருக்கே ...... ஒரு பித்தளை சாமான் கெடையாது ...... ரெண்டு நாளா பட்டினி கெடக்கறேன், செத்தாளா இருக்காளான்னு கூட உனுக்கு நெனைப்புக் கெடையாது. ராத்திரியிலே ஏதாவது பொம்பளை நெனைப்பு எடுத்துக்கினா அதுக்கு மட்டும் ஓடி

யாறே — அப்பமட்டும் நான் நான் 'ஊம்' குடுக்கணும். இல்லேன்ன அடிக்கிறே ... பொம்பிளையாப் பொறந்துட்டவ அவன் எப்ப வந்தாலும் ஆசையா பாஷமா இருக்க வேண்டியது தான் ...... நானு இல்லேன்னலே ...... நீ ஒரு ஆம்பளே; இன்னைட்டா சாப்பிட்ளாளா? சோருக்கனளா? நாம்பகாசி குடுக்கலியேனு நெனைக்காட்டி அப்பறம் நீ இன்ன ஆம்பளெ? ராத்திரி வந்தே-சத்தியமா சொல்றேன் நேத்துக் காத்தாலே ரெண்டு இட்லி வாங்கித் துண்ணது தான் ...... நீங்க பிச்சாண்ட பாக்கறப்ப 'மல்லாட்டபயிறு' துண்ணுகினு இருந்தேனே ... அவ்வளவுதான்...... வவுறு எரியுது" என்று பசியினாலும் வாழ்வு முறிந்து போன வருத்தத்தாலும் இதை யெல்லாம் ஒரு பிச்சைக்காரி மாதிரி சொல்ல நேர்ந்து விட்ட அவமானத்தாலும் மனம் குமுறி அழுதாள். முகத்தை முந்தானையால் மூடித் துடைத்துக் கொண்டாள். எனக்கு அவளைப் பார்க்க மிகவும் பரிதாபமாக இருந்தது ......

"சரி சரி ... அழாதே! வா. அங்கே போயி உக்காந்து சாப்பிடலாம்" என்று சமாதானப்படுத்திக் கூப்பிட்டேன்.

நண்பர் அதற்குள் அந்தப் புளிய மர மேட்டு நிழலுக்குப் போய் நின்று கொண்டு ஒரு சிகரட்டையும் புகைத்துக் கொண்டு ஜாலியாகக் காற்று வாங்கியவாறு நின்றிருந்தார்.

அவருக்கு, நாங்கள் நடு வழியில் நின்று ஏதோ 'ரொமான்ஸ்' பண்ணுகிறோம் என்று நினைப்பு.

"அவுரைப் பாருங்களேன் சாப்படறதுக்குத் தயாராப் போயி நிக்கிறாரு......" என்று கையை உயர்த்தி நண்பர் நின்றிருந்த இடத்தைக் காட்டி அவள் சிரித்தாள். இன்னும் இமைகளில் படிந்த கண்ணீர் உலரவில்லை என்பதை மட்டும் நான் கவனித்தேன். அதற்குள் இவளால் எப்படி சிரிக்க முடிகிறது!

தன்னைப் பற்றி ஒளிவு மறைவில்லாமல் எல்லா விஷயங்களையும் - தான் இரண்டு நாட்களாகப் பட்டினி கிடக்கிற விஷயத்தைக்கூடச் சொல்லி விட்டதால் அவள் என்னிடம் மிகவும் சொந்தம் பாராட்டுகிற முறையில், அல்லது சொந்தம் ஏற்படுத்திக் கொள்ளுகிற முயற்சியில் என்னைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமென்று கேட்டாள்.

"உங்களுக்குவூடு மெட்ராஸ் தானா?"

—"ம்......"

"கல்யாணம் ஆயிடுச்சா! ஆயிருக்கும்—கொழந்தெங்க இருக்கா? எம்மாம்? ......

"மூணு கொழந்தைங்க இருக்கு ...... ரெண்டு பொண்ணு, ஒரு பையன்" என்றேன்.

"எனுக்குகொழந்தெங்கன்னா ரொம்ப ஆசை. சின்னச் சின்னப் பசங்கதானே?...பள்ளிக்கூடம் போறதுங்க தானே?...

நா உங்ககூட வந்துடட்டா?" என்று பேசிக்கொண்டே நடந்தவள் மறுபடியும் திரும்பி என்பக்கம் முகம் பார்த்து நின்றுகொண்டு கேட்டாள்:

அவள் முகம் மிகவும் அனுதரவாய் பரிதாபமாய் மாறிக் கண்கள் கெஞ்சின.

"நெசந்தான்...என்னை இட்டுக்கினு பூடுங்க—பட்டணத்துக்கு. உங்க வூட்லே நான் வேலை செய்யிறேன். கொழுந்தெங்களெ பாத்துக்கிறேன்... ரெண்டு வேளை வவுத்துக்கு உங்க வூட்லே மீந்ததெப் போட்டீங்கனு போதும்—என்ன—வந்துட்டமா?" என்று கெஞ்சினுள்.

எனக்கு என்ன சொல்வதென்று புரியாமல் தர்ம சங்கடமாய் இருந்தது.

"அவுருக்குதான் உன்மேலே ரொம்ப இஷ்டமா இருக்குது. அவுரையே கேளு. அவுரு தான் கல்யாண மாகாத ஆளு. வூட்லே அவுங்க அம்மா மட்டும் தான் இருக்காங்க. வேலைக்கின்னு கொண்டு போயி வெச்சுக்க முடியுமான்னு கேக்கறேன். எங்க வூட்லே சந்தேகப் படுவாங்க" என்று நான் விளக்கினேன்.

"நீங்க சொன்னீங்கனுத்தான் அவுரு கேப்பாரு......" என்று மிகவும் சாகசமாகச் சிரித்தாள் அவள்.

புளிய மரத்து மேட்டுக்கு வந்ததும் நான் கையிலிருந்த ஜமுக்காலத்தை விரிக்கப் போனபோது அவள் அதை என்கையிலிருந்து வாங்கித் தரையைத் தட்டிச் சுத்தம் செய்து ஒழுங்காக விரித்து வாட்டர் ஜக்கை நடுவில் வைத்து, சாப்பிடுவதற்காகப் பொட்டலங்களையும் வைத்து எங்களை அழைத்தாள்:

"வாங்க—உக்காருங்க" என்று ஒரு குடும்பத் தலைவி விருந்தாளிகளை உபசரிப்பது மாதிரி அழைத்தாள்.

"நீயும் உக்காரு" என்று நண்பர் அவள் கையைப் பிடித்திழுத்துத் தன் பக்கத்தில் நெருக்கமாக அமர்த்திக் கொண்டார்.

"முதல்லே கள்ளு சாப்பிடுங்க" என்று பிளாஸ்க்கைத் திறந்து பிளாஸ்டிக் தள்ளரில் மொண்டு "ஒரு கிளாஸ் தான்" இருக்கு...ஆரு முதல்லே சாப்பிடுறீங்க?" என்று கேட்டு இருவருக்கும் பொதுவாக நீட்டினுள்.

"எல்லாத்திலேயும் ஃபர்ஸ்ட் அவுருக்குத் தான்"... என்று நண்பர் கண்ணைச் சிமிட்டிக் கொண்டு அவளை என் பக்கம் தள்ளினுர். அவள் வெட்கத்தோடு தலை குனிந்த வாறு பிளாஸ்டிக் தம்ளரை நீட்டினுள். நான் அதை வாங்கி ஒரே மூச்சில் மடக் மடக்கென்று குடித்தேன். கள்ளின் நெடியும் புளிப்பும் நெஞ்சில் கரகரத்தது... அவள் அவசர அவசரமாய் உணவுப் பொட்டலங்களில் ஒன்றைப் பிரித்து ஒரு மீனை—முள் நீக்கிக்கொஞ்சம் எடுத்து என்கையில் வைத்தாள். கள்ளின் புளிப்பு நெடிக்கு அந்தக் காரம் சுவை

யாய் இருந்தது.

"நீ சாப்பிடு முதலில்" ...... என்று பிரித்த பொட்டணத்தை அவளிடம் தள்ளி வைத்தேன்......

"ஃவ் ஹர் டாடி" என்று நண்பர் அவளுக்கும் கள் தருமாறு என்னிடம் சொன்னார்.

நான் அவரிடம் ஆங்கிலத்தில் "அவள் சாப்பிட்டு இரண்டு நாளாகிறதாம். முதலில் அவள் சாப்பிடட்டும்" என்று சொன்னேன். நண்பரின் முகமே மாறி விட்டது. ஆனால் என்னிடம் அவள் தனிமையில் ரகசியமாகச்சொன்னதைத் தான் அறிந்து கொண்டதாகக் காட்டிக் கொள்ளக் கூடாது என்ற பண்போடு நண்பர் அவளைச்சாப்பிடுமாறு மட்டும் சொன்னார்.

"ஏதாவது சாப்பிடும்மா ... உம்...இந்தா..." என்று இன்னொரு பொட்டணத்தையும் எடுத்துத் தந்தார்.

"இருக்கட்டுங்க ... சாப்பிடுவோம். எங்கே பூடுது ..... நீங்க இதெ சாப்பிடுங்க. சாப்பிடத் தானே வந்திருக்கோம்" என்று மிகவும் கௌரவமாகச் சொல்லி அவருக்கும் கள்ளை மொண்டு கொடுத்தாள்.

நண்பர் அவளுக்கு அதை 'டோஸ்ட்' சொல்லி ஒரு பெண்ணின் கரத்தால் கள் குடிக்கிற பாக்கியம் கிடைத்த இந்த நாளை நான் என்றும் மறக்கமாட்டேன்" — என்று கூறிக் குதூகலமாய்க் குடித்தார்.

— இன்னும் வரும்.

★

## பிழை — திருத்தம் :

சென்ற இதழ் முன்னேட்டத்தில் 'விழாவுக்கு திரு. கே. வி. சுப்பையா தலைமை வகித்தார் என்று அச்சாகி இருப்பது தவறு. தலைமை வகித்தவர் திரு. வி. எஸ். சுப்பையா ஐ. ஏ. எஸ். ஆவார்கள்.

— ஆசிரியர்.

## அன்பின் நீதி!

அன்பில்லையேல் நல்லறிவு என்பதில்லை.<br>
நல்லறிவில்லையேல் கனிவு என்பதில்லை,<br>
கனிவில்லையேல் நேர்மை என்பதில்லை.<br>
நேர்மையில்லையேல் புரிந்து கொள்வது என்பதில்லை<br>
புரிந்து கொள்வதற்கில்லையேல் இலக்கை<br>
அடைவதற்கு மில்லை.<br>
நீதியும் இல்லை.

# 'வானமுதம்'

விண்ணலை மூலம் இன்னமுதக் கீதங்கள்!

புதன்கிழமை, வெள்ளிக்கிழமை ஆகிய இரு நாட்களிலும்
மாலை 6-45 முதல் 7-00 மணி வரை

## இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்பு

மூலம்

## சென்னை கிறிஸ்தவக் கலை - தொடர்பு நிலையம்

தயாரித்தளிக்கிறது

கேளுங்கள்! தேனினுமினிய கிறிஸ்தவ கீதங்கள்!
எழுதுங்கள்! உங்கள் கருத்தினை எங்களுக்கு எழுதுங்கள்

மற்றும்

# 19 மீட்டர் மூலம்

**அனுதினமும் மாலை 7-00 மணி முதல் 7-30 மணி வரை ஆங்கிலம்**
**மாலை 7-30 மணி முதல் 7-55 மணி வரை தமிழ்**

வானொலி நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுகின்றன.

உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் இனிய கீதங்கள்!
சிந்தனையைத் தூண்டிவிடும் சீரிய கருத்துரைகள்!
எழுத்தோவியர்கள் தரும் சிறப்புமிகு நாடகங்கள்!
நேயர் விருப்பம்! பேட்டிகள்! அறிவுப் போட்டிகள்!
அத்தனையும் உங்களுக்காக தினமும் ஒலிபரப்பப்படுகின்றன.

மற்றும்

## கிறிஸ்தவக் கலை - தொடர்பு நிலையம்

ஏராளமான பொருட்செலவில், பிரம்மாண்டமான முறையில்

தயாரித்துள்ள

# "நான் பெற்ற இன்பம்"

நாட்டிய நாடகம்

ஒரு மணி நேரத்திற்கென கிறிஸ்தவ கீதங்களுக்கான நடனங்கள், இன்னிசை நிகழ்ச்சி, ஆங்கில இசை நிகழ்ச்சி நடத்த விரும்புவோர் எங்களுடன் தொடர்புகொள்ளுங்கள்.

முகவரி:
இயக்குநர்,
**கிறிஸ்தவக் கலை - தொடர்பு நிலையம்**
3, எல்டாம்ஸ் சாலை, சென்னை-18.

# யுகசந்தி

கு. நா. சுப்ரமண்ணியம்.

இது ஜனநாயக யுகம்—அதனால் வாசகனுக்கு ஒரு முக்கியத்துவம் ஏற்பட்டிருக்கிறது என்று பலரும் நினைக்கிறார்கள். அது உண்மையில் அப்படியில்லை. உலகில் முதல் எழுத்தாளன் தோன்றிய முதலே வாசகர்களின் முக்கியத்துவமும் தொடங்கிவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் இன்று பழைய காலத்திய முக்கிய இலக்கியாசிரியர்கள் என்று கருதப்படுபவர்களில் பெரும்பாலோர் வாசகர்களை மறந்துவிட்டு, தன் பாட்டில், எழுதியவர்கள்தான். வாலி வதத்தைப் பற்றியோ, விபீஷண சரணாகதி பற்றியோ இன்று வரை ஏற்பட்டுள்ள வாசக விவாதங்களை வால்மீகி என்கிற கவிமட்டும் கேட்டு அவற்றை-யெல்லாம் மனத்தில் கொண்டு தன் காரியத்தை அமைக்க முயன்றிருப்பாரேயானால், அவர் காவியம் முற்றுப்பெறாமலே தான் இருந்திருக்கும் என்று சொல்லலாம். ஆனால் வால்மீகி மகரிஷி என்று சொல்லித் தப்பித்துக்கொள்ள முடியாது. இன்று எழுதுகிற ஒவ்வொருவருமே மகரிஷிதான்; சந்தேகமில்லை.

இலக்கியாசிரியன் தன் வாசகனை எந்த அளவுக்கு நினைவில் கொண்டு தன் படைப்புகளைச் செய்கிறான் என்பது விவாதத்துக்குரிய விஷயமாகும். நினைப்பதேயில்லை என்பதிலிருந்து, ஏதோ கொஞ்சம் லேசாக நினைவிருக்கும் என்பதுவரை சொல்லலாம். ஆனால் இலக்கிய சரித்திரத்தில் காணக்கிடக்கிற ஒரு உண்மை தப்ப முடியாததாக இருக்கிறது-எந்தக் காலத்தில் வாசகன் முக்கியத்வம் உச்சகட்டத்தை எட்டுகிறதோ அந்தக்காலத்தில் இலக்கிய சிருஷ்டி ஓரளவுக்குத் தரம் குறைந்ததாக இருப்பது தெரிகிறது. உதாரணமாக சமஸ்கிருத இலக்கியத்தில் 9, 10 நூற்றாண்டுகளில் கவிக்குத் தருகிற அளவுக்கு வாசகனுக்கும் முக்கியத்துவம் தந்து, அந்த வாசகன் கவியேபோல, சில சமயங்களில் கவியையும் விட முக்கியமானவன் என்று அவனுக்கு ஸஹ்ருதயன் என்று பெயர் தந்து பாராட்டினார்கள். இதற்கு ஓரிரண்டு நூற்றாண்டுகளுக்குள்ளாக, சமஸ்கிருத கவிதையே க்ஷீணமடைந்து தரங்குறைந்து தேய்ந்து ஒடுங்கிவிட்டது என்பது சரித்திர உண்மை.

வாசகனே இல்லாவிட்டால் இலக்கியம் எதற்கு. ஏது என்று சொல்பவர்கள் இருக்கலாம். வாசகன் இல்லாத நிலையோ, முக்கியத்வம் பெறாத

நிலையோயல்ல விஷயம். சர்வ ஆதிக்கமும் வாசகனுடையதாக இருப்பதற்கும், சர்வ ஆதிக்கமும் எழுதுபவன் கையிலேயே என்று இருப்பதற்கு இடை நிலையில் ஒரு இடம் இருக்கவேண்டியதுதான் லக்ஷிய நிலை என்று சொல்ல வேண்டும். 'வாசகனை மனத்தில்கொண்டு, வாசகனை நாடி எழுதுகிற இலக்கியாசிரியர்களை விட, வாசகனை மனதில் கொள்ளாத, எவனுக்கெந்த கலை இருக்கிறதோ படிக்கட்டும், சர்வ ஜன ரஞ்சகமானது என்று ஒரு தரம் இலக்கியத்திலேயே கிடையாது என்று நினைக்கிறவனே நல்ல இலக்கியாசிரியனாக இருக்கவேணும்—இருந்துவந்திருக்கிறான் என்று சொல்லவேண்டும்.

“பொதுவாக இதெல்லாம் சரி. உன் கதைகளையோ, உன் நாவல்களையோ, உன் கவிதைகளையோ, உன் விமர்சனக் கட்டுரைகளையோ பற்றி உனக்குள்ள (அது ஒன்றரையே அரைக்காலோ, அல்லது இருநூறோ) வாசகன் என்ன நினைக்கிறான்—அவன் நினைப்பது பற்றி நீ என்ன நினைக்கிறாய்?” என்று கேள்வி கேட்கப்பட்டால், என்னால் நிதானித்து ஒரு பதில்தான் சொல்ல முடியும். “அது அப்படியொன்றும் விவரிக்கக்கூடிய உறவு அல்ல. வாசகனுக்கும் எழுத்தாளருக்கும் உள்ள உறவு வார்த்தைகளுக்கு அகப்படாது” என்று சொல்லத் தோன்றுகிறது. இருந்தும் அதையும்தான் சற்றுச் சொல்லிப் பார்க்கலாமே என்று நினைத்து குறிப்புக் காட்டுகிற மாதிரிதான் வாசகர்கள் சிலருடன் கடித மூலமாகவோ நேரடியாகவோ தான் நடத்திய சம்பாஷணைகள் என்னை என்ன நினைக்கத் தூண்டுகின்றன என்பதைச் சொல்லுகிறேன்.

மதுரையிலிருந்து ஒரு வாசகர் மணி மணியான எழுத்துக்களில் சுதேசமித்திரன் வாரப் பதிப்பில் என் ஒவ்வொரு கதையும் வெளிவந்தவுடன் பாராட்டி “ஆஹா அற்புதம்! பிரமாதம்” என்றெல்லம், ஒரு தபால் கார்டில் அடங்கக்கூடிய அளவில் எழுதுவார். இந்தக் கடிதங்களுக்கெல்லாம் முக்கியத்துவம் தரப் போதுமான அறிவு எனக்கில்லை. என் மனைவி அவற்றைத் தொகுத்து பத்திரப்படுத்தி வைப்பாள்; இன்னமும் வைத்திருக்கிறாள் என்று எண்ணுகிறேன். இந்த அன்பரின் பெயரை வெளியிட எனக்கிஷ்டமில்லை:—ஏனென்றால் இன்று அவர் தன்னைப் பிரபலமான எழுத்தாளராகக் கருதிக்கொண்டிருக்கிறார். ஒரு விசேஷம் என்னவென்றால்—அவர் பிரபலமாகத் தொடங்கிய தேதியிலிருந்து எனக்குக் கடிதம் எழுதுவதை நிறுத்திவிட்டார். இந்த ஒருவர் தன்னுடைய ஸஹ்ருதயர் என்று நான் இவர் எழுதிய கடிதங்களை வைத்து ஏற்றுக்கொண்டால் நான் எழுதுபதன் தொடக்கம், நான் எழுதுகிற பாணி, இலக்கியம்பற்றி

என் கொள்கைகள் எல்லாவற்றையுமே மாற்றியமைத்துக்கொள்ள வேண்டிவரும். அதற்கு நான் தயாரில்லை. அதற்காக இந்த வாசகர் தான் நம்பாததை சொன்னதாகவும் நான் கருதவில்லை. ஏதோ சொன்னார்—கார்டு எழுத வசதியிருந்தது அவ்வளவுதான். அவருடைய கையெழுத்தைப் பார்த்து நான் பொறாமைப் பட்டதுண்டு என்றும் சொல்ல விரும்புகிறேன்.

இன்னொருவரிடமிருந்தும் எனக்கு அந்த நாட்களில் அடிக்கடி கடிதம் வரும். நாவல், கதை, எது எழுதினாலும் அதைப்பற்றித் தீர்க்கமாக விவாதித்து இது சரியென்று எனக்குத் தோன்றுகிறது—இது சரியல்ல என்று எண்ணுகிறேன் என்று எழுதுவார். அவர் கடிதங்களுக்கு நான் பதில் எழுதியதில்லை—ஆனால் அவர் அதற்காக எழுதுவதை நிறுத்திவிடவில்லை; எழுதிக்கொண்டேயிருந்தார். ஆனால் பின்னர் சற்றுக் காலதாமதமாக அவரே ஏதோ நாவல், கதை ஒன்று எழுத ஆரம்பித்த பிறகு, அவர் சரியல்ல என்று எனக்குச் சொன்ன பாணியைப் பின் எழுதுகிறார் என்று கண்டு, அவரைச் சந்தித்தபோது அதுபற்றிக் கேட்டேன். "உண்மை" என்று ஒப்புக்கொண்டார். ஆனால் ஏன் அப்படி என்று சொல்ல அவருக்குத் தெரியவில்லை.

என் வாசகர்கள்பற்றி இது போதும் என்று எண்ணுகிறேன். ஆனால் பொதுவாக விமர்சனக் கட்டுரைகள் எழுதும்போது தான் மனத்தில் வைத்துக் கொண்டுதான் எழுதுகிறேன். "நீங்கள் அழிக்கும் விமரிசனம் ஏன் எழுதுகிறீர்கள்? ஆக்க விமர்சனம் செய்யக்கூடாதா?" என்றுதான் விமர்சனம் எழுத ஆரம்பித்த காலத்தில் பல வாசகர்கள் என்னைக் கேட்டதுண்டு. அதற்கு ஒரே பதில்தான் உண்டு. "அழிக்கப்பட வேண்டியது அதிகமாக இருக்கும்வரை அழிக்கும் விமரிசனம் செய்தேதான் தீரவேண்டும். ஆனால் ஆக்க விமரிசனம் இல்லாமல் அழித்தல் விமரிசனம் என்று ஒன்று கிடையாது. இலக்கிய விமர்சனத்தில் ஒரு நோக்கில் அழிப்பதும் ஆக்குவதும் ஒன்றே" என்றுதான் பதில் தரவேண்டும்.

மற்றப்படி கவிதை, சிறுகதை, நாவல் என்று எழுதுகிறபோது நான் எழுதியதை எந்தச் சுண்டைக்காய் வாசகன் ஏற்றுக்கொள்ளுவான் என்பதுபற்றி எனக்கு நினைப்பு இருப்பதில்லை. தான் இன்று கவிதை என்று எழுதுவதை, கம்பனும் இளங்கோவும் டாண்டேயும் ஷேக்ஸ்பியரும் இன்று இருந்தால் ஏற்றுக்கொள்வார்களா என்பதுதான் என் நினைப்பு. நிகழ்கால வாசகன் அறிவால், ஆற்றலால், அரசியலால் அவர்களை விடச் சிறந்தவனாக இருக்க

லாம்—ஆனால் இலக்கியத் தரத்தால் எந்த வாசகனும் எந்தக் காலத்திலும் எட்டாத ஒரு தரத்தையே பழங்கால, நிகழ் கால, வருங்கால எழுத்தாளர்கள் எல்லாம் எட்ட முயலுகின்றனர். அந்தத் தரம் ஒரு சரடு—அதைக் கண்டுகொள்ளத்தான் நம் பொது ஸீரியஸ் எழுத்தாளனும், தரமுள்ள இலக்கியாசிரியனும் முயலுகிறான். அந்தத் தரத்தை வாசகர்கள் தேடிக் கண்டுகொள்ள வேண்டும்.

இன்றைய வாசகர்கள் தேடத் தயாராக இல்லை. ஆனால் அவர்கள் தேடுவது அவர்களுக்குக் கிடைக்கும்.

★

# தேவை

ஞானரதத்திற்கு ஏஜண்டுகள் இல்லாத ஊர்களுக்கு பிரதி ஒன்றுக்கு ரூபாய் ஒன்று வீதம் முன் பணம் கட்டக் கூடிய விற்பனை ஏஜண்டுகள் தேவை விவரங்களுக்குத் தொடர்பு கொள்ளுங்கள் :

நிர்வாக ஆசிரியர்,
ஞானரதம்
சக்தி இல்லம், சென்னை-36

# அன்னை

ஒரு தாய் தன் மகனுக்காகச் செய்யும் தியாகத்திற்கு ஒப்புவமை கூற இயலாது. எதன் மூலமாகவும் அதை ஈடு செய்யப்படவும் முடியாது. அதனால் அவளுக்குச் செய்ய வேண்டிய கடமையை அதிகபட்சமாக, முடிந்த அளவு, செய்வது ஒவ்வொரு தனி மனிதனுக்கும் கடமையாகிறது. அவனுக்காக அவள் பட்ட துன்பங்களுக்காக, உயர்ந்த பட்ச கருணையுடனும், மரியாதையுடனும், விருப்பத்துடனும், அர்பணிப்புடனும் அது செய்யப்படவேண்டும். வேதங்கள்கூட அவளுக்கு அத்தனை பெரிய மரியதையையும் தகுதியையும் அளித்துள்ளன.

— ‘ டுருத்புல் நியூஸ் ’



# வருக ரதம் வருக

வேறு எந்தத் தமிழ்ப் பத்திரிகையையும் படித்துக் கிடைக்காத அனுபவமும், அறிவுத் தெளிவும் தங்களின் நான்கு 'ஞானரதம்' இதழ்களின் மூலம் கிடைக்கிறது. இதுபோன்ற தரமுள்ள சஞ்சிகைகள் பத்து இருந்தால் கூடப்போதும்; அறியாமை இருள் நீங்கி, சமுதாய விழிப்புணர்ச்சி ஏற்பட்டுவிடும்.

எம். கே. எஸ். உமர் பாரூக், இளையாங்குடி

நான் எல்லா தமிழ்ப் பத்திரிகைகளையும் காசு கொடுத்து வாங்கிப் படிக்கிறவன் என்றாலும் எதிலும் உறுப்பினராகியதில்லை. அந்த எண்ணமும் வந்ததில்லை. அதே போல், அவைகளைப் படித்தபின் சேர்த்து வைக்கவும் நினைத்ததில்லை. ஆனால் ஞானரதம் அந்த என் தவத்தைக் குலைத்து விட்டது.

முத்துவேந்தன், சென்னை—8

ஞானரதம் 2ம் 3ம் இதழ்கள் இலங்கையில் கிடைத்தன. ஆனால் முதலாம் இதழ் கிடைக்கவில்லை. தயவு செய்து முதலாம் இதழொன்று அனுப்பி உதவுமாறு வேண்டுகின்றேன். இலக்கிய உலகில் உங்கள் துணிச்சலானபடைப்புக்களைச் சமர்ப்பிக்கிறீர்கள். உங்களது இலக்கியப் பார்வையை அனேகமாக நான் விரும்புகிறேன். படைப்பிலக்கியம் சம்பந்தமாக நீங்கள் தத்துவப் பிறழ்ச்சி செய்வதாக எழும் கூக்குரல் பிழையானதென்பது எனது முடிவு. இது பற்றி நான் ஒரு கட்டுரையே எழுதியிருக்கிறேன். இதை இங்கு வெளிவரும் ஜீவாவின் "மங்கை"யில் தான் எழுதுவதென எண்ணியுள்ளேன். ஞானரதம் இன்னும் இங்கு பரவரியாக விற்பனையாகவில்லை. கொழும்பில் தான் விற்பனைக் குண்டு. ஞானரதத்திற்குச் சந்தா செலுத்துமாறு 'வாசகர் வட்டத்தைக்' கேட்டெழுதினேன். என்னவாயிற்றோ தெரியாது.

ஏ. இக்பால், தர்காடவுன், இலங்கை

காண்கின்றேன். ஆனாலும் என் மனதிலே ஒரு சிறு எண்ணம் தோன்றி மறைகின்றது.

[இலங்கை வாசகர்கள் தங்கள் சந்தாக்களை (ரூ. 6/...) ஞானரதத்தின் இலங்கை ஏஜண்டான "முத்தையா அன்கோ, 104/13, சங்கமிட்டா மாவட்டா, கொழும்பு — 13" என்ற முகவரிக்கு அனுப்பி அங்கிருந்தே பிரதிகளைப் பெற்றுக் கொள்ளலாம் — நிர்வாக ஆசிரியர்.]

ஞானரதத்தின் நல்ல அம்சங்களுக்கு என் பாராட்டுதல்கள். அவற்றைப் படைப்பவர்கள் நீடு வாழ வேண்டும்— இன்னும் நிறைய எழுதுவதற்காக.

இறுதியாக ஒன்று சொல்லிக் கொள்ளலாமா? 'உண்மையைத் தேடும் எழுத்தை விட உயர்ந்த இலக்கியம் இல்லை' என்பது உண்மையாயின், உள்ளத்து உயர்வுக்கு வழி காட்டும் சுடர் தான் உண்மை என்பதும் உண்மை தான்.

—மானிடன், சென்னை-5

நான்காம் இதழில் சுயவிமரிசனம், அழைப்பு, ஆகிய கதைகள் மிக அருமையாக உள்ளன. மன்னிக்கப்படாத பாவங்கள் பரவாயில்லை. பாக்ஸரின் 'ரிங்'கில் மாட்டிக் கொள்ளாமல் பழைமை வாதிகள் தப்ப முடியாது போலிருக்கிறது. கவிதைகளில் பெண் துயில் சிறப்பாக இருக்கிறது. ஆசிரியரின் கவிதைகளில் 'காலை வரப்போகிறது' எனத் தொடங்கும் கவிதை நாட்டுப்பாடல் போல நயமாக அமைந்துள்ளது. முகப்புக்கவிதையில் "உணர்வில்லா உடலின்பம் ஓசையில்லாச் சங்கீதம்" என்ற வரிகளில் கவித்துவம் வெளிச்சமாக இருக்கிறது. அட்சயவயிறு என்ற சொற்களும், அக்கவிதையின் இறுதி இரண்டு வரிகளும் கயமையின் இதயத்தில் இழுக்கப்பட்ட சூடாகத் தெரிகிறது. மற்றும் முன்னேக்கு, பின்னேக்கு, உரத்த சிந்தனை, சிந்தனைச் சிதறல் ஆகியவை சிறப்பாக உள்ளன. ஞானரதத்தில் பவனி வரும் கவிதைகளில் இன்னும் மெருகு வேண்டும். ஏனென்றால் இந்த ரதத்தில் வெ. சாமிநாதன் போன்ற மிகச் சிறந்த திறனாய்வாளர்கள் அமர்ந்திருக்கிறார்கள்.

—இரா. சீனிவாசன், சென்னை-10

வாசகர்கள் பலர் இலக்கியப் பசியெடுத்து அலைகின்ற இவ் வேளைதனில், பசிக்கு ஏற்ற நல்லமுதுணவாக, ஞானரதமெனும் இலக்கியத் திங்களிதழ் விருந்தூட்டிப் பசி போக்கி மகிழ்விக்க, நல்ல படைப்புடனே, வாசகர்கள் கையில் இடம் கொண்டு வாசகர்களை மகிழ்விப்பதைக்

அதுதான் பல இலக்கிய திங்களிதழ்கள் வெளிவந்து சில தினங்களுக்குள் மறைந்து போனதைக் கண்ட என் மனத்திலே இச்சிறு எண்ணம் தோன்றி மறைகிறது. இவ்விதழ் இன்னும் இலக்கியக் கருத்துக்களுடன் வெளிவந்து வாசகர்களிடையே நல்லெண்ணத்தை வளர்க்குமாக. அதற்கு ஆண்டவன் அருள் கிட்டுமாறு வேண்டுகிறேன்.

மா. சுப்ரமணியன், திருமழபாடி

கதைகளில் சுயவிமர்சனமும் அமைப்பும் சிறு கதைகள் என்று சொன்னலும் 'மன்னிக்கப்படாத பாவங்களை' நிச்சயம் சிறு கதை (அழுத்தமாக Force ஆக) எனலாம்.

"கலை உணர்வோடும், இலக்கியப் பிரக்ஞையோடும் எழுதுகிற படைப்பாளிகளின் எழுத்துக்கள், சமூக ஒழுக்கத்தையோ, தனி மனிதப் பண்புகளையோ கெடுத்து விட மாட்டா" என்ற வல்லிக்கண்ணன் அவர்கள் வார்த்தை பெரிய எழுத்தில் இருந்திருக்க வேண்டும்.

ஜே. கே. அவர்களைச் சந்தித்த போது அவர் கூறினர். Man is a maker of Problems. Therefore the problems are eternai. அதற்கு Problems மையமான கதைகளையே எழுதுகிறேம் என்றார். ஆனல் அவர் தொடர் கதையில் Problem இன்றி ordinary expansion style இருக்கிறது [எங்கோ — யாரோ — யாருக்காகவோ] என்னைப் பொறுத்த வரை அவர் குறு நாவலை மீறி தாண்டாமல் இருப்பது நல்லது என்பேன். காரணம் அவரின் சிறு கதை, குறு நாவல்களின் வன்மை தொடரில் இருப்பதில்லை.

—இளம்பிறையன், திருப்பத்தூர்

ஞானரதம் நான்காம் இதழ் கண்டேன். தங்களுடைய முன்னேட்டமும், எட்டுக் கவிதைகளும் மலருக்கு அழகூட்டின. மன்னிக்கப்படாத பாவங்கள் சிறு கதை என்னைப் போன்ற கத்தோலிக்க கிருஸ்தவ மக்களுடைய உள்ளத்தைக் கலங்க வைத்தது. அதிர வைத்தது ...... அழவும் வைத்தது ......இதனைப் பிரசுரித்தது சரியென்று சொல்லுவதா அல்லது தவறென்று சொல்லுவதா என்று எனக்கே தெரியவில்லை.

எஸ். சிலுவை அந்தோனிப்பிள்ளை, உடுமலைப் பேட்டை

எஸ். டி. போஸ் எழுதிய மன்னிக்கப்படாத பாவங்கள் சிறு கதையைப் படித்தேன். மிகவும் மகிழ்ந்தேன். பாவமும் பாசாங்கும் எங்கிருந்த போதிலும் அவைகள் கிழித்தெறியப் பட வேண்டியவைதான். ஆமாம் அது கிருஸ்துவ மதத்தில் இருந்தாலும் கூட! சிறப்புக்குரிய இந்தச் சிறு கதையை படைத்ததற்காக ஆசிரியரையும், வெளியிட்டதற்காக உங்களுடைய துணிச்சலையும் நான் நிச்சயமாகப் பாராட்டித்தாக வேண்டும்.

எஸ். ரெனி அரவிந்தன்
கோயமுத்தூர் 1

ஞானரதம் நான்காவது இதழ் கண்டேன். இதழ் சிறப்பாகத்தான் இருந்தது. நாங்கள் Bind செய்து வைத்துக் கொள்ளப் போகும் விஷயம் தெரிந்தும் ஏனோ இவ்வளவு இலேசாக வெளியிட்டீர்கள்.

முன்னோட்டம் மிகச் சிறப்பாக இருந்தது. அதில் எனக்குப் பிடித்த வரிகள்.

“இலக்கணத்தை மீறுங்கள், இலக்கணத்தை உடையுங்கள். ஆனால் அதற்கு நீங்கள் உபயோகிக்கும் ஆயுதம் உங்களுடைய அறியாமையாக இருக்க வேண்டாம்” ஆகியவைகளாகும்.

—ரா. தேவதாசன், சென்னை-44.

கடந்த இரண்டு மாதங்களாக தங்களது ஞானரதத்தின் மூலம் ஓர் புதிய தமிழ் இலக்கிய உலகில் பிரவேசித்திருக்கிறேன். தாங்கள் தமிழில் சமைக்க இருக்கும் ஓர் புதிய இலக்கிய முயற்சியை ஆவலுடன் எதிர்பார்க்கும் நான், முறைப்படி தமிழ் கற்றவனோ அல்லது ஆழ்ந்த தமிழறிவு உடையவனோ அல்ல. ஆனால் வங்க மககளிடத்திலே காணும் மொழியுணர்வு, கலை, இலக்கியப் படைப்புக்களில் முன்னேற்றத்தைக் காணும் தருணம், நம் மொழியில் அத்தரப்பட்ட உணர்வும் ஆக்கத்தையும் என்று காணப்போகிறோம் என்ற ஆர்வத்துடன் தான் தங்களுடைய எளிய முறையில் தொடங்கியிருக்கிற பத்திரிகையை ஆதரிக்க விரும்புகிறேன். இது நாள் வரை தங்களைப் போல் பல எழுத்தாளர்கள் பத்திரிகை ஆரம்பித்து பல இன்னல்களுக்கு உட்பட்டுள்ளார் ... .. ஆதலால் தாங்கள் தங்களுடைய பத்திரிகையை நடத்திச் செல்ல இருக்கும் நடையை ஆவலுடன் இலக்கிய அன்பர்கள் கவனித்து வருவார்கள்.

— தி. சுந்தரராமன், கல்கத்தா.

I find that 'Gnanaratham' is a Vehicle for immoral sex. What inspiration is to be deduced from the Poem

“பத்தினிக் கதைகள்
படிப்பீரே !—உம்
மச்சினி கிடைத்தால்
விடுவீரோ ?”

Apart from such anti-social ideas I do not find any stimulating article. On the whole I regret to state it was a disappointment. I hope you wlll not mind my remarks.

—Mr. M. R. Chandrasekaran,
Kothayar.

I find Gnanaratham not wholly readable, but infinitely more readable than most other magazines. When I read those poems, I was positively dazed. I never knew that minds potent enough to read and understand such poems existed in this country. Those of us who have been sufficiontly exposed to other kinds of thoughts; who have not been bogged down by the local sermonizers, who have not become mediocrities, have to be thankful to you for

bringing such forces to light.

— N. Kalyana Raman, Madras-5.

Pure translation of Vivekananda's speech add a tint of artificiality to the "Shadanas" by Selvi. Otherwise, it causes a shudder and a spiritual thrill through the veins of the reader and twitches each and every nerve with its forceful impetus and magnetic impression. Who can replace a word uttered by thats piritual giant? Who can mark a feeble point in his brilliant and eloquent expression? Who can so eminently expound such a splendid philosophy in a flow so gentle? The undying truth which vivekananda took for his final resort conquers the time! In Selvi's hand, it gets a new light and fresh taste.

— I. S. Fernando, Madurai-1.

★

# பேரிழப்பு

## நண்பர் : கு. அழகிரிசாமி

இப்போது இல்லை என்பதை நம்மால் நம்ப முடியவில்லை. ஆனால் அந்த பேரிழப்பு நேர்ந்து தான் விட்டது. தமிழில் தனக்கென்று ஒரு தனி இடத்தை ஸ்தாபித்துக்கொண்ட மிகச் சில படைப்பிலக்கிய கர்த்தாக்களுள் ஒருவர் கு. அழகிரிசாமி. இந்த வயதுக்குள் அவருடைய இலக்கியச் சாதனை நிச்சயமாக குறைவற்ற நிறைவுதான். வாழ்க்கையை பாதியிலேயே முடித்துக்கொண்ட அவர் தன் இலக்கியச் சாதனையை பாதியாக விட்டுச் சென்று விடவில்லை என்பது நிறைவளிக்கும் விஷயமே.

கு. அழகிரிசாமியின் "யுகசந்தி" ஞானரதத்தில் வெளிவருவதற்கு இரண்டு தடவைகள் முயற்சி எடுத்துக் கொண்ட போதிலும் கூட அவருடைய உடல் நலக்கோளாறு ஒத்துழைக்காததால் இரண்டு தடவையும் தள்ளிப்போடப்பட்டு விட்டது. அது நிரந்தரமாகவே தள்ளிப் போடப்பட்ட ஒன்று என்று அப்போது நமக்குப் புரியவில்லை. நண்பர் அழகிரி சாமியின் பிரசுரமாகத எழுத்தோவியம் ஏதும் இருப்பின் அவற்றை ஞானரதத்தில் வெளியிட முயற்சிக்கப்படும். நண்பர் அழகிரி சாமியின் துணைவியாரும் குழந்தைகளும் ஆறுதல் கூற முடியாத சோகத்தில் இருக்கிறார்கள். அவர்களுக்கேற்பட்டுள்ள இந்த இழப்பின் சுமையை குறைக்கும் பொறுப்பு தமிழகத்தினுடையதாக இனி இருக்கும்.

—ஆசிரியர் குழு

# ஞானரதம்

சந்தாதாரராக நீங்கள்

ஆகிவிட்டீர்களா?

★

ஆண்டுச் சந்தா ரூ. 5

ஆயுள் நன்கொடைச் சந்தா ரூ. 50

★

உங்கள் சந்தாக்களை அனுப்பவேண்டிய முகவரி:

நிர்வாக ஆசிரியர்:

**ஞானரதம்**

**சக்தி இல்லம், சென்னை-36.**

UNEMARA PUBLIC LIBR